தென்கோடியில் ஒரு

சமுதாயப்புரட்சி



டாக்டர் இரா. பொன்னு

தென்கோடியில்
ஒருசமுதாயப் புரட்சி

வைகுண்ட சுவாமிகளின் இயக்கம்
பற்றிய ஒரு கண்ணோட்டம்

டாக்டர்: இரா. பொன்னு

தென்குமரி வெளியீடு
நாகர்கோவில் - 629 001.

முதற்பதிப்பு: மே 1987

அச்சிட்டு வெளியிடுவோர்:
தென்குமரி அச்சகம்,
நாகர்கோவில் -629 001

விலை: ரூ. 9/

வைகுண்டர் வழியில்

புதியதோர் உலகம்

காண விரும்பும்

அன்புள்ளங்களுக்கு

உள்ளடக்கம்

அய்யா துணை



புனிதகுரு
பால. பிரஜாபதி அடிகள்
சுவாமிதோப்பு

ஆசியுரை

வரலாற்றினை நிலைப்படுத்த எழுதும் எழுத்தாளர்களை விட வரலாற்றை மாற்ற முனைபவர்களே முந்திக்கொள்கின்ற இக்கால உலகில் இரா. பொன்னு அவர்கள் வித்தியாசமானவர்; அடிப்படை உண்மையை வெளிப்படுத்தி வரலாற்றினை தருவதில் வேறுபாடுகளுக்கோ, சார்பு நிலைகளுக்கோ இடமளிக்காதவர். உண்மை தாமதமாக வெளிப்படினும் நின்று நிலைப்பது அதுவே. ஆம்! உண்மைக்கு உரைபகரும் சத்திய வரலாறு படைக்கும் அன்பர்தம் இவ்வரிய பணிக்கு வாழ்த்து நல்கிட வேண்டிய தேவையில்லைதான். ஏனெனில் பகவான் வைகுண்டரின் ஆசி நிச்சயம் என்றென்றும் அவர்க்கு உண்டு

'வைகுண்ட சுவாமிகள் வாழ்வும் வழிகாட்டலும்' என்ற நூலைத் தந்து வைகுண்டர் நெறிக்கு அணிசெய்த அன்பர் 'தென்கோடியில் ஒரு சமுதாயப் புரட்சி' எனும் இந்நூலை வழங்கியுள்ளார். சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டு பயிர் வளர்த்த வைகுண்டர் நெறிக்கு இந்நூல் மேலும் அணி செய்யும் என்பதில் அடியேனுக்குச் சிறிதும் ஐயமில்லை. நூல் சிறக்க, நூற்பயன் பெருக, ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இன்னும் பல நூல்களை அளித்து வைகுண்டர் நெறி பரப்பவேண்டுகின்றேன். நூல் வெளியிடுகின்ற தென்குமரிப் பதிப்பகத்தாரையும் நெஞ்சாரப் பாராட்டி வைகுண்டர் தாழ்பணிந்து வாழ்த்துகிறேன்.

பால. பிரஜாபதி அடிகளார்.

என்னுரை . . .

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாரத மக்களிடையே மேற்கத்தியம் ஏற்படுத்திய விழிப்புணர்வில் காலத்திற் கியைந்த சமுதாயம் காண சீர்திருத்தப் பெரியார்கள் சிலர் தோன்றினர். வட இந்தியாவில் பிரம்ம சமாஜம் கண்ட இராஜா ராம்மோகன்ராய் சமூக, சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு 'நவீன இந்தியாவின் விடிவெள்ளி' யென புகழாரம் சூட்டப்பட்டு இந்திய வரலாற்றில் அதிகமாகவே கூறப்படு கின்றார். அதே காலக்கட்டத்தில் தென்கோடி முனையில் சமுதாய சீர்திருத்தப் பணியில் திட்டமிட்டு செயலாற்றி சமுதாய புனரமைப்பில் முனைந்து நின்றவைகுண்டசுவாமிகள் பற்றியோ, அவரது இயக்க நடவடிக்கைகளைப் பற்றி யோ இதுகாறும் அந் நூற்றாண்டைய இந்திய வரலாற்றில் இடம் பெறச் செய்யாதது வருத்தத்திற்குரியதாகும்.

பாரத நாட்டுமக்களிடம் போதிய வரலாற்று ஆர்வம் இல்லாமையும், பல்வேறு வரலாற்று சான்றுகளை சரிவர பாதுகாக்காமையும், சாதியநெறியிலான சமுதாயத்தில் ஏற்றதாழ்வுகளுக்கு இடமளித்து, 'தனித்துவத்தை' ஒரு சிலரிடம் நிலை நாட்டியமையும், இன, மொழி, மாநில அடிப்படையில் பற்றினை வளர்த்து வேறுபாடுகளை அதிக மாக்கிக் கொண்டமையும் தேசிய கண்ணோட்டத்தில்வரலாற்-றினைப் படைக்கின்ற போது சில குறைபாடுகளுக்கு இடம் அளித்து விடுவதால் வைகுண்ட சுவாமிகள் இயக்கத்திற்கு இந்திய வரலாறு தனது பக்கங்களில் உரிய இடம் அளிக்க தவறியிருக்கலாம். மேலும் மானிட சமுதாயத்தின் நிலைத்த நலன் கருதி, சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம், சகிப்பு தன்மை நெறிகளை புகட்டிய மகான்களைவிட, அரசியல் ஆதிக்கப் போட்டியாளர்களே அதிகமாகச் சித்தரிக்கப் பட்டமை தற்போதுதான் ஓரளவு மாற்றம் கண்டுள்ளது. தவிரவும், அரசியல் ஆதிக்கப் போட்டியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பக்கபலமாக இருந்த மேட்டுக்குடியினர்

சீர்திருத்தம், சமத்துவம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவினரிடம் எவ்வித சமூக உறவுகளையும் வளர்த்துக்கொள்ள விரும்பாத நிலையில், வரலாற்று ஆக்கங்களை அளிப்பதில் ஏக உரிமையையை மரபு வழிக் கொண்டிருந்த மேட்டுக்குடி வரலாற்றாசிரியர்களுக்கு இவ் விதமான இயக்கங்கள் முக்கியமாகத் தோன்றாமை வியப் பன்று. எனினும் மக்களாட்சி தத்துவமும், சமதர்ம கோட் பாடும் முன்னிலை வகிக்கின்ற இக்கால நிலையிலாவது வைகுண்ட சுவாமிகள் நடத்திய சமுதாய இயக்கம் போன்ற-வைகளுக்கு சமூக வரலாற்றில் உரிய இடமளிப்பது இன்றி யமையாததாகும்.

சக நூற்றாண்டைய சீர்திருத்தச் செம்மல்களினின்று மாறுபட்டு, வைகுண்ட சுவாமிகள் தனதியக்கத்தை முழுக்க முழுக்க ஒரு பாமரர் இயக்கமாகவே அரங்கேற்றினார். சாதி மேலாதிக்கத்திற்கும், பழமையினை நிலை நாட்டி வர்க்க பேதங்களை வளர்ப்பதில் துணைநின்ற ஆளும் வர்க்கத்-திற்கும் எதிராக ஒடுக்கப்பட்ட சமுதாயத்திலிருந்தே புரட்சி முழக்கமிட்ட சுவாமிகள், உண்டுறங்க நீதியற்று, தட்டிக் கேட்க நாதியற்று தடுமாறிய மக்களின் தளபதியாய்ப் பொறுப்பேற்று, தாழ்த்தப்பட்டவர்களாக ஒறுக்கப்பட் டோரின் உரிமைகளை நிலை நாட்டுவதில் போர்க் கோலம் பூண்டு இயக்கப்பணி ஆற்றினார். அன்பு நெறி புகட்டிய ஓர் அறப்போராட்டமாக-எல்லார்க்கும் எல்லாமும் எனச் சமத்துவம் நிலைநாட்ட எழுந்த ...மைப் புரட்சியாக புரை யோடிய தீ நெறிகளை அகற்றிச் சமுதாய நலன்பேணும் முற்போக்கு இயக்கமாக சுவாமிகளின் இயக்கம் அமைந்தது. ''ஒரே சாதி ஒரே சமயம் ஒரே கடவுள்'' என அவர் எழுப்பிய ஓங்காரம் பின்னாளில் குருமொழியாக திருவனந்த புரம் அருகே எதிரொலிக்கலாயிற்று.

''வைகுண்ட சுவாமிகள் வாழ்வும் வழிகாட்டலும்'' என்ற நூலைத் தொடர்ந்து, சுவாமிகளின் இயக்கம்பற்றிய எனது இரண்டாவது நூலாக இவ்வாக்கம் வெளி வருகிறது. இதில்

இடம்பெறுகின்ற கட்டுரைகளுள் பெரும்பாலன 1983 முதல் 1986 வரையிலாக **முந்திரிபதம்** ஆன்மீக இதழில் வெளிவந்தவையாகும். சுவாமிகளின் சீர்திருத்தங்களுள் சிலவற்றையும், இயக்கத்தின் சிறப்பியல்புகள் பற்றியும் இந்நூல் தெளிவுபட ஆய்கின்றது.

இம்முயற்சியில் உறுதுணையாக நின்ற, குறிப்பாக, ஆய்வுப்பணியில் எனது குருவாக விளங்குகின்ற டாக்டர் பா. சோபனன் அவர்களுக்கும், ஆசியுரை நல்கிய புனித குரு பால. பிரஜாபதி அவர்களுக்கும், ஊக்கமூட்டிய முத்திரி பதம் ஆசிரியர் திரு. நா. அமலன் அவர்களுக்கும், நூல்சிறப்புற அமைய உறுதுணை நின்ற பேராசிரியர் கா.ச. சடகோபன், பேராசிரியர் இரா. ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்க்கும், நூல்வெளிவர பல்லாற்றாலும் உதவிய பேராசிரியர் ப. இரவிச்சந்திரன் அவர்களுக்கும் நூலை சிறந்த முறையில் அச்சிட்ட தென்குமரி அச்சகத்தார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

இரா. பொன்னு.

1

அவதாரம்

இந்திய சமுதாய அமைப்பினில் சமயமும் சாதியும் மேலாண்மை செலுத்தியதால் அவ்வப்போது ஏற்பட்ட அதிருப்தி நிலையினூடே சமுதாயச் சீர்திருத்த செம்மல்களும் சமயப் பெரியார்களும் தோன்றித் தங்களின் எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெவ்வேறு வழிகளில் காட்டினர். மேட்டுச் சாதியாரிடமிருந்து ஒதுக்கப்பட்ட மக்களின் நலன் பேணிட அவர்கள் முயற்சிகள் மேற்கொண்டமை வரலாற்றுப் பக்கங்களில் நிரம்பவே கூறப்பட்டுள்ளன. கிறிஸ்து சகாப்தம் தொடங்குவதற்கு முன்னரே சாதியமுறையின் அரங்கேற்றத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றத்தில், தனி உரிமை வர்க்கமாக ஒரு பிரிவினர் உருவாகிய வேளையில், பெரும்பான்மையோர் தாழ்வு நிலைக்குத் தள்ளப்பட்டனர். சமயஅறிவும், சடங்குகளும், புனித நூற்களும் ஒரு சிலரின் ஏகபோக உரிமையாக்கப்பட்டன. மேட்டுச் சாதியார் ஏற்படுத்திய சமய எல்லைக்குள் பெரும்பாலோர் அனுமதிக்கப்படவில்லை. மந்திரங்களும் தந்திரங்களும் புரியாத புதிராக்கப்பட்டன. செலவுமிக்க சமயச் சடங்குகளை நடத்திப் பொருளாதாரச் சுரண்டல் தலைதூக்கியது. கர்மம் என்றும் ஞானம் என்றும் பல்வேறான மார்க்கங்கள் மேட்டுச் சாதியினரிடம் பவனிவர, எம்மார்க்கமும் அறியாது தத்தளித்த ஏராளமான மக்களை வழி நடத்த வந்த கௌதமரும் மகாவீரரும் பௌத்தமும் சமணமும் கண்டு தனி உடைமைவர்க்கத்தின் ஏதேச்சதிகாரப் போக்கிற்கு எதிராக அமைதியான முறையில் ஒரு அதிரடித் தாக்குதலை நடத்திக் காட்டினர். எனினும் பௌத்தமும் சமணமும்தனிஉடைமைவர்க்கத்தின்வளர்ச்சிக்கு

ஒரு தற்காலிகத் தடையாக இருந்தனவே தவிர, அரசியல் சூழ்நிலையின் மாறுதலில் தனிஉடைமைவர்க்கம் மீண்டும் ஆதிக்கம் செலுத்தியதைத் தடுத்திடமுடியவில்லை. ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெறுவதில் முனைந்து நின்ற தனி உடைமைவர்க்கம் கி. பி. நான்காம் நூற்றாண்டில் வெற்றி பெற்று, வேறுபாடான சமூக சமயக் கோட்பாடுகள், அமைப்புகள் மூலமாகத் தனது நிலையினை ஸ்திரப்படுத்திக் கொண்டது.

இடைக்காலத்தில் இஸ்லாம் இந்திய ஆட்சி பீடத்தில ஏறிய பின்னர், அதன் அதிவேக வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையிலும், இஸ்லாமின் தாக்கத்தால் ஏற்பட்ட அதிருப்தி நிலையிலும் தாய்சமயத்தில் நிலவிய மூடப் பழக்க வழக்கங்களையும், காலத்திற்கொவ்வா சமய, சடங்காசாரங்களையும் எதிர்த்துக் குரல் எழுப்பிய சமய பெரியார்கள் தங்களின் தாய்ச் சமயத்திற்கும் இஸ்லாமிற்கும் இடையே இணைப்பேற்படுத்திச் சிற்சில சீர்திருத்தங்களை செய்திட முயன்றனர். எனினும் அவர்களின் சீர்திருத்தப் பணியில் சாதிய அமைப்போ அல்லது தனி உடைமை வர்க்கத்தின் ஆதிக்கமோ ஆட்டம் காணவில்லை. பூசாரிகளின் உதவியின்றி, எவ்விதச்சமயச் சடங்குபசாரங்களுமின்றி, மந்திரங்களின் ஒலியின்றி ‘பக்தி’ மூலமாகவே முக்தியடைய வழிகாட்டப்பட்டாலும், சமய வாழ்வில் நிலவிய தனிஉடைமை வர்க்கத்தின் மேலாண்மையினை ஒழித்திட இயலவில்லை. மாறாக, புதிய சமயப் பிரிவுகளாய்ப் பரிணமித்துச் சாதிய முறையினை மேலும் விரிவுபடுத்திடக் காரணமாய் அமைந்து விட்டது. இஸ்லாமின் ஆதிக்கத்துக்கு வெளியே விஜயநகரமும், மராத்தியமும் சுய அரசுகள் ஏற்படுத்தியதின் விளைவாகத் தாய்ச்சமயம் தற்காத்துக் கொள்ளப்பட்டதே தவிர, சமுதாயத்தில் ஏற்கனவே ஊடுருவிவிட்ட தீவினைகளை அகற்றிட முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. பிரிவினைகளில்

பின்னிலைக்குத் தள்ளப்பட்ட பின்னரும்கூட தகுந்தபாடத்தினைக்கற்கத் தவறிய தாய்ச்சமயவாதிகள் தங்களின் பிற்போக்குக்கொள்கையை விட்டுவிட்டு மாறிவரும் அரசியல், சமூக, சமய சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ளும் மனமாற்றம் அடையவில்லை. மாறாக, தங்களின் பழமையினைப் பற்றுறுதியுடன் கொண்டு செல்வதில் தீவிர மாகவே இருந்தனர். ஏராளமான அரசியல் பிரிவுகள், சமுதாயப்பிரிவுகள், சமயப்பிரிவுகள் என பல்வேறு நிலைகளில் பிளவுபட்ட நாட்டில் வியாபாரத்திற்கு வந்தவர்கள்கூட வேந்தர்களாகிடும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

ஆங்கிலேயர்களின் ஆட்சி இந்தியாவில் ஏற்படுத்தப் பட்டதின் விளைவாகப் பொருளாதாரச் சுரண்டல் நடை பெற்ற போதிலும், சிலபல நல்ல மாறுதல்களுக்குக் காரண மாகவும் இருந்தது. இந்திய மண்ணில் பவனிவந்த மேற்கத்தியக் கல்வி மேனாட்டவரின் அரசியல் கோட்பாடுகளை மட்டும் கொண்டு வராமல் சமுதாயக் கருத்துக்களையும் கொண்டு வந்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் அனைத்தும் இந்திய மக்களுக்குப் புதியதோர் விழிப்பு நிலையினை ஏற்படுத்தின. தவிரவும், இந்தியச்சமுதாயத்தில் மண்டிக் கிடந்த இருளை நீக்கிப் புதிய சமூக, சமய வாழ்வினை ஏற்படுத்திட அழைப்பு விடுத்தன. மறுமலர்ச்சி எனச் சொல்கின்ற அளவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல சீர்திருத்த இயக்கங்கள் தோன்றினாலும், அந்நூற்றாண்டைய இயக்கங்கள் மேட்டுச்சாதியினர்க்கு சார்புடையன வாகவே அமைந்தன. இயக்கங்களைத் தலைமை தாங்கி வழி நடத்தியவர்களுள் பெரும்பான்மையோர் உயர் மட்டத்திலுள்ளவர்களாகவே இருந்ததால் அவர்களது சீர்திருத்தங்களில் பெரும்பாலானவை வெறும் அலங்காரத்துக்குத்

தான்; அவைகள் ஒவ்வொன்றும் முதலிரண்டு சாதியினரைத் தவிர வேறு எவரையும் தீண்டிடவில்லை.[1]

நடுவண் காலத்தில் இஸ்லாமின் அச்சுறுத்தல் எங்ஙனம் பக்திமார்க்கத்திற்குக் காரணமாக அமைந்ததோ, அது போன்றே ஆங்கிலேய ஆட்சியில் சாதிய அமைப்பில் கீழ் நிலையில் வைக்கப்பட்டவர்கள்—சமய நிலையில் ஒதுக்கப் பட்டவர்கள் மத்தியில் அமோக ஆதரவுடன் கிறிஸ்தவம் வளர்ச்சியடைந்து தாய்ச்சமயத்தின் அடித்தளத்தை உலுக்கிய வேளையில் மேட்டுக்குடியினர் விழிப்படைந்து, மீண்டும் தங்களுக்குள்ளே ஒரு சமூக, சமயப்புனரமைப்புப் பணியினை நடத்திக் காட்டினர். நவீன இந்தியாவின் விடிவெள்ளி யாகப் போற்றப்படும் ராஜாராம்மோகன்ராயோ, ஆரிய சமாஜ தயானந்த சரஸ்வதியோ தங்களின் இயக்கத்தை ஒரு பாமரர் இயக்கமாக்கி நடத்தமுன்வரவில்லை;வேதநெறியைப் புகட்டியவர்கள் மக்களின் வேதனைகளைக் களைய முயற்சி மேற்கொள்ளவில்லை; இறை ஒருமையை வலியுறுத்தியவர் கள் மானிட ஒருமைப்பாட்டைக் காத்திடத் தயாராக வில்லை; மேட்டுச் சாதியினரிடம் ஏற்படுத்திய தாக்கத்தைப் பாமரர்களிடம் ஏற்படுத்த இவ்வியக்கங்களால் இயலவில்லை. மேலும் பழமையை விடுவதில் இயக்கத்தவர்கள் தங்களைத் தயாராக்கிக் கொள்ளவில்லை. எனவே அவர்களது பணி பழமைக்கும் புதுமைக்கும் இடையேயான ஒரு போராட் டமாக உருவெடுத்ததே தவிரப்போராட்டத்தின் விளைவுகள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதனையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை.

1 ஏக்நாத்ரானடே (பதி.), எழுமின் விழிமின் சுவாமி விவே கானந்தர் ஹிந்து ராஷ்டிரத்துக்கு விடுத்த அறை கூவல், ஆர். கோபாலன் (மொ.பொ), கன்னியாகுமரி, 1983, ப. 70

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிராமணிய வட்டத்திற்குள் பல சீர்திருத்தப் பெரியார்கள் தோன்றியதுபோன்று, பிராமணியத்திற்கு வெளியேயும் சில சீர்திருத்த செம்மல்கள் வெளிவந்தனர். தென்னிந்தியாவைப் பொறுத்தவரை, கன்னியாகுமரிக்கு அருகே வைகுண்ட சுவாமிகளும், திருவனந்தபுரத்திற்கு அருகே நாராயணகுருவும் சீர்திருத்த இயக்கம் கண்டு தனி உடைமை வர்க்கம் கொண்டிருந்த ஏகபோக உரிமைகளைப் பொதுவினில் கொண்டுவரப் பணியாற்றினர். இருவரும் தோன்றியது அவர்னர்[2] வகுப்பிலாகும். அன்றையக் காலக் கட்டத்தில் சவர்னர்களாக தங்களை உயர்த்திக் கொண்டவர்கள், அவர்னர்களை தீண்டத் தகாதவர்களாகவும், பார்க்கத் தகாதவர்களாகவும் ஒதுக்கியதுடன், எவ்வித அடிப்படை உரிமைகளும் இல்லாதவர்களாக அவர்களை இழிநிலைக்குத் தள்ளியிருந்தனர். சாதிய முறையினைத் தீவிரமாகவும் கொடூரமாகவும் நடைமுறைப்படுத்திய நாட்டில்- இந்துமதக் காவலர் எனக்கருதிக் கொண்டு சவர்னர்களின் செயல்களுக்கு ஆதரவும் உதவியும் நல்கிய சுதேச ஆட்சியில்- சமுதாயத்தில் கீழ்நிலையில் வைக்கப்பட்டிருந்த அவர்னர்களின் சாதாரண உரிமைகளைக் கூட வழங்க முன்வராத ஆட்சி பரிபாலனத்தில்—தீண்டாமைக்கும், அடிமை முறைக்கும், ஊழியத்திற்கும் வியாக்கியானம் சொல்லிக் கொண்டு புழுபூச்சிகளைப்போல் அவர்னர்களை அமுக்கி சண்டாளர்களென முத்திரையிட்டு நடைப்பிணங்களாக அலையவிட்ட அவல நிலையினில் – அறியாமையைத் தங்களுக்கே ஏகபோக உடைமையாக்கிக்கொண்டு அநாகரீகமான சமூக, சமயப் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டிருந்த பாவப்பட்ட ஜீவன்களின்

[2] திருவிதாங்கூரில் சமுதாயம் இரு பெரும்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. பிரமாணர், நாயர், போன்றோர் சவர்னர்களாகவும், ஏனையோர் அவர்னர்களாவும் கருதப்பட்டனர்.

ஆதரவற்ற நிலையில் — நீசர்களின் ஆதிக்க வெறியில் கொந்தளித்த சமுதாயக் கடலில் அன்பெனும் தோணிபற்றி, தன்மானமெனும் துடுப்பேந்தி, சமதர்ம சமுதாயமெனும் தர்மபூமி நோக்கி நீந்திக் கரை சேர்க்கவந்த அவதாரப் புருஷரே வைகுண்ட சுவாமிகள் ஆவார்.

கன்னியாகுமரிக்கு அருகேயுள்ள சாஸ்தான்கோயில் விளை[3] என்னும் கிராமத்தில் கி.பி. 1808ஆம் ஆண்டு பொன்னு—வெயிலாள் தம்பதியரின் மகனாக வைகுண்ட சுவாமிகள் தோன்றினார். முடிசூடும்பெருமாள் என நாமம் பெற்று, மேட்டுச் சாதியினரும், அரசாங்கமும் எதிர்க்கவே குழந்தை நாமம் இழந்து முத்துக்குட்டி என்ற பெயரை மேட்டுச் சாதியினரிடமிருந்து பெற்றார். இளமை முதலே பொதுத்தொண்டில் ஆர்வமுள்ளவராய் வாழலானார். பதினேழாவது வயதில் திருமாலம்மாள் என்ற நங்கையுடன் அன்புற்று உலகியல் நெறிநின்று வாழவே, தனது இருபத்திரண்டாம் அகவையில் நோய்வாய்பட்டு சிலகாலம் வருந்தி பின்னர் திருச்செந்தூர் ஏகி நலம்பெறச் சென்றகாலை புனித நீராடலுக்காக அலைவாயில் இறங்கத் திரை இழுத்துச் சென்றது. சென்றவர் மூன்று நாட்களுக்குப் பின்னர் திரும்பினார். பாற்கடலுள் பள்ளி கொள்ளும் பரமனிடம் சென்று விஞ்சை (ஞானஉபதேசம்) பெற்றதையும், வைகுண்டத்தில் தான் மறுபிறப்பெய்தியதையும் மக்களிடம் அறிவித்தார். 1833 ஆம் ஆண்டு விஞ்சை பெற்றுத் திரும்பிய சுவாமிகள் 1834 ஆம் ஆண்டு தவ வாழ்வினை ஆரம்பித்தார். நான்கு வருடங்கள் முடிவுறும் போது மக்கள் கூட்டம் திரள்திரளாக சுவாமிகளை காண வந்தது. அவர்களின் துயரங்களைக் கேட்டறிந்து ஆறுதல்

[3] வைகுண்ட சுவாமிகளின் வருகைக்குப் பின்னர் இக்கிராமம் சாமிதோப்பு எனப்பெயர் பெறலாயிற்று.

கூறினார். அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தி மக்களின் நல் வாழ்வுக்கு உறுதுணையாய் நின்றார். அச்சம் விடுத்து ஆண்மையுடன் வாழ்ந்திடுமாறு மக்களுக்கு வழிகாட்டினார். அவரை அவதாரம் எனவே மக்கள்போற்றிப் பணிந்தனர். ஐந்தாம் ஆண்டு தவத்தில் மூழ்கியிருந்தபோது மேட்டுச் சாதியினரின் முறையீட்டின் பேரில்திருவி தாங்கூர் மன்னன் சுவாமிகளைக் கைது செய்து சிறையிட்டான்.சோதனைகளும் விஷப்பரிட்சைகளும் நடந்தேறின. எனினும் சுவாமிகள் அனைத்தையும் சாதனைகளாக்கிக் கொண்டார். 110 நாட்கள் சிறைவாசம் முடித்து திரும்பிய சுவாமிகளை மக்கள் அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்றனர். சுவாமிகள் தமது சீர்திருத்தப் பணிகளைத் தொடர்ந்தார். 1851 ஆம் ஆண்டு இறுதி மூச்சுள்ளவரை சமுதாய நலன்காக்க அயராது சுவாமிகள் இயக்கப்பணியாற்றினார்.[4]

சுவாமிகளின் இயக்கப் பணிகளின் விளைவு அவரைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தியது. சரித்திரமாய்-பாமரர்களின் நாயகனாய் அகிலத்தின் அமைதி வாழ்வினை நாடும் ஆன்றோராய் மாற்றியது. அவரது இயக்கப் பணிகள் எல்லாமே ''ஒரே சாதி ஒரே சமயம் ஒரே கடவுள்'' என்ற சித்தாந்தத்தினை அடிப்படையாகக் கொண்டே அரங்கேறின.

[4] சுவாமிகளின் வாழ்க்கைபற்றி விரிவாக அறிய, பார்க்க: இரா. பொன்னு, வைகுண்ட சுவாமிகள் வாழ்வும் வழி காட்டலும், புதுடில்லி 1983, பப. 38-60.

2
அகில திரட்டு அம்மானை

சமயங்களின் உயிர்நாடியாக திகழ்வன அவற்றின் புனித நூல்களே. மானிட சமுதாயத்தை நல்வழிப் படுத்திடத் தோன்றிய பல்வேறு சமயங்கள் தங்கள் கோட்பாடுகளைத் தத்தம் புனித நூல்கள் மூலமாகவே நிலைநாட்டுகின்றன. சமய ஒழுகலாறுகள் யாவும் புனிதநூல்கள் காட்டுகின்ற பாதையில்தாம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்துக்கள் கீதையையும், முகமதியர்கள் குர்ஆனையும், கிறிஸ்தவர்கள் விவிலியத்தையும், சீக்கியர்கள் ஆதிகிரந்தத்தையும் புனித நூலாகக் கொண்டிருப்பது போன்று அய்யா வைகுண்ட சுவாமிகள் காட்டிய நன்னெறியில் நடைபயிலும் அன்புக் கொடி மக்களும் தங்களின் புனிதநூலாக அகிலத்திரட்டு அம்மானையைப் போற்றி வருகின்றனர்.

ஆக்கியோன்:

வைகுண்ட சுவாமிகளின் பிரதான சீடர்களுள் ஒருவரான சகாதேவன் என்றழைக்கப்படும் அரிகோபாலன் எழுதியதே இவ்வம்மானையாகும்.

சான்றவர் தமக்காய்த் தரணியில்
மாயோன் மானுட உருத்தாங்கி
தவசு மேற்கொண்டு காரணம்போல்
செய்த கதையினை ஆண்டவர் அருளிச்
செய்யத்தான் பூரணமாக 'ஆராய்ந்து' [1]

பாடியதாக ஆக்கியோன் அம்மானையில் குறிப்பிட்டுள்ளார்.

1 த. பால்ராமசந்திர நாடார் (பதி.) **அகிலதிரட்டு அம்மானை**, சாமிதோப்பு, 1977, ப. 1 (பின்வரும் பக்கங்களில் இந்நூல் அகிலம் என்வே குறிக்கப்படுகிறது)

இப்புனிதக் கதையைத்தான் விளம்புகின்ற தன்மைபற்றிச் சீடர் கூறுகையில் அய்யா உரைக்க அன்போர்கள் தங்கள் முன்னே மெய்யாய் எழுதி விதிப்பேன் என்பதெல்லாம்

ஆனைநடைகண்டு அன்றில் நடையதொக்கும்
சேனைவர்வதென்னச் சிற்றெறும்புபற்றியென்ன
குயில் கூவக்கண்டு கூகைக்குரலாமோ
மயிலாடக்கண்டு வான்கோழி ஆடினதேன்
மடந்தை தேனீக்கள் வைத்த ரசம் அறிந்து
கடந்தை தாடேற்றுங் கதைபோலே யானடியேன்
மேலோன் திருக்கதையை எழுதுவேன் என்றதொக்கும்[2]

என அவையடக்கத்துடன் குறிப்பிடுகின்றார்.

தோற்றம்:

சேக்கிழார் திருத்தொண்டர்புராணம் எழுதுவதற்குத் தில்லைநடராஜர் பெருமான் எங்ஙனம் ‘உலகெலாம்’ என்று அடியெடுத்துக் கொடுத்து உணர்த்தியருளினாரோ, அது போன்று கொல்லம் வருடம் 1016-ல் கார்த்திகை 27-ம் நாள் வெள்ளியன்று திருமாலைத் தொழுநு பின் இரவு தூங்கிய அரிகோபாலன் அருகில் நாதன் நலமாக வந்திருந்து

சீதமுடன் எழுப்பிச் சொன்னாரே காரணத்தை
காப்பில் ஒருசீர் கனிவாய் மிகத் திறந்து
தார்ப்பிரியமாகச் சாத்தினார் எம்பெருமான்
மகனே இவ்வாய் மொழியை வகுக்கும் காண்டத்துக்கு
உகமோர் அறிய உரை நீ முதல் காப்பாய்

என்று ‘‘ஏரணி’’ என்பதனை மங்கலச் சொல்லாய் வைத்துப் பாடும்படி உரைத்துப்பின்

[2] மேற்படி, ப. 3
[3] மேற்படி, ப. 4

அதன்மேல் நடப்புன்னுள்ளே யேகமிருந்து
சரிசமனாய் நான் வகுப்பேன் தானெழுது காண்டமதை[3]

எனப் பணித்தார் எனவும், நாதன் உரைசெய்ய தாமரையூர் வாழ் சீடர் எழுதி வையகத்து மனுவோர் அறியச் செய்தார் என்றும் அம்மானை கூறிச் செல்கின்றது.

கரு:

திருமாலின் அவதாரங்கள் இதில் சுருங்கக் கூறப்பட்டிருந்தாலும் கூட இந்த அம்மானையின் கருவாகத் திகழ்வது சுவாமியின் வாழ்க்கை வரலாறு ஆகும். இவ்வம்மானையைப்பற்றி அதன் ஆசிரியர் குறிப்பிடுகையில்

தர்மயுகமாக்கித் தரணியை ஆளுதற்குக்
கர்மக் கலியில் கடவுளார் வந்தக்கதை[4]

எனப்பெருமைபடக் கூறுகின்றார். அய்யாவின் வாழ்வும் அவர்தம் அறவுரைகளும், தீர்க்கதரிசனங்களும் பாமரர்களும் படித்து மகிழும் வண்ணம் சமுதாயப் பின்னணியுடன் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன.

சிறப்பு:

அம்மானையின் சிறப்பு பல்வேறு இடங்களில் உணர்த்தப்பட்டுள்ளது. படிப்பவர்க்கு மட்டுமின்றிக் கேட்போருக்கும் ஏற்படக்கூடிய பலன்பற்றி அம்மானையே கருத்து தெரிவிக்கையில்

வாசித்துக் கேட்டு மகிழ்ந்திருந்த அன்போர்க்குப்
பூஜித்துநின்ற பூரணங்கள் கிட்டுமடா[5] எனவும்,
மலடியும் இக்கதையை மாவிருப்பத்தோடு இளகி
குலம் அளந்தோனை நாடித்தான் கேட்பாளாமாகில்
மதலை உடனே கிடைக்குமடா[6] எனவும்

[4] மேற்படி
[5] மேற்படி
[6] மேற்படி

குட்டமது கொண்டோர் குணம் வைத்துக் கேட்பீரால்
திட்டமது சொன்னோம் தீரும் திருவாணை[7] எனவும்
உயர்வுபடக் கூறுகின்றது.

ஓலைச்சுவடியாக இருந்த இவ்வம்மானை 1939-ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்படலாயிற்று. சுவாமிகளின் இயக்கம்பற்றி அறிந்திட இந்நூல் ஓர் அரிய சான்றாக விளங்குகிறது.

அருள் நூல்:

அகிலத் திரட்டு அம்மானையின் துணை நூலாக அருள் நூல் விளங்குகின்றது. அகிலத்திரட்டுத் திருவாசகம், உச்சிப் படிப்பு, உகப்படிப்பு, வாழப்படிப்பு, சாட்டு நீட்டோலை, சீசருக்கு சுவாமிகள் சொன்ன பத்திரம், சத்த கன்னிமார் பாடல், திங்கள் பதம், பஞ்ச தேவர் உற்பத்தி, நடுத்தீர்வை உலா, கல்யாண வாழ்த்து என்பன போன்ற பல பகுதிகளின் தொகுப்பே இந்நூலாகும். வைகுண்ட சுவாமிகளின் வாழ்வு பற்றியும் அன்புக்கொடி மக்களின் சமய ஒழுகலாறுகள் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. அவரது தீர்க்கத் தரிசனங்கள் பல இந்நூலில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன.

7 மேற்படி.

3

சுதந்திரம் வேண்டி...

வைகுண்ட சுவாமிகள் நடத்திய சமுதாய இயக்கம் மாபெரும் பாமரர் எழுச்சியாகவே வெளிப்பட்டது. சமுதாயத்தின் ஒடுக்கப்பட்டப் பிரிவினரின் நலன்காக்க ஆளும் வேந்தனைக்கூட இடித்துரைக்கச் சுவாமிகள் தவறிடாது, அதிகாரவர்க்கத்தின் நச்சு வேர்களை அகற்றிடும் வகையில் திட்டமிட்டுப் பணியாற்றினார். சுவாமிகள் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் சமுதாய உணர்வையும், உரிமை வேட்கையையும் எதிரொலிப்பனவாக உள்ளன.

'மன்னன் எவ்வழி, அவ்வழி மக்கள்' என கோனும் குடிகளும் ஒரே (நேர்) வழியில் செல்கின்ற விதத்தில் பண்டையத் தமிழ் வேந்தர்களின் ஆட்சி மக்கள்நல ஆட்சியாக அமைந்திருந்தது. கோனோக்கி வாழ்ந்த குடிகள் செங்கோலாட்சியையே பெற்று நிறைவும் மகிழ்ச்சியும் அடைந்தனர். எனவேதான் திருவுடை மன்னரைக்காணின் திரு-மாலையே காண்பதாக அவர்கள் பாட்டிசைத்தனர்.

மாறாக-

மக்களின் நலன்பேணி, அவர்களின் உரிமைகளைக்காக்க வேண்டிய காவலன் மக்கள் நலனில் நாட்டம் இல்லாமலும், அவர்கள் உரிமைகளை உதாசீனம் செய்தும் முறைதவறி ஆட்சிசெய்வானாயின் மக்களால் கொடுங்கோல் மன்னனெனத் தூற்றப்படுவது திண்ணம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருவிதாங்கூரில் நடைபெற்ற மன்னராட்சியும் 'நீசனின்' ஆட்சியாகவே சமுதாயத்தில் சில பிரிவினர்க்குத் தோன்றியது. மேட்டுச் சாதியைச்

சார்ந்தவர்கள் 'பொற்காலம்' எனப்போற்றிய வேளையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இருண்டகாலமாகவே அது காட்சி அளித்தது.

மேற்கத்தியக் கல்வியும் மக்களாட்சித் தத்துவமும் இந்தியத் துணைக்கண்டத்தில் தென்றலென வீசிய வேளையில் அதனைச் சுவாசித்துக் சுகம்பெற்ற சில இந்திய ஜீவன்கள் தேசியம், சுதந்திரம் எனத்தங்கள் சிந்தனையை ஓடவிட்டன. 1857ஆம் ஆண்டு ஏற்பட்ட வட இந்தியச் சிப்பாய் கலகம் அந்நியர் ஆட்சி மீதான இந்திய மக்களின் சீற்றத்தினை வெளிக்காட்டியது.

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் – இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்

என இந்திய மக்கள் சுதந்திர உணர்வு பெற்று மேலைநாட்டானைத் துரத்தி, சுதந்திரப் பயிர் வளர்க்க முயற்சி மேற்கொள்கையில், திருவிதாங்கூர் ராஜ்யத்தில் வாழ்ந்த மக்களுள் ஒரு பிரிவினர் தங்களின் பெண்கள் மேலாடை அணியக் கூட உரிமை வேண்டிப் போராட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மேலைநாட்டானை விட மேட்டுக்குடியினனே அவர்களுக்கு எதிரியாகத் தோன்றினான். ஊழியம் செய்வதற்கும், இறை செலுத்துவதற்கும் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு

மற்றைய மனிதரை அடிமைப் படுத்தலே
முற்றிய அறிவின் முறையென்று

எண்ணிய நீசர்களின் குரோதப்பார்வையிலிருந்து தப்பிவிட்டாலே போதும் என்ற எண்ணம் இருந்தது. அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் என அனைத்து நிலைகளிலும் அடிப்படை உரிமைகளை இழந்து இன்னல் சேர் வாழ்க்கையில் உழன்று கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அய்யா தன் இயக்கத்தினை நடத்தி, அவர்களின் ஏற்றமிகு வாழ்வுக்காகத் தொண்டாற்றினார்.

அய்யாவின் இயக்கம் ஓர் அறவழிப்போராட்டம்; புத்தன் பிறந்த மண்ணில் அஹிம்சையின் மகிமையை உணரச் செய்தப் போராட்டம்; காந்தி நடத்திய சாத்வீக போராட் டத்திற்கு முன்னரே ஆயுதம் ஏதுமின்றி அன்பு வழியில் நடத் தப்பட்டப் போராட்டம்; அதிகார வர்க்கத்தின் அடக்கு முறை-களுக்குள் சிக்குண்டு அடிஉதைகளுக்கு ஆளாக்கப்பட்ட போதிலும் 'பொறுமையே பெரிதெனச்' சுய சோதனையில் தன்னை ஈடுபடுத்தி பீடுநடை போட்டப்போராட்டம்; மானம் என்ற பாதுகாப்புக் கவசம்தாங்கி வாழ்ந்திடின், கலி தானா-கவே அழிந்துவிடும் என அறிவுறுத்தி அமைதி வழியில் தீர்வு-காண நடைபயின்ற போராட்டம்; எல்லோரும் அமரத்துவம் அடைந்திடும் வகையில் அன்பு மலர் தூவிய பாதையில் அகி-லத்தை அழைத்துச்சென்ற அமைதிப் போராட்டம்; நல்லன நாடி அல்லன அகற்றி சமுதாயத்தின் ஆக்கபூர்வமான மாறு தல் நோக்கி மக்களை அழைத்துச்சென்ற எழுச்சிமிகு போராட்டம்...

சாதிய முறையின் காவலனாக விளங்கி, சாதிக்கொரு நீதி வழங்கிய மன்னனை 'அனந்த நீசன்'[1] என இடித்து-ரைத்து, பொழுதெலாம் இந்தியச் செல்வத்தைக் கொண்டு செல்வத்திலேயே மும்முரமாகச் செயல்பட்ட ஆங்கிலேயனை 'வெண்ணீசன்'[2] எனவும் இடித்துரைத்த சுவாமிகள், இந் நீசர்களை வெளியேற்றிட எவ்வித ஆயுதப் போராட்டங்களும் தேவையில்லை எனவும், அவர்களின் வீழ்ச்சி தானாகவே ஏற்படும் எனவும் உறுதியுடன் கூறியதோடு நின்றுவிடாது, இந்தியாவில் வெண்ணீசனின் ஏகாதிபத்தியம் ஒழிந்து, மக்கள் சுவாசிக்க இருக்கின்ற சுதந்திரக் காற்று வீசிடும் நாளையும் தனது மெய்யுணர்வால் உணர்ந்து, தீர்க்கதரிசனமாக அறிவுறுத்தினார்.

[1] அகிலம் ப. 114.
[2] மேற்படி ப.ப. 110 &. 119

ஆயிரத்தெட்டான திருமண்டபத்தில்
வாயிதமாய் ஆண்டொன்றில் வாய்த்த மண்டபங்களிலே
நூற்றிப் பன்னிரண்டில் நொடிப்பேன் ஓராண்ட திலே
தோற்றுவிப்பேனார்க்கும் தூதுமிக நடந்து
பத்தாண்டுக்குள்ளே பலசோதனை பார்த்து
வித்தார மேலே விசாரிப்பேன் கண்டாயே[3]

என இந்தியச் சுதந்திரத்தினைச் சரியானபடி சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே உணர்த்துவனவாக அம்மானை வரிகள் விளக்குகின்றன.

திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தில் நலிவுற்ற பிரிவினரின் உரிமையினை நிலைநாட்டப் போராடிய சுவாமிகள் பாரத தேசத்தின் சுதந்திரம் பற்றியும் திட்டவட்டமாக அறிவுறுத்தித் தன்னை ஒரு சிறந்த சுதந்திரப் பிரியராகத் தெளிவுறுத்தினார்.

[3] மேற்படி, ப. 202.

நூற்றுப்பன்னிரண்டு என்பது கொல்லம் வருடம் 1112 (கி.பி. 1937) ஆகும்.
1937+10=1947, இந்தியா சுதந்திரம் பெற்ற ஆண்டாகும்.

4

தர்மமே வாழும் சக்கரங்கள்...

'அரும்பெறல் யாக்கையைப் பெற்றதின் பெரும்பயனே வறியார்க்கு ஈன்று வாழ்வதற்கே' என்பர் சான்றோர். கொல்லாமை நெறியினை அறிவுறுத்தி நின்ற சமணமும், சாக்கியமும் அன்னதானம், அபயதானம், மருத்துவதானம், சாஸ்திரதானம் என நால்வகைத் தானங்களை வலியுறுத்தியே சமுதாயப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன ஆரம்ப காலத் தமிழ்ச் சமுதாயத்தில் இந் நால்வகைத் தானங்களை மேற்கொண்டு பல்லுயிரிடத்தும் அன்பு செலுத்தும் நன்னெறியினை மக்களிடையே பரப்பின.

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அளிப்பது

என அவைகள் அறிவுறுத்துவது போன்று தர்மமிட்டு வாழ்தலையே ஓர் அறநெறியாக நம் முன்னோர் கொண்டிருந்தனர்.

மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே [1]

எனப்பெருமைபடப் பேசலாயினர். இதைத்தான் பின்னாளில் சுவாமி விவேகானந்தரும் ''ஏழைமக்களே நாம் வழிபடும் இறைவனாகும்; இடையறாது ஏழைகளைப் பற்றியே எண்ணுங்கள்; அவர்களுக்காகவே பாடுபடுங்கள்; அங்ஙனம் அவர்களுக்காக யார் உள்ளம் கசிந்துருகிக் கண்ணீர் வடிக்கிறார்களோ அவர்களே மகாத்மாக்கள்''

[1] மணிமேகலை, 11:95-96

எனப்பகன்றார்[3]. அன்பின் வழியே உயிர்நிலையைக் கண்ட அய்யா வைகுண்ட சுவாமிகளும் தர்மத்தையே உயர் நெறியாகக் கொண்டார். நாடிவந்த மக்கள் யாவரையும் தர்மமிட்டு வாழ்ந்திடுமாறு அறிவுறுத்தினார். ''தர்மமே வாழும் சக்கரங்கள்'' எனச் சுருங்கக்கூறி வாழ்வின் முழுப் பொருளும் தர்மத்துள் அடங்குவதாய்ப் புகட்டினார்.

தர்மம் அளிப்பதிலும் சில நெறிமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அன்போர்க்குமீயு
வழிபோவோருக்குமீயு
சகலோர்க்குமீயு
வலியோர்க்குமீயு
மெலியோர்க்குமீயு[4]

என்த் தன்னால் இயன்றவரை கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிடாது எல்லோர்க்கும் (ஈந்து) இசைபட வாழ்ந்திடு-மாறு வலியுறுத்தினார். எனினும் ஈதலில்கூட எளியோர்-களைக் கண்டு மனமிரங்கி ஈயும் பண்பினையே மிகப் பாராட்டினார். எனவேத்தான்

தாழக் கிடப்பாரைத்
தற்காப்பதுவே தர்மம்[5]

என அறுதியிட்டுக் கூறினார். ஒருவன் தன்னைவிடத் தாழ்ந்து காணப்படுவானெனில் அவனைப் பேணி உயர் நிலைக்குக் கொண்டு வருதலே தர்மம் எனக் கொள்கை விளக்கம் அளித்தார்.

[2] ஏக்நாத ரானடே (பதி.), op.cit., ப ப. 82-83
[3] அகிலம், ப. 207
[4] மேற்படி
[5] மேற்படி. ப. 203

தர்மம் வழங்குவதில்கூட உண்மை அன்புடையவராய்-இரப்போரின் துயர்கண்டு இரங்கிடும் சிந்தையராய் அவர்-தம் வாடியமுகம் மலர்ச்சியுறும்வகையில், தான் கொடுப்பது சிறிதெனினும் அகமும் முகமும் மலர ஈதல் வேண்டுமென்பதை

இரப்போர் முகம் பார்த்து
ஈவதுவே தர்மம்[6]

என அறிவுறுத்தினார். அங்ஙனம் இரப்பாரைக் கைகொண்டோரே எனை ஏற்றவராவர் எனத்தெளிவுபடுத்தினார். ''நல்லவர் இட்ட தர்மம் நாள்தோறும் பொங்கும்.'' எனத் தர்மத்தின் தகைமையினைக் கூறிய சுவாமிகள்

போர்க்கு நினைத்தாரைப்
பலி கொடுக்கும்[7]

ஆற்றல் மிக்கதென புகட்டினார். இவை யாவையும் அன்பர்கள் கருத்தில் கொண்டு ''ஆணும் பெண்ணுமாய்க் கூடித்தான தர்மம் செய்து'' தழைத்து வாழ்ந்திடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

சமய வாழ்வில் சுவாமிகள் தர்மத்தையே தனிப்பெரும் நிலையில் ஏற்றி வைத்தார். பரம்பொருளை அடைந்திடுவதற்கான ஒரே வழி தர்மமே என்பதனை நன்குணர்ந்து

பயந்து தர்மமிட்டுப்
பரம்பொருளைத் தேடிடுங்கோ[8]

என மக்களுக்கு அழைப்பு விடுத்தார். மக்களும் அய்யாவின் அழைப்பை முழுமனதுடன் ஏற்றனர். பதினெண் சாதியாரும் தத்தம் வீடுகளிலிருந்து உணவுப்பொருட்கள் கொண்டுவந்து, முத்திரி கிணற்று நீரையும் கொணர்ந்து, சமைத்து அய்யாவுடன் இருந்து சகலோர்க்கும் அளித்துண்டு அய்யாவின்

[6] மேற்படி, ப. 170
[7] மேற்படி, ப. 207
[8] அருள் நூல், ப. 34

ஆசி பெற்றுச் சென்றனர். அய்யா வழி மக்கள் இன்றும் தங்கள் இறை வழிபாட்டில் தர்மம் இடுதலையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளதைப் பதிகளிலும் தாங்கல்களிலும் காண முடிகிறது.

என் பெயர் சொல்லி யாதொருவர் வந்தாலும் அன்பாக அன்னமிட்டு ஆதரித்த பக்தருக்கு என்னென்ன அபாயம் வந்தாலும் அந்நேரம் நாதன் அங்கு துணைக்கு வருவதாக்கூறித் தர்மத்தின் வழிநின்று 'எட்டாப்பொருளை' அடைந்திடும்முகமாக மக்களை நன்னெறிப் பாதையில் நடத்திய அய்யாவின் சமயக் கோட்பாட்டினைச் சுருங்கச்சொன்னால் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பதே தெளிவு; தர்மமே தெய்வ நிலைக்கு உயர்த்தும் என்பது தான் முடிவாம்.

5

தர்மயுகம் நோக்கி...

அய்யாவின் இயக்கத்தில் தலையாய இடம்பெறுவது தர்மயுகம் ஏற்படுத்திட மக்களை அழைத்துச் செல்ல முயற்சி மேற்கொண்டமையாகும். அய்யாவின் வருகையின் நோக்கமே தர்மயுகம் காணவே என்பதனை

தர்மயுகமாக்கித் தரணியை ஆளுதற்குக்
கர்மக் கலியில் கடவுளார் வந்த கதை

என அகிலத்திரட்டு அம்மானையில் சீடர் அரிகோபாலன் குறிப்பிடுவதிலிருந்து நன்குணரலாம்.

அதிகாரம் செலுத்தி அரசாளுவதற்கு மாறாக "நீண்ட புகழ், தர்மம் நிறுத்தி அரசாண்டிட வேண்டும்[1]" என்பதில் அய்யா தணியாத தாகம் கொண்டிருந்தார். தர்ம சிந்தை. யராய் வையத்து மானிடர் வாழ்ந்திடின் தர்மயுகம் தானா. கவே தோன்றும் என்ற திடமான நம்பிக்கையில் இயக்கத். தினை நடத்திச் சென்றார். எனவேதான்

பயந்து தர்மமிட்டுப்
பரம்பொருளைத் தேடிடுங்கோ

என அழைப்பு விடுத்தார். பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி அடையவேண்டுமெனில் 'தர்மம்' என்ற தோணி பற்றியே கடந்திட முடியும் என்பதில் அய்யா திடமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

தர்மயுகத்தின் இயல்பு பற்றி அய்யா கூறுகையில் புவி யாவும் கருணை வெள்ளத்தால் தர்ம வயல்கள் போல

[1] அருள் நூல், ப. 34

செழித்து வளர்ந்து தர்மப்புவியாய் விளங்கும் என அறிவுறுத்தினார்.

மண்ணெல்லாம் தர்ம வயல்போல் விளைந்திருக்கும்
தர்மப்புவியிலுள்ள தண்ணீர் கலக்கியானம்
நன்மை வெள்ளம் காட்ட நாடும் கருணை வெள்ளம்[2]

என அகிலம் தர்மப்புவியின் சிறப்பு பற்றிக் கூறுகின்றது. பூங்குன்றனாரின் 'யாவரும் கேளிர்' என்ற உலக சகோதரத்துவ உணர்வும், வள்ளுவனாரின் 'பிறப்பொக்கும்' என்ற சமத்துவநெறியும், மூலனாரின் 'ஒன்றே குலம்' என்ற ஒருமைப்பாட்டுணர்வும் உள்ளடக்கியதோர் பண்பட்ட வாழ்வியல் நெறியினைத் தர்மயுகத்தில் சுவாமிகள் சிருஷ்டிக்கின்றார்.

சாத்திர வேதம் சமயம்
ஒன்றாய் நின்றிலங்கும்
வாயுவே பூப்போல்
மலரெடுத்து வீசிநிற்கும்
ஆயுங்கலைத தமிழும்
அறிவும் ஒன்று போல் பரவும்
நம்மனுவோர் தர்மப் பதி
நாளும் மிகத் தழைக்கும்
தம்மனுவோர் போலே
தழைத்திருந்து வாழ்வார் காண்
ஒக்க ஒரு இனம்போல
உவந்திருந்து வாழ்வார் காண்[3]!

எனத் தர்மயுகத்தில் ஒரு தெய்வீக வாழ்வைச் சமைக்கின்றார். சாத்திர வேதம் பேசித் திரியும் சழக்கர்கள் இல்லாத-பரம்பொருளை மையமாகக் கொண்ட சமயங்களின் பொருட்டு

[2] அகிலம், ப. 45
[3] மேற்படி, ப ப. 144-45

ஒருவருக்கொருவர் உனக்கெனக்கென்றே தான்
உறுதியழிந்து ஒன்றிலும் கைகாணாமல்
குறுகி வழிமுட்டிக் குறைநோவு கொண்டுடைந்து
மறுகித் தவித்து மாளுமவீண்வேதமுள்ளோர்[4]

இல்லாத-சாதிய உணர்வு கொண்டு சண்டையிட்டுக் கொள்ளும் சண்டாளர்கள் காணப்படாத ஒரு புதியதோர் உலகிற்கு மக்களை அழைத்துச் செல்ல முனைந்தார். ஆகவே தான் தர்மபதி ராஜ்ஜியத்தில் வாழும் மக்கள் யாவரும் ஒரே இனத்தவராய்-ஒரே சமயத்தவராய் இருந்து உயரிய வாழ்வு வாழ்ந்திடுவர் எனத் தெளிவுபடுத்தினார். அங்ஙனம் தர்மப்புவி கண்டு இனிதிருக்கும் மக்களுக்கு

வர்மமில்லை நோவுமில்லை
மறலி வினைதானுமில்லை[5]

எனப் பூவுலகிலே சொர்க்க வாழ்வு கண்டு இன்புறு நிலையினையும் அறிவுறுத்தினார்.

தர்மபதி ராஜ்ஜியத்தில் இனங்கள்
ஒன்றாயாள ராஜா ஒன்றாகுதோ[6]

என்ற நிலையில் தர்மப்புவி அரசாட்சியில் அகிலம் முழுமையும் ஒரே குடைக்குள்-ஒரே ஆட்சியின் கீழ் வரும் எனவும் அங்ஙனம் உதயமாகும் தர்மப்புவியில் பகவான் 'தெய்வ'ச் செங்கோல் ஆட்சி புரிவார் எனவும் கூறினார்.

முப்பத்திரண்டறத்தால் முகித்த சிங்காசனத்தில்
செப்பொத்த மாணாக்கர் சேவிக்கயிரு புறமும்
ஒப்பற்ற பொற்பதிக்குள் உயர்ந்த சிங்காசனத்தில்
மறுமன்யரெதிரி வையகத்தில் இல்லாமல்
விறு மஞ்ஞரான வெற்றி வைகுண்டருமே

4 மேற்படி, ப. 209
5 மேற்படி, ப. 145
6 மேற்படி, ப. 174

சிங்காசனமிருந்து தெய்வச்செங்கோல் நடத்திப்
பொங்காரமான புவிதர்ம ராச்சியத்தில்
ஆளுவார்...[7]

என்ற அகிலவரிகள் இதனைத் தெளிவுற அறிவிக்கின்றன. அய்யா காட்டிய அறநெறியில் மக்கள் வழி நடப்பின் தர்மயுகம் தோன்றிடும் எனவும், அவ்வாறு தோன்றிடும் யுக ராஜ்ஜி-யத்தில் வைகுண்டர் ஏக ஆட்சி புரிந்திடுவார் எனவும் அகிலம் உணர்த்தும் தர்மயுகக்கோட்பாட்டைத் தங்கள் சமயத்திலிருந்தே அய்யா வழியினர் பின்னாளில் எடுத்துக் கொண்டதாகக் கிறிஸ்தவ மார்க்கத்தினர் கூறுவர். 1864-ம் ஆண்டைய லண்டன் திருச்சபை அறிக்கை

'They (the followers of Vaikunda Swamigal). borrow the doctrines from Christianity. Formerly they were ignorant of the doctrine of the resurrection but now they say that Muttukutti will come again, raise his followers from the death and take-them to the Heaven of the worshippers of Vishnu'[8]

எனக் கூறுகின்றது. தர்மயுகத் தெய்வீக ஆட்சி அய்யாவின் சமுதாய நல உணர்வில் தோன்றியதேதவிரப் பின்னாளையக் கண்டுபிடிப்பன்று[9] தான் புகட்டிய அன்புவழியில் தர்மநெறி கண்டு நல்வாழ்வு ஏற்படுத்திப் புதிய சமுதாயம் படைத்தி டவே தர்மயுகம் நோக்கியதோர் அறப்பயணமாகத் தனதியக் கத்தைச் சுவாமிகள் நடத்தினார் என்பது சமுதாய நோக்கில் நின்று ஆயுங்கால் புலனாகும்.

[7] மேற்படி, ப. 365

[8] Annual Report of L.M.S., Nagercoil Mission District, 1864, P.4

[9] R. Ponnu, Vaikunda Swami and Social Reform (M. Phil. Dissertation) Madurai Kamaraj University 1980, P. 6

சுவாமிகளின் சமுதாய இயக்கத்தில் தர்மயுகக் கோட்பாடு ''ஒரே இனம், ஒரே சமயம் ஒரே அரசு'' என்ற உயரிய நெறியினை உணர்த்தி நிற்கின்றது. இக்கோட்பாடு அய்யாவை ஒரு சிறந்த சமுதாய வாதியாகக் காட்டுகின்றது. இக்கோட்பாட்டையே பின்னாளில் வந்த ஈழவக்குலத்தோன்றலான நாராயண குருவும் 'ஒரே சாதி ஒரே சமயம் ஒரே தெய்வம்' என்ற கொள்கைத்தீபமாக மக்கள் மன்றத்தில் ஏற்றி வைத்தார்[10].

10 Vide V. T. Samuel, One Caste One Religion One God: A Study of Sri. Narayana Guru, New Delhe, 1972, Chapters. III &. IV

6

ஒருமைப்பாடு உணர்த்தினார்

எவ்வுயிரும் அண்டங்கள் எத்தனையும் நான்காண
இவ்வுலகில் எந்தை எனக்களித்தான்—எவ்வுயிரும்
சன்மார்க்கச் சங்கம் தனை அடையச் செய்வித்தே
என்மார்க்கம் காணபேன் இனி

என ஆருயிர்க்கெல்லாம் அன்பு செலுத்தி ஆன்மநேய ஒருமைப்பாட்டினைத் தமிழ் மக்களிடையே பரப்பியவர் வள்ளலார்.

செடி, கொடி, ஊர்வன, நடப்பன என அனைத்து ஜீவராசிகள்மாட்டும் கொள்வதான அருள் வாயிலாகத் 'தனிப்பெருங்கருணை'யினைப் போற்றியவர் வடலூரார்.

மனிதனை மனிதன் ஏய்த்து, மாய்த்து உயிர் வாழும் சமுதாயத்தில் வாடிய பயிரைக் கண்டபோதெலாம் வாடிய அருட்பிரகாசராய்த் திகழ்ந்தவர் அவர்.

'காக்கை குருவி எங்கள் சாதி' என்று சாதிய முறை யிலான சமுதாய அமைப்பினில் ஒருமைப்பாடு நெறியிலான புதியதோர் சமுதாயம் காணக் காக்கைகளையும் குருவி களையும் தனது சாதியாக்கிக் கொண்டு மகிழ்ந்தவர் பாரதியார்.

அச்சமிலா சுதந்திர வாழ்க்கைக்கு மக்களைச் இட்டு செல்ல வழிநடத்தியதுடன், மானிட ஒருமைப்பாட்டுணர் வையும் அறிவுறுத்திய வைகுண்ட சுவாமிகள்.

பட்சி பறவைகளுக்கும் பல ஜீவ ஜந்துக்களுக்கும்
அச்சுவரி முதலுக்குமான மிருகங்களுக்கும்
ஊர்வனங்களானத்துக்கும் உதித்த புற்பூண்டுகளுக்கும்

உத்தரவாய்த் 'தர்மம்' உரைத்ததன்[1] மூலமாகப் பின்னாளைய சமரச சன்மார்க்கத்தவர்க்கும் காக்கைக் குருவிக் கூட்டத்தவர்க்கும் முன்னரே அனைத்துயிர்களிடத்தும் ஒருமைப்பாட்டுணர்வை ஓதி நின்றார்.

அய்யா கண்ட முத்திரிக்கிணறு தீண்டத்தகாதவனையும், தீண்டத் தகுகின்றவனையும், மேட்டுக் குடியினனையும், தாழ்வுற்ற குடியினனையும், வலியோனையும், எளியோனை-யும், ஆண்டியையும் ஆளுவோனையும் ஓர் தலத்து நீரில் நீராடக் கொணர்ந்து ஒருங்கிணைத்து ஒருமைப்பாட்டுணர்-வினை அளிப்பதாய் அமைந்தது.

அய்யா நடைமுறைப் படுத்திய தலைப்பாகை அணியும் பழக்கம் மானிடர் அனைவரையும் ஓர் நிலையில்காண விழைந்ததுடன், உயர்வு, தாழ்வு பேதமிலா ஓர் ஐக்கிய சமுதாயம் காண்பதற்கான ஒருமைப்பாட்டுணர்வில் செய-லாற்றப்பட்டதே.

அய்யா நிறுவிய சமத்துவ சங்கமும், ஆரம்பித்த சமபந்தி போஜனமும் கூட மானிட ஒருமைப்பாட்டை உணர்த்து-வனவாகவே அமையப்பெற்றன.

இங்ஙனம் அய்யாவின் சமுதாய எழுச்சி இயக்கத்தில் மானிட சமுதாயத்தின் ஒருமைப்பாடு மட்டும் உணர்த்தப் படாது, புவிவாழ் பறவைகளும், மிருகங்களும் மகிழ்வுடனே வாழவேண்டும் என்பதான ஒருமைப்பாட்டு நல்லுணர்வு மின்னிமிளிர்கின்றது.

[1] அகிலம், ப ப. 251-52

மானிட ஒருமைப்பாடு உணர்த்திய சுவாமிகள் மிருகங்களுக்குத் தர்மம் உரைக்கையில் மிருகமொடு மிருகமாக இன்பமுற வாழ்ந்திட வாழ்த்தியதுடன், அவைகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாய் வாழ்ந்திட விருப்பத்தை வெளியிட்டார்.

சங்கையுடன் ஓர்தலத்தில்
தண்ணீர் குடித்திருங்கோ[2]

என மிருக இனங்களும் ஓர்தலத்து நீருண்டு ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழத் தன் அவாவினை வெளியிட்டதுடன், பட்சி இனங்களையும் ஒன்றுபட வாழ்ந்திடச் சுவாமிகள் அழைப்பு விடுத்தார்.

பட்சியெல்லா வினமும்
பண்பால் ஒருவினம் போல்
கட்சியுடனே களிகூர்ந்து
வாழ்ந்திடுங்கோ
சிறிது பெரிது என்று
மிகச் சீறாமல்
உறுதி பெரிதுடையோனே
தஞ்சமென்று
கூடாவி குலாவிக் குணமாய்
மகிழ்ந்திருங்கோ[3]

எனப் பட்சியினத்திற்கும் ஒருமைப்பாட்டினைப் புகட்டினார். 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போலெண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவந்து நின்றார்.

அய்யாவின் இயக்கத்தில் மாந்தர் மட்டுமின்றிப் பல்லுயிரும் பண்புடனே இனிதுற வாழ்வதற்கான கருணைஉணர்வு இழைந்தோடியது. எனவேதான் பட்சியும் மிருக இனமும்

[2] மேற்படி, ப. 252

[3] மேற்படி

கூட மகிழ்ச்சியுற வாழ்ந்திடத் தன் அவாவினை வெளியிட இயன்றது.

ஆம்!

ஆன்மநேய ஒருமைப்பாடு உணர்த்தும் ஆன்றோராக அய்யா விளங்குகின்றார். அவரது கொல்லாமை நெறியும், உயிர்ப்பலி எதிர்ப்பும் அவ்வுணர்வடிப்படையில் எழுந்தவையே.

எங்கும் ஏகமாய் நிறைந்து விளங்குவதாகக் கருதப்படும் இறைவன் எவ்வுயிரிடத்தும் உறைந்துள்ளான் என்பதைக் கருத்தில் கொண்டு அனைத்துயிரிடத்தும் கருணை ஒளியை வீசிடச் செய்தார்.

சமயம் என்றும், தத்துவம் என்றும் ஏதேதோ பேசி வாழ்வின் பொருளைப் புரியாத புதிராக்கி விட்ட சமுதாயத்தில்– ஊழியம் என்றும் அடிமை என்றும் சில பிரிவினரை இருளில் மூழ்கடித்துவிட்ட அவலமிக்கப் பொருளாதார அமைப்பினில்- உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் பிரிவினைகளில் விழுந்து உழன்ற மக்கள் மத்தியில் அய்யா ஏற்றிய தீபம் அன்பாக- இரக்கமாக- கருணையாகச் சுடர் விட்டது.

ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கான ஆயுதங்களாக அன்பையும், இரக்கத்தையும். கருணையையும்தான் கண்டார், அன்பின் வழியதான வாழ்வை அமைத்துக் கொண்டால்' அங்கே இரக்கமும் கருணையும் நீங்காது ஒளி வீசும்; கொல்லாமையும் கொடையும் உயர்ந்தோங்கும்; சாதிகளும் சமயங்களும் சாகடிக்கப்படும்; இன, நிற வேற்றுமைகள் புறங்காட்டப்படும்; தன்னலம் தன்னிலை இழந்துபொதுநலம்போற்றப்படும்; பண்பாடும் தத்துவமும் தனித்துவம் பெறும்; ஒருமைப்பாட்டு ஒளியில் அகிலம் அமைதி வாழ்வில் திளைக்கும்.

7

தலைப்பாகை தந்த தன்மானம்

வாழ்க்கைப் பயணம் இனிதுற அமையவேண்டுமெனில் மக்கள் ஆண்மை மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். ஆண்மை இல்லாத வாழ்வு அடிமை வாழ்வுக்கு ஒப்பானதாகும். எனவேதான் ஆண்மையின் இன்றியமையாமையினை அறிவுறுத்தும் வகையில்

ஆண்மை தவறேல்

எனப் புகட்டுவர் ஆன்றோர். பக்திமணம் பரப்ப வந்த தமிழ்ச் சமயக்குரவர்கள் கூடச் சமயவாழ்வில் ஆண்மையையே வலியுறுத்திச் சென்றனர். ஆகவேதான்

நாமார்க்கும் குடியல்லோம்

நமனையஞ்சோம்[1]

என்ற வீரமுழக்கம் தமிழர் சமைத்த பக்தி நெறியினில் ஒலிக்கலாயிற்று.

அச்சத்துள் அடிபணிந்து வாழ்வினைத் தாழ்வாக்கிக் கொண்ட இந்திய மக்களுக்குத்தான் ஆற்றப்போகும் பணி பற்றிச் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகையில் கூட 'எனது பணி என் குருநாதரின் (இராமகிருஷ்ணபரம ஹம்சரின்) போதனைகளையோ வேதாந்தத்தையோ பரப்புவதல்ல; மாறாக, மக்களுக்கு ஆண்மையை ஊட்டுவதுதான் என்றுரைப்பர்.

அய்யா வைகுண்ட சுவாமிகளும் மக்கள் தன்னில் தாழாது தன்மானமும் சுயமரியாதையும் கொண்டு வாழ-

[1] திருநாவுக்கரசர், தேவாரம், 311:1

வேண்டும் என்பதற்காகத் துயில் கொண்டிருந்த தன்மான உணர்வினைத் தட்டி எழுப்பி ஆண்மையை ஊட்டினார். அதற்காக அய்யா பல்வேறான புரட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவற்றுள் ஒன்றே 'தலைப்பாகை' அணிந்திடும் பழக்கமாகும்.

தின்றால் குடித்தால்
தூக்கம் வைக்க நீதியில்லை[2]

எனக் கண்ணீர் வடித்துக் கலங்கி நின்ற மக்களைத் தைரிய மூட்டும் விதமாகக்

கலி என்றால் எலி அல்லவே
கணையாளி வேண்டாமே
மானமாக இருந்தால்
மாளுங்கலி தன்னாலே[3]

எனக் கலி அளிக்கும் ஆயுதமாகத் தன்மானச் சுடரைச் சமுதாய அரங்கினில் ஏற்றி வைத்தார். அனைத்து மக்களும் தன்மானம் கொண்டு வாழ்ந்திடின் ஒருவரை ஒருவர் தாழ்த்திடவோ வாய்ப்பிருக்க மாட்டாது என்பதால் தன்மானம் கொண்டு வாழ்வினை அமைத்திட அய்யா மிக்க நாட்டம் கொண்டு செயலாற்றினார்.

தாழ்வு நிலையில் தத்தளித்த மக்களைத் தட்டி எழுப்பிடும் நோக்கத்தில் அவர்களின் பண்டைய பாரம்பரியப் பெருமைகளை எடுத்துக்கூறி உயர்வு நிலை காணச் சுய மரியாதை உணர்வு ஊட்டினார்.

கூலிக்காரர் மக்களில்லை
கோடி வரிசை பெற்ற மக்கள்[4]

எனப் பெருமைபடக்கூறி, மக்களின் புதிய வாழ்வுக்கு ஆண்மையுணர்வூட்டினார். 'நெய் நீதிய சான்றோர்கள்'

[2] அருள் நூல், ப. 73
[3] அகிலம், ப. 206
[4] அருள் நூல், ப. 71

என்றும் தெய்வ சான்றோர்கள் என்றும், திரைவென்ற சான்றோர்கள் என்றும் மக்களிடம் பழம்பெருமை பற்றிப் பற் பல பேசியது விழிப்பு நிலை ஏற்படுத்தி அஞ்சாமை ஊட்டவே யாகும்.

குகையாளப் பிறந்தவனே
    என் குழந்தாய் எழுந்திருடா
அதிகமுள்ள நீசனும்தான்
    மற்பிடித்து அடிக்கிறானே
படையெடுக்க வா மகனே
    பாருலகம் சுட்டழிக்க
வரிசைபெற்ற நீ மகனே
    மான மறுக்கம் பொறுக்கலையோ[5]
என மக்களை அழைத்ததும்,
    எவனெவனுக்கும் பதறி
இனி மலைய வேண்டாமே[6]

எனப் போர்க்குரல் எழுப்பியதும் அய்யா அஞ்சாமை மிக்க சமுதாயம் காண விழைந்ததின் விளைவேயாகும். அச்சமிலா வாழ்வினில் மக்களைத் தயார்ப்படுத்திட வேண்டித் தங்களின் பூமியைக்கூட 'அச்சமிலாப் பூமி' எனவே வர்ணித்தார்[7]

தீண்டாமை நோய் புரையோடிய சமுதாயத்தில், மேட்டுக் குடியாரின் மேலாதிக்க நிலையினைப் பிரதிபலிக்-கும் முகமாக ஆடை, அணிகலன் அணிவதில் கூட ஒடுக்-கப்பட்ட சமுதாயத்தினர் தன்னிலை இழந்து தத்தளித்தனர். இடுப்புக்கு மேலோ, முட்டுக்கு கீழோ ஆடை அணிய உரிமை மறுக்கப்பட்டு அரை நிர்வாண பக்கிரிகளாக நடமாடினர்[8] தலையில் தலைப்பாகை அணிந்திட ஒருபோதும் அனுமதிக்

[5] மேறபடி, ப. 72
[6] அகிலம், ப. 251
[7] மேற்படி, ப. 5
[8] Samuel Mateer, Land of Charity, London, 1871' p. 45

கப்படவில்லை. தலையில் சுமடு ஏதாவது கொண்டு சென்றால் கூட வைக்கோலையோ அல்லது ஓலையையோ தான் அவர்கள் பயன்படுத்திட முடிந்தது. மாறாகத் தலைப்பாகை அவர்களின் நிலைக்கு உயர்ந்ததாகவே கருதப்பட்டது. இவ்விதமாக

மான வரம்பு மகிமை கெட்டு
ஈனமடைந்து இருக்கின்ற வேளையில்[9]

சுவாமிகள் 'கலியுகத் தீர்வை'யாகத் தோன்றியிருந்ததைக் கண்ணுற்ற பதினெண் சாதியினரும் பார்த்துப்பார்த்து மகிழ்ந்து உறவு நாடி வந்த பொழுதினில் அய்யா தனது தன்மானச் சுடரை ஏற்றி வைத்தார்.

சமதர்ம சமுதாயம் காண—பிறப்பொக்கும் நிலையினை உலகுக்குணர்த்த-தாழ்விலா வாழ்வில் மக்களை அழைத்துச் செல்லத் தன்மானக் கவசமெனத் தலைப்பாகையினைத் தன்னை நாடிவந்தோரை அணியச் செய்தார்[10]. அடிமை உணர்வு நீங்கிடத் தலைப்பாகையுடன், முட்டுக்குக் கீழாகவும் உடை உடுத்தி வருமாறு மக்களைப் பணித்தார். சுயமரியாதை உணர்வுடனான வாழ்வினை அளிக்க அய்யா அன்று ஏற்படுத்திய பழக்கமானது இன்றும் அன்புக்கொடி மக்களின் வழிபாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.

இன்றைய கண்ணோட்டத்தில் நின்று பார்க்கும்போது சாதாரண செயலெனத் தோன்றிடினும் அன்றைய சாதி மேலாண்மை செலுத்திய சமுதாயத்தில் - நடை உடை பாவனைகளில் கூட ஏற்றத்தாழ்வு கற்பித்து, எப்பாவமும்

9 அகிலம், ப. 119

10 பண்டைய பழக்கமான 'உறுமால்கட்டு' நிகழ்ச்சியினை அய்யா புதுவடிவினில் அறிமுகப்படுத்தினார் எனவும் கொள்ளலாம். இரா. பொன்னு, op.cit., ப. 64

அறியா அப்பாவி அவர்ணர்களை அடிமைகளாகக் கருதி அவர்ணர் வர்க்கம் ஏது செய்தாலும் தட்டிக்கேட்க நாதியற்று நடமாடும் தரித்திரங்களாக சில பிரிவினர் உதிரம் வடித்துக் கொண்டிருந்த வேளையில் சரித்திர நாயகராய் அருள் கொண்டு இருள் அகற்ற வந்த அருளாளராய்த் தோன்றிய அய்யாவின் இச்சீர்திருத்த நடவடிக்கை புரட்சி நோக்குடையதும் புதுமையானதும் ஆகும்.

8

முத்திரிக் கிணறு காட்டிய சமத்துவ நெறி

தீண்டாமை நோயில் சிக்கித் தவித்த மக்களுக்குச் சுவாமிகள் கொடுத்த அருமருந்தே முத்திரிக் கிணறாகும். பிறப்பின் வழிநின்று உயர்வு தாழ்வு கற்பித்த சமுதாயத் திற்குச் சுவாமிகள் சமத்துவ நிலையினையும் சகோதர உணர்வையும் இதன்மூலம் அருளினார். பேதம்பேசிப் பிரி-வினையில் வாழ்ந்த எல்லாப் பிரிவு மக்களையும் ஒன்று-படுத்தி ஒற்றுமையாய் வாழ்ந்திடவும், ஒருவருக்கொருவர் உதவியாய் இருந்து உயர்வடையவும் சுவாமிகள் மேற்-கொண்ட முயற்சியின் விளைவே இக்கிணறாகும்.

சுவாமிகளின் சிந்தனையில் உருவான இப்புனிதக் கிணற்றில் தர்ம வைத்தியத்திற்கான மருந்தகமே உள்ளடங் கியிருந்தது. அய்யாவின் சமுதாயப் பணியில் சாதனைப் படைத்திட்ட முத்திரிக்கிணறு இன்றும் மக்களிடையே 'புனிதத்துவம்' பெற்று விளங்குகின்றது.

திருச்சப்பதி கடலுள் விஞ்சைபெற்று, மானுடம் நல்-வாழ்வு பெற்றுச் சிறப்பெய்தவும், தவம் மேற்கொண்டு அற்புதங்களையும், அரிய பல பணிகளையும் அரங்கேற்ற-வுமாக தனது பொது வாழ்வைச் சுவாமிகள் தொடங்கிய வேளையில், அவரது தெய்வீக நிலை அறிந்து ஏராளமான மக்கள் சுவாமிகளை நாடி வந்தனர். இதுபற்றி அகிலம்

சாணான் இடையன் சாதிவணிகனுடன்
நாணாத காவேரி நல்ல துலுக்கபட்டர் முதல்

சூத்திரப் பிரமான் தோல்வாணியன் பறயன்
கம்மாளன் ஈளன் கருமறவன் பரவன்
வெம்மான சுராணி வேகாண்ட நிடையர்
சக்கிலியனோடு சாதி பதினெட்டுகளும்
....பண்பாய் ஒரு தலத்தில
விதி வந்ததென்று மேவிக்குலாவி...
...மிகவே ஒரு தலத்தில
ஆவின் நீருண்டு அகமகிழ்ந்தார்[1]

எனக்கூறுகின்றது. ஒரு வீட்டிலுள்ள கிணற்று நீரைப் பிறிதொருவர் எடுத்துப் பயன்படுத்தினால் தீட்டுப்பட்டு விடும் என்ற பிற்போக்கு எண்ணம் கொண்ட மேட்டுக்குடியினர்க்கு ஒரு சவாலாக அமைந்து, அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றாக இணைந்து வாழ்வதற்கான ஓர் ஒற்றுமை அளிக்கும் கேந்திரமாகச் சுவாமிகள் முத்திரிக் கிணற்றினை ஏற்படுத்தி மகிழ்ச்சியடைந்தார்.

எல்லாத் திசைகளிலிருந்தும் மக்கள் திரள்திரளாகப் பூவண்டன் தோப்பு வந்தேகினர். முத்திரிக் கிணற்றில் புனித நீராடி, தாங்கள் கொண்டு வந்த உணவுப்பொருட்களைச் சமையலாக்கிச் சுவாமிகளுடனிருந்து உண்டு இன்புற்று, அவரது அறவுரைகளை ஏற்றுப் புத்துணர்வுடன் திரும்பினர்.

சுவாமிகள் மக்களுக்குச் செய்த தர்ம வைத்தியத்தினை முத்திரிக்கிணற்று நீரின் துணைகொண்டு செய்த இயல்பினை

மருந்தாகத் தண்ணீர் மண்
வைத்தியங்கள் செய்ததுவும்[2]—எனவும்
தண்ணீரால் எந்த சர்வவியாதி முதல்
மண்ணில் உள்ளோர் யாவர்க்கும் வாய்த்த தர்ம-
மாகவேதான்

[1] அகிலம். ப, 240
[2] மேற்படி. ப, 2

நோய்தீர்த்து வைத்ததல்லால் நேட்டமொரு காசறி
யேன்[3]

எனவும் அகிலம் குறிப்பிடுகின்றது. அய்யாவின் வைத்திய சேவையில் முத்திரிக்கிணற்று நீர் அருமருந்தாகப் பயன்பட்ட விதமறிந்து, ஏராளமான மக்கள் முத்திரிக் கிணற்றுநீரை ஆவின் பால் எனவே எண்ணிக்குடித்து மகிழ்ந்தனர். இதனை அருள்நூல் கூறுகையில்

அதிசயங்கள் வளரும் அரிய கிணற்றின்பாலை
எவரும் குடிக்கிறாரே சிவனே அய்யா[4]

எனத் தெளிவுறுத்துகின்றது.

நோய் தீர்க்கும் அதிசயக் கிணறுகள் உலகெங்கிலும் பரவலாகக் காணப்படுகின்றன. உதாரணமாகச் சவுதிஅரேபியாவில் ஹெயில் நகரிலிருந்து 100 மைலுக்கு அப்பால் அதிசயக்கிணறு ஒன்றுள்ளதாகவும், இக்கிணற்று நீரைக் குடித்து, குளித்தால் தீராத நோய்கள் தீர்ந்து விடும் எனவும், இவ்வதிசயக் கிணற்றில் நீராடி நோய் நீங்கிட வெளிநாடுகளில் இருந்தும்கூட மக்கள் வருவதாகவும் கூறப்படுகிறது[5]. எனினும் சுவாமிகள் ஏற்படுத்திய அதிசயக் கிணறு மக்கள் உடல் பிணியினை மட்டும் தீர்த்துவிடவில்லை; சமுதாயத்தில் நிலவிய தீண்டாமைப் பிணியையும் அகற்றிட வழி கண்டது.

சுவாமிகளிடம் தர்ம வைத்தியம் பெற ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் மட்டும் செல்லவில்லை; மேட்டுக்குடியினரும் சென்று சுவாமிகளை வணங்கினர். 'பிறர் தீண்டா சாதிகள் கோதிக்குடிக்கும்' முத்திரிக் கிணற்றின் நீரினைத் தம்மக்களும் கோதிக் குடித்த நிலைகண்டு குமுறிய மேட்டுச்சாதி

3 மேற்படி, ப. 286
4 அருள்நூல், ப. 23
5 குங்குமம், 6, செப்டம்பர் 1981

சார்ந்த தீண்டாமை நோய் பிடித்த மக்கள் அதனைத் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. எனவே முத்திரிக்கிணற்றில் விஷ-மிட்டுக் குழப்பம் ஏற்படுத்திட முனைந்தனர். எனினும்

நஞ்சிட்ட பாலை மக்கள்
நற்பாலென்றள்ளி உண்ண
நற்பாலாய் இருந்ததையோ[6]

என நஞ்சிட்ட பாலும் மக்களை ஒன்றும் செய்திட முடியாத நிலையினை அருள்நூல் எடுத்துரைக்கின்றது.

அய்யாவின் சீர்திருத்த இயக்கத்தில் ஒவ்வொரு செயலும் மேட்டுக் குடியினரின் பலத்த எதிர்ப்பினைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவர் நடத்திய இயக்கம் ரோஜாமலர்களின் மீது நடத்தப்பட்ட பயணமாக அமையவில்லை; முட்களின் ஊடே நடத்தப்பட்ட கடினமான பயணமாகும் அத்தகைய பயணத்தில் அய்யா கண்ட முத்திரிக்கிணறு சமத்துவத்தை யும் சகோதரத்துவத்தையும் உணர்த்தி நின்றது.

[6] அருள்நூல், ப. 23

9

அன்புக்கொடி ஏற்றினார்

அன்பின் வழியே உயிர்நிலையைக் கண்டனர் ஆன்றோர். அன்பையே தெய்வமாகவும் அவர்கள் போற்றினர். சைவ நாயன்மார்களுள் ஒருவராகப் போற்றப்படும் திருமூலர் 'அன்பே சிவம்' என்று போதித்தார்.

அன்பு ஒன்றே மோட்சத்தை அளிக்க வல்லது எனவும் உலக மாந்தர் தம் துயரங்களைக் களையவும், அகிலம் அமைதியில் வாழவும் அன்பு ஒன்றினால்தான் முடியும் எனவும் எண்ணினார் நம்மோர். அதனால்தான்

துன்ப நினைவுகளும்
சோர்வும் பயமுமெல்லாம்
அன்பில் அழியுமடி![1]

எனக்கூறிய பின்னாளைய கவிஞரும் அன்பின் அமைதியில் ஆட்கொள்ளப்பட்டு

ஊனுடலை வருத்தாதீர்
உணவு இயற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழில் இங்கே
அன்பு செய்தல் கண்டீர்[2]

என்று அன்பு செலுத்துதலையே உலகிற் சிறந்த தொழிலாக அறிவுறுத்திச் சென்றார். அகிலம் சிறக்க வந்த அய்யாவும் அன்புக்கு அடிமைப்பட்டு, சாதிமத பேதங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் அகிலத்தோர் அனைவரையும் ஓர் குடைக்குள்

1 பூம்புகார் பிரசுரம் (பதி.) பாரதியார் கவிதைகள் சென்னை, 1982, 2:76:3

2 மேற்படி, 3: 19:2

கொணரும் விதத்தில் 'அன்புக் கொடி' ஏற்றி அன்புக்கொடி மக்கள் இயக்கம் என்ற புதியதோர் சகாப்தத்தையே தோற்றுவித்தார்[3].

அய்யாவின் வாழ்க்கைப் பயணம் 'அன்பு' அழைத்துச் சென்ற புனிதப் பயணமாகும். அகிலம் அய்யாவின் வாழ்க்-கையினை அறிமுகப்படுத்துகையில்

அன்புபார்த்தெடுத்து
ஆளடிமை கொண்டது[4]

எனவே கூறுகின்றது. அன்பினால் அடிமை கொள்ளப்பட்ட அய்யாவின் வாழ்வு அன்பு நிறைந்தது; அன்பால் அருள் ஒளி வீசியது; அன்பு கொண்டு வாழ்ந்திட வழிகாட்டியது.

அனைத்துச் சமூகத்தவர்களும் அன்பினால் பிணைக்கப்-பட்டு ஓர் ஒன்றுபட்ட சமுதாயம் ஏற்படவேண்டும் என்பதில் அய்யா மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். மக்கள் யாவரும் அன்பின் வழி நின்று வாழ்க்கை நடத்திட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் 'அன்புகுடி கொண்ட மக்கள்'[5] என ஏற்றிப் பெருமைபடக் கூறினார்.

'அன்பு பெரிதெனக் கொண்டிரு'[6] எனத்தனது அன்பர்-களுக்கு அறிவுறுத்தினார். சமய வாழ்வில்கூட அன்பினையே போற்றி நின்றார்.

ஒரு அன்பு மலரெடுத்து
அனுதினமும் பூசை செய்வாய்[7]

[3] பால பிரஜாபதி, 'வைகுண்டசுவாமி வரலாறு', மாலை முரசு (நெல்லை பதிப்பு), வ.எண். 159

[4] அகிலம், ப. 3

[5] மேற்படி, ப. 264

[6] மேற்படி, ப. 205

[7] அருள் நூல், ப. 48

என்று வாசனைமிக்க மலரில் விருப்பமில்லாது அன்பு மலரில் தான் இறைத் தொண்டு செய்திடப் பணித்தார்.

அன்பின் வலிமையினைப் பறைசாற்றிடும் விதமாக அய்யா தனது இயக்கக் கொடியாக அன்புக்கொடியினை ஏற்றினார். அய்யாவின் அன்புக்கொடி காவிநிறத்தில் வெள்ளை தீபச் சுடரைத் தாங்கிப் பட்டொளி வீசிப் பறக்கின்றது. காவிநிறம் 'தியாகத்தையும், வெள்ளைநிறம் தூய்மை, அன்பு, அமைதி முதலியவற்றையும், தீபச்சுடர் மெய்யறிவு, ஈகை, நீதி முதலானவற்றையும் வலியுறுத்துகின்றன.

இற்றைநாளில் தாமரைக்குளம் பதி, சாமித்தோப்புப்பதி, முட்டப்பதி, பள்ளத்துப்பதி, பூப்பதி போன்ற பதிகள் மட்டுமல்லாது குமரி, நெல்லை மாவட்டங்களில் உள்ள ஆயிரக்கணக்கான நிழல் தாங்கல்களிலும் நடைபெறும் விழாக்களின் போது அய்யாவழி மக்கள் அன்புக்கொடி ஏற்றி விழாக்களைத் தொடங்குவதும், கொடியினை இறக்கி விழாக்களை நிறைவு செய்வதும் வழக்கமாகும். தவிரவும், அவதார தின நாளன்று நெல்லை, குமரி மாவட்டங்களில் அய்யாவழி மக்கள் நடத்திடும் ஊர்வலங்களில் அன்புக்கொடி ஏந்திப் பங்கேற்பதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக அமைகின்றது.

அய்யா சீர்திருத்த இயக்கம் நடத்திய அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்நாட்டின் வட பகுதியில் 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற அறநெறி இயக்கம் நடத்திய வள்ளலார் இராமலிங்க அடிகள் (1823-1874) இயக்கத்திற்குத் தனிக்கொடி கொண்டிருந்த சிறப்பினை ஊரன் அடிகள், ''முன்னாளைய ஞானிகள் எவரும் தம்கொள்கைக்குத் தனிக்கொடி கண்டதில்லை; அடிகள் ஒருவரே தமது மார்க்கத்திற்கு தனிக் கொடி கண்டார்'' எனக்குறிப்பிடுவர்[8].

[8] ஊரன் அடிகள், திரு அருட்பா, வடலூர், 1972, ப. 31

மஞ்சள், வெள்ளை நிறத்தாலான சன்மார்க்கக் கொடியை வள்ளலார் 1873-ஆம் ஆண்டில் வடலூருக்கு தெற்கே இரண்டு கல் தொலைவில் உள்ள மேட்டுக் குப்பத்தில் அமைந்திருந்த தனது சித்திவளாகத் திருமாளிகையில் தான் முதன்முதலாக ஏற்றினார். ஆனால் அதற்குப் பல ஆண்டு-களுக்கு முன்னரே அய்யா வைகுண்ட சுவாமிகள் தனது இயக்கத்திற்கான அன்புக் கொடியை ஏற்றி முன்னோடியாகத் திகழ்கின்றார்[9].

அய்யாவின் அன்புக்கொடி அகிலம் அமைதியுடன் இன்ப வாழ்வினில் திளைக்க அன்பொளி வீசி அவனி வாழ் மக்கள் யாவரையும் ஒற்றுமையுடன் சமத்துவம் சகோதரத்துவம் கொண்டு வாழ்ந்திட அழைக்கின்றது. அய்யா காட்டுகின்ற அன்புமலர்கள் தூவியபாதையில் அகிலம் தனது பயணத்தை அமைத்துக் கொண்டால் மக்கள் காணும் வாழ்வு தெய்வீக வாழ்வே!

[9] இரா. பொன்னு, op. cit., ப. 117

10

துவையல் பந்தி - ஒரு அறப்பயிற்சி முகாம்

வைகுண்ட சுவாமிகளின் சமுதாய எழுச்சி இயக்கத்தில் துவையல் பந்தி சிறப்பான இடம் பெறுகின்றது. ''கர்த்தாதி கர்த்தன் கடவுளார்'' என்று சொல்லி எச்சாதியாரும் வந்து சுவாமிகளைத் தொழுதுநின்ற வேளையில் 'சாணானோ சாமி!' என வெகுண்டெழுந்த சண்டாளர் கூட்டம் திருவிதாங்கூர் மன்னனைத் தூண்டிவிட்டு வைகுண்ட நாதனைச் சிறையிலடைத்திட்டது என்பதும், நூற்றுப்பத்து நாட்கள் சிறை இருந்து திரும்பி வந்த சுவாமிகள் தனது அன்பர்களை உலகியல் வாழ்க்கையில் உயர்த்திட வேண்டித் துவையல் பந்திக்கு இட்டுச் சென்றார் என்பதும் அகிலம் தரும் செய்தியாகும். சுத்தத்தால் சோறு போட்டிடவும், ஒழுக்கத்தால் விழுப்பம் பெற்றிடவும் முடியும் என்பதனை நன்குணர்ந்த சுவாமிகள் தூசு படிந்துகிடந்த சமுதாயத்திற்குத் துவையல் நடத்தி ஏற்றம் அளித்திட விழைந்ததின் விளைவே இத்துவையல் பந்தியாகும்.

துவையல் என்பதற்கு ஆடை வெளுக்கை எனவும், துவைத்தல் என்பதற்குச் சேர்த்து வைத்தல் எனவும், பந்தி என்பதற்குக் கூடுதல் அல்லது ஆன்மாவைப் பந்தத்துக்குள்ளாக்குதல் எனவும் பொருள் கூறப்படுகிறது[1]. இப்பொருளின் அடிப்படையில் சுவாமிகளின் துவையல் பந்தியினை இரு வேறு கண்ணோட்டத்தில் நோக்கலாம். சமுதாய நோக்கினில்

1 Tamil Lexicon, vol. IV, University of Madras, 1982, pp. 1909 and 2481.

பார்க்கும்போது, அழுக்குப்படிந்த ஆடைகளைக் கசக்கிக் கட்டித் தூய்மையுடன் வாழ்ந்திட மட்டுமல்லாது ஒற்றுமையுடன் வாழ்ந்திடவும் வழிகாட்டியது எனவும், ஆன்மீக நெறியினில் நின்று பார்க்கும்போது, தனித்தோடிக் கிடந்த ஆன்மாக்களை மேலோனிடத்து பந்தத்துக்குள்ளாக்கிப் பக்தி வாழ்வினில் ஈடுபட்டிடச் செய்தது எனவும் கருதலாம். துவையல் பந்தி மூலமாகத் தவ வாழ்வில் வழிநடத்தி அன்பர்களை ஆன்மீக நெறிப்படுத்த முயன்றார் என்பது வெளிப்படை என்னும், சமுதாயத்தின் ஏற்றமிகு வாழ்வினைக் காண சுவாமிகள் கொண்டிருந்த அவாவையும் உணரமுடிகின்றது.

சாதி அடிப்படையிலான இந்திய சமுதாயத்தில் 'உயர்' சாதியினர் வரிசையில் இடம்பெற்றவர்கள் தங்களைத் தூய்மையாக வைத்துக் கொண்டும், புலால் உணவைத் தவிர்த்து சைவ உணவினையே உட்கொண்டும் இருந்தவர்கள் என்பது சிலரது கருத்தாகும்[2]. சுவாமிகளும் தனது அன்பர்களின் உணவுப் பழக்கத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தார். துவையல் பந்தியில் பங்கு கொள்ள வந்த மக்களைப் பற்றி அகிலம் கூறுகையில்

> மூணு நேரந் துவைத்து உச்சியொரு நேரமதாய்
> வேணும் பச்சரிசி வெற்றிச் சிறுமணியும்
> வேகவைத்து நன்றாய் விரைவாய் மணலிலிட்டுத்
> தாகமில்லாமல் தவசிருக்க வேணுமென்று[3]

வந்தனர் எனக் குறிப்பிடுகின்றது. தவம் மேற்கொள்ள வந்தவர்கள் உட்கொள்ள வேண்டிய உணவு வகையில் அன்பர்களுக்குச் சில ஒழுகலாறுகளைக் கற்பித்து,

[2] Abbe J. A. Dubois, Hindu Manners Customs and Ceremonies, New Delhi, 1973, p. 24

[3] அகிலம், ப. 276

எப்போது மீனுண்டென்றே மிகப்பார்த்து
அப்போததை வேண்டி அரக்குர காயவைத்து
வாயில் எடுத்திட்டு வயிறு வளர்க்கும்[4]

மக்களுக்குப் புதியதோர் வாழ்க்கை முறையினை அமைத்துக்கொடுக்க முயன்றார். துவையல் பந்தியில் கலந்துகொள்ளச் சென்றவர்களின் மனநிலைபற்றி அகிலம் தெளிவுபடக் கூறுகின்றது. ஆசைகளைக் கடந்து அல்லது உதறிவிட்டு உடையோன் பதமே தஞ்சம் எனச்செல்லும் மனித ஜீவன் பரமாத்மாவோடு சங்கமமாகி ஒன்றிவிடுகிறது என்பது பக்திமார்க்கம் தரும் செய்தி. தேவாரம் தந்த நாவுக்கரசரும் ஆண்டவனிடத்துள்ள அன்பின் மிகுதியால்-அளப்பரிய பக்திப் பெருக்கினால் இறைவனை 'அன்பில் அணைத்து வைத்தேனே' எனத் திருவாய் மலர்ந்தருளுவர்[5]. அது போன்று சுவாமிகளுடன் சென்ற அன்பர்கள் பற்றிக் கூறுகையில்,

மண்ணுடன் மனைகளாசை மாடுடன் வீடுவாசை
பெண்ணுடன் பொருளினாசை பூதலப்பொன்னினாசை
எண்ணுடன் எழுத்தினாசை யிறடுபொல்லாசை வேசை
ஒண்ணுடனாசை நீக்கி யுடையவனாசை கொண்டார்[6]

என அய்யாவையே 'அனைத்துமாய்'க்கொண்டு ஆசையுடன் சென்றனர் என அகிலம் குறிப்பிடுகின்றது. அய்யா மீதான பக்தியே அன்பர்களை ஆட்கொண்டு அழைத்துச் சென்றதென கருதலாம்.

துவையல் பந்தியில் கலந்துகொண்ட மக்களின் எண்ணிக்கை சரிவர அறியமுடியவில்லை. மனைவி மக்களுடன் அன்பர்கள் கலந்து கொண்டனர் எனஅகிலம் அறிவிக்கின்றது.

[4] மேற்படி, ப. 281
[5] திருநாவுக்கரசர், தேவாரம், 15:7
[6] அகிலம், ப. 277

பின்னாளில் உள்ளோர் 700 குடும்பங்கள் கலந்து கொண்டதாகக் கூறுவர்[7]. உண்மையை உறுதி செய்திடச் சான்றுகள் உதவவில்லை.

அன்பர்குழாம் சூழத் துவையல்பந்தி நடத்திடச் சென்ற சுவாமிகள் முதலில் வாவைப்பதியில் தான் தவவாழ்வினை மேற்கொண்டார். தவவாழ்வு மேற்கொண்டவர்கள்

அந்திசந்தியுச்சியாக மூணுநேரம்
நந்தியருளால் நல்ல துணிதுவைத்து
உவரிநீர் துவைத்து உவரிநீர்குடித்து
உவரிநீர் தன்னிலூற்று வன்னமே சமைத்து
உச்சியொரு நேரம் உணவு மிக வருந்தி
மச்சிப் புகழ்ந்த விடியவொருச்சாமம்
உகப்பாட்டும் ஓதி யுற்றநாமமிட்டு
வகையாய் விடியவரும் நாழிகையேழில்
துணிகள் துவைத்துத் தோயமதிலிறங்கி
கெணியாய்க் குளித்து கிருஷ்ணர்பதம் போற்றி[8]

இருந்தனர். வாவைப்பதியில் சில காலம் தவசு இருந்தபின்னர் அன்பர்கள் முட்டப்பதி ஏகி அங்கே தங்களது தவவாழ்வினை மேற்கொள்ளலாயினர். முட்டப்பதியில் தான் சுவாமிகள் சமதர்ம காலனி ஒற்றினை ஏற்படுத்தினார் என்பது அன்புக்கொடி மக்களிடையே நிலவிவரும் செய்தியாகும். அகிலம் இதனை வெளிப்படையாகக் கூறவில்லை எனினும்

சூழவணியாய் சுற்றுமதில் போலே
நீளவரங்கு வைத்து நெருங்கப்புரைகள் வைத்து
வைத்தோர் திசையில் வாயிலொன்றாகவிட்டு[9]

7 சி. உமைதாணு & பொ. காசி உதயம், பகவான் வைகுண்ட சுவாமிகள் வரலாறு, கட்டிமாங்கோடு, 1966, பப. 175-76

8 அகிலம், ப. 277

9 மேற்படி, ப. 281

காலனி அமைத்த நிகழ்ச்சி இலைமறைகாயாகக் கூறப்பட்டுள்ளது. துவையல் பந்தி அன்பர்களிடம் ஓதுதலும் துவையலும் வழுவிலாது நடந்தேறிக் கொண்டிருந்தன. அன்பர்களின் தவவாழ்க்கையினைக் கண்டு நீணிலத்துள்ளோர்கள் யாவரும் புகழ்ந்து நின்றனர்.

நடைமுறையிலுள்ள வாழ்க்கை முறையினை மாற்றவோ அல்லது தேவையில்லாததாகக் கருதப்படும் சமுதாயத் திணிப்புகளைக் கைவிடவோ தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் அனுமதிக்கப்படாமலும், நடைமுறையினை மீறி மாற்றம் காண விரும்புவோரை அரசாங்கமும் மேட்டுக்குடியாரும் அடக்குமுறை வாயிலாகக் கொடுமைபடுத்திப் பழைய நிலைக்கே கொண்டு செல்வதும் வழக்கமானதாகும். சுவாமிகள் துவையல் பந்தி மூலமாக மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் காண முயற்சித்ததும் மேட்டுக்குடியினரின் அச்சுறுத்தலில் இருந்து தப்பவில்லை. தவமிருந்த அன்பர்களை அவர்கள் அல்லல் படுத்தினர்.

பண்டார வேசம் பத்தினியாள் பெற்றமக்கள்
கொண்டாடி நன்றாய்க் குளித்துத் துவைத்ததனைக்
கண்டு மாபாவி கலைத்து அடித்தனன்[10]

என அகிலம் துவையல் பந்தியின் மீதான மேட்டுக்குடியினரின் எதிர்ப்பினைக் கூறுகின்றது.

எனினும்—

துவையல் முடங்கவில்லை. அன்பர்கள் தினந்தோறும் சேவிப்பதும் உகப்பாட்டு ஓதுவதுமாய் இருந்தனர். துவையல் பந்தியில் அய்யா அளித்த பயிற்சியினைப் பெற்று வெற்றியுடன் திரும்பிய அன்பர்களுக்கு மக்கள் அன்னமும் ஆடையும் கொடுத்து அன்புடன் அமுதூட்டினர். அன்று அவர்-

10 மேற்படி, ப. 2

களுக்கிட்ட கஞ்சிதர்மமே காலம் காலமாகத் தொடர்ந்து, இன்றும் நிழல் தாங்கல்கள் தோறும் தவணைக்கஞ்சி என்ற பெயரில் அளிக்கப்பட்டு வருவதாகவும் கூறுவர்[11].

சுவாமிகள் அன்று புகட்டிய தூய்மைநெறி அவரது அன்பர்களை ஏனையோரைக் காட்டிலும் சுத்தமாக வாழ்ந்திட வழிவகை செய்தது. ''It is true that their bodies and their houses are more clearly than those of the rest''[12], என இலண்டன் மிஷன் சங்கத்தின் வருடாந்திர அறிக்கைகள் இதனைத் தெளிவாக்குகின்றன.

சுருங்கக் கூறின், ஆன்மீக நெறியில் மக்களை அழைத்துச் சென்றிட நல்லதொரு பயிற்சி முகாமாக-தூய்மை வாழ்வு புகட்டிடும் ஒரு சீர்திருத்த அமைப்பாக—ஒற்றுமை வளர்க்கும் ஒரு நன்னெறிக் கூடமாக-சமத்துவம் காண்பதில் மிக்கஆர்வம் கொண்டு நிற்கும் ஒரு பண்பாட்டுக் கழகமாக அய்யாவின் இயக்கத்தில் துவையல் பந்தி அமைந்த பாங்கினை அறிந்திடலாம்.

11 நேர்முகப்பேட்டி, R. இராமசுவாமிநாடார், பொற்றையடி 11-3-1981.

12 Annual Report of the Travancore District Committee in connection with the L.M.S., Nagercoil Mission District, 1892. p. 14.

11

பெண் உரிமை காக்க...

'இறைவன் தனியனாய் நின்று எல்லோரிடத்தும் அருள் பாலித்திட இயலாது என்பதினாலேதான் அன்பின் திருவடி வங்களாகப் பெண்களைப் படைத்து அன்பு பொழிந்திடச் செய்தனன்' என்பர் உய்த்துணர்ந்த மேலோர். எனவேதான்

ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல

என ஈன்றாளையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு பெண்மையைத் தெய்வீக நிலையில் ஏற்றிப் போற்றிடலாயினர் உயர்ந்தோர். பெண்மையின் அன்பு மழையில் குளிர்ச்சியுற்ற இதயங்கள் பெண்மையின் மேன்மைபற்றிப் பெருமைபடப் பற்பல பேசிடினும், சமுக நிலையில் பெண்கள் இன்னமும் நிறைவெய்திடாத நிலையில்தான் உள்ளனர் என்பது உண்மை.

பத்தொன்பதாம் நூற்றாண்டைய இந்திய சீர்திருத்த இயக்கங்கள் யாவும் பெண்களின் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டிருந்தன. சிலபல மாற்றங்களையும் ஏற்படுத்திச் சென்றன. அய்யாவின் சீர்திருத்த இயக்கத்தில் பெண்கள் உரிமைக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சமுதாயத்தில் அரிய மாற்றம் ஏற்பட்டிடக் காரணமாய் இருந்த பாங்கினை அறியலாம்.

நாள் முழுக்கக் கடுமையாக உழைத்த போதிலும் 'உண்ண உணவின்றி, பசியையும் பட்டினியையும் தனதாக்கிக் கொண்டு' தென் திருவிதாங்கூரில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களின் நிலைமை பற்றி பிஷப் சாமுவேல் மாற்றீர் குறிப்பிடுகையில் '... இப்பகுதியில் பெண்ணாய்ப்

பிறப்பதே ஒரு கொடிய பாவமான செயல்' எனக் கூறுகின்றார்[1].

'கணவன் கள்வனல்லன்' என்பதை நிலைநாட்ட, தவறிழைத்த மன்னவனைத் தண்டிக்க, கோநகர் சீறிக் கற்பின் திறனைக் காட்டும் விதமாகத் தன் இடது மார்பகத்தைத் திருகி எறிந்து எரியூட்டிய பத்தினிக்குக் கோயில் அமைத்து விழா எடுத்துச் சிறப்பு செய்த நாட்டில் அரசாங்கம் வகித்திருந்த வரியினைச் செலுத்த முடியாத அப்பாவி மக்களை இம்சைப்படுத்தி வரி வசூலித்தலைக் கடமையாகக் கொண்டு பணியாற்றிய வரி வசூலிப்போனிடமே தனது மார்பகத்தைத் தானே அறுத்து அளித்திட்ட அவல நிலையில்[2] திருவிதாங்கூரில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்கள் வாழ்ந்தனர்.

'ஆடையில்லாதவன் அரை மனிதன்' என இழித்துப் பேசிய நாட்டில்-ஆடையில்லாது திரிந்த அமணர்களை அவதூறு கூறிய நாட்டில் தோற்றத்திலே 'ஒடுக்கப்பட்டவர்கள்' என்பதைக் கண்டறியும் விதத்தில் விரும்பிய வண்ணம் உடுக்கை அணிய அனுமதிக்காது, திணிக்கப்பட்டுள்ள வழக்குப்படி மட்டுமே உடை உடுத்துக் கொள்ள அனுமதித்திருந்தனர். மேட்டுக் குடியினரின் கெடுபிடி காரணமாக அரை மனிதர்களாக அரைகுறை ஆடையுடன் ஒடுக்கப்பட்டவர்கள் நடமாடினர்.

பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணிந்திட பிற்போக்கு எண்ணம் கொண்ட மேட்டுக்குடியினர் இடம் தர

1 Samuel Mateer, Native Life in Travancore, London, 1883, p. 207

2 N. R. Krishnan, Ezhavas Yesterday and Today (Malayalam) Engandiyur, n. d., pp. 175-80

வில்லை[3]. இடுப்பில் குடம் எடுத்துச் செல்லக்கூட உரிமையற்றவர்களாய் அவர்கள் வாழ்ந்தனர்[4].

ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களின் நிலைகண்டு வருந்திய சுவாமிகள்

பெண்பாவம் பாராதே
பேணியிரு என்மகனே[5]

என அறிவுறுத்தி அவர்களின் இழிநிலையினைத் துடைத்திடப் பணித்தார். தன்னைத்தேடி வந்த மக்களிடத்தில் தோள்சேலை அணியவும் இடுப்பில் குடம் எடுத்துச்செல்லவும் கோரிக்கை விடுத்தார்.

அய்யாவின் அருளுரையினை ஏற்றுப் பெண்கள் தங்கள் வழக்கத்தினை மாற்றி மேட்டுக்குடியினரைப் போன்று உடுக்கை அணிந்து வெளிவரலாயினர். ஆனால் மேட்டுக்குடியினர் ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களின் மாறுதலான பழக்க வழக்கம் கண்டு வெகுண்டெழுந்து தாக்குதல் நடத்தி அச்சுறுத்தினர்[6]. அருள்நூல் இதுபற்றிக் கூறுகையில்

பூமக்கள் நீதமுடன் போட்ட
தோள்சீலை தன்னைப் போடாதே
என்றடித்தானே சிவனே அய்யா
என் மக்கள் சான்றோர்கள்
இடுப்பில் எடுத்தகுடம் ஏண்டி
இறக்கென்றானே சிவனே அய்யா[7]

[3] C. Silvester Horne, The Story of the L. M. S., London, 1908, p 293.
[4] Samuel Mateer, Land of Charity, p. 41
[5] அகிலம், ப. 209
[6] C. M. Agur, Church History of Travancore, Madras, 1903, pp. 568-70
[7] அருள்நூல், ப. 27

எனக் குறிப்பிடுகின்றது. சுவாமிகளால் தூண்டப்பட்ட உரிமைப் போராட்டம் அவரது காலத்தில் வெற்றி காண முடியவில்லை எனினும் அவர் மறைந்த சில வருடங்களுக்குள் தோள்சேலைப் போராட்டம் என ஒரு மாபெரும் மக்கள் கிளர்ச்சியாக உருவெடுத்து வெற்றி கண்டது.

பெண்களின் கற்புநெறி தவறா வாழ்க்கையினைச் சுவாமிகள் வலியுறுத்தினார். சோழநாட்டு பெண்களின் நிலை பற்றிக் கூறுகையில் 'கனிவான பெண்கள் கற்புநிலை மாறாமல் வாழ்ந்தனர்' எனக்கூறி, கல்கதவு போல கற்பு மனக் கதவு'[8] என்று கற்பின் திண்மையைப் பெருமைபடக் கூறினார். மேலும் தவறான ஆட்சி புரிந்து மக்களுக்கு பெருஞ்சுமையாக தோன்றிய நீசனின் ஆட்சியினை அகற்றிட உரிமைக்குரல் எழுப்பிய சுவாமிகள், 'நல்ல பெண்ணின் கற்பே உன் நாட்டை அழித்து விடும்'[9] என்றே கற்பையே ஒரு சக்திமிக்க ஆயுதமாக வழங்கினார்.

துறவுக்கு முக்கியத்துவம் அளிக்காது, இல்லறத்தையே நல்லறமாகப் போற்றிய சுவாமிகள், பெண்கள் மணமாகித் தாய்மையடைந்து இனிய வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். எனவே தான் கஞ்சனின் வாழ்வைப் பற்றிக் கூறும்போது திருமணமாகாப் பெண்களைத் தங்கையர்களாகக் கொண்டிருந்த கஞ்சனை நோக்கி நாரதர் உரையாக,

வாழாத மங்கையரை வைத்திருந்தால் ராச்சியத்தில்
தலைகெடுங்காண் சாத்திரந்துக் கேறாது
வானம் வந்து சிக்கும் மாரியது பெய்யாது
கோத்திரத்துக்கேறாது குடும்பம் தழையாது
மானம் வரம்புகெட்டு மனுநீதி தானழிந்து

[8] அகிலம், ப. 9
[9] மேற்படி, ப. 115

கோட்டை யழியும் குளங்கரைகள் தானழியும்

நாட்டை அழிக்குமடா நல்ல கன்னி காவல் வைத்தால்[10]

என அகிலம் கூறுகின்றது.

மேலும் இல்லறத்தில் நின்று இறைவனை ஏத்தி இன்ப நிலை அடைந்திடுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆகவே தான்

ஆணும் பெண்ணுமாய்க் கூடி

ஆசாரம் செய்திடுங்கோ[11]

என ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதுதான் உலகியல்நெறி என்பதை ஊக்குவித்த சுவாமிகள், மேட்டுக்குடியினர் திணித்திருந்த இழிநிலை அகற்றி, சமத்துவ நிலையில் வாழ்வினை அமைத்திடுவதற்கான வழிமுறைகளை தன்னகத்தே கொண்டு சமுதாயப்பணி ஆற்றியதின் விளைவாக மக்கள் கிளர்ந்தெழுந்து, உரிமை காக்கக் களம் புகுந்தனர். வெற்றியும் கண்டனர்...

10 மேற்படி, ப. 41

11 அருள்நூல், ப. 39

12

பூவண்டனார்

'ஒன்றே குலம்' என்ற ஒப்பற்ற நெறியில் அனைத்துப் பிரிவினரின் மேன்மை நிலையில் அய்யாவின் இயக்கம் நாட்டம் கொண்டிருந்த போதிலும் சில குறிப்பிட்டப் பிரிவினர் இயக்கத்தில் தங்களை மிகுதியாக ஐக்கியப் படுத்திக் கொண்டனர். அவர்களுள் யாதவர் சமூகத்தவர் குறிப்பிடத்தக்கவர்களாவர். அய்யா 'ஆயர் குலத்தை ஆளாக்கிக்கொண்டதாகவே' அகிலம் தெளிவாக்குகின்றது[1]. ஆளாக்கப் பட்டதாகச் சித்தரிக்கப்படும் ஆயர்குலத் தோன்றலான பூவண்டர் பெருமானாரின் பணி அய்யாவின் இயக்கத்துள் மின்னி மிளிர்கின்றது.

அய்யாவின் வாழ்வினைக் கூறுகின்ற அம்மானை பூவண்டனார் பற்றிப் பல இடங்களில் பேசுகின்றது. அதோடன்றி அம்மானையில் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக ஒரு தனிநபர் பேசப்படுகிறார் என்றால் பூவண்டனாரைத் தான் நாம் பார்க்க முடிகின்றது. இயக்கத்தில் பூவண்டனார் கொண்டிருந்த தொடர்பினை அம்மானைச் செய்திகள் உறுதிப்படுத்துவனவாய் உள்ளன.

பூவண்டனாரின் வாழ்க்கை வரலாறு சரிவரத் தெரியவில்லை. திருவிதாங்கூர் அரசாங்கத்தில் பணியாற்றி வந்ததாக மட்டும் அகிலம் அறியத் தருகிறது. மேலும் இற்றை நாளில் சாமிதோப்பு என்று வழங்கப்படும் சாஸ்தான் கோவில் விளை கிராமம் சுவாமிகள் காலத்தில் பூவண்டன்தோப்பு

[1] அகிலம், ப. 1

என அழைக்கப்பட்டதாகவும் தெரிகின்றது. அரசுப் பணிக்-காகப் பூவண்டனார்க்கு இப்பகுதியில் நிலம் வழங்கப்பட்-டிருந்ததும், சுவாமிகள் யாதவப் பெருமானாரின் நிலத்தில் ஒரு பகுதியில்தான் சிலகாலம் வாழ்ந்தார் என்பதும் இவ்-வட்டார மக்களிடையே வழங்கிவரும் செய்தியாகும்.

சுவாமிகள் வாழ்க்கையில் சுசீந்திரம் சம்பவம் ஒரு திருப்புமையமாகவே விளங்கிற்று. சுவாமிகளின் வளர்ச்சியில் வெறுப்பு கொண்ட மேட்டுக்குடியினர் சுசீந்திரம் வந்த மன்னனிடம் முறையீடு செய்கையில்

> நமக்குயிறை யிறுத்து நாடுழியங்கள் செய்யவும்
> குழுக்காயினம் பெருந்த கூண்ட சாணாரினத்தில்
> மெய்கொண்ட பூமியெல்லாம் வேறொருவராளாமல்
> நான்தான் முடிசூட்டி நாடுகட்டி ஆள்வேன் என
> தான்தான் உரைபகர்ந்து சாதி பலதும் வருத்தி
> ஒரு தலத்தில் ஊட்டுவித்தான் உற்ற நீரானதையும்
> அருகிருக்கும் சாணார்க்கு அதிகவிதி தோணுதுகாண்
> ஆகாத பொல்லாரை அழித்துப் போடுவேன் என்றும்
> சகாவரங்கள் சாணர்க்கு ஈவேன் என்றும்
> சொல்லியிருக்கிறான் சுவாமி வைகுண்டமென்று
> தொல்லுலகில் இந்தச் சொல் கேட்குது[2]

என்று விண்ணப்பித்ததும், மனம் புழுங்கி ஆங்கிருந்த சாஸ்-திரிகளிடம் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தோனாய் மன்னன், 'இப்படியே வந்து பிறக்க வேணுமென்றால் போத்தி நம்பூதிரி பிராமண குலத்தில் பிறக்காமல் இந்தப் பிறர்தீண்டா சாண்குலத்தில் பிறக்க வருவரோ நாராயணரும்! இந்தச் சாணான் சுவாமியென சமைந்ததெல்லாம் பொய்யே'[3] என இழித்துரைத்ததும் யாவையும் கேட்டுக்கொண்டிருந்த

[2] மேற்படி, ப. 254
[3] மேற்படி, ப. 255

யாதவர் கோமான் ''எளிமைக் குலங்கள் என்று எண்ண வேண்டாம்; இறைவனார்க்குச் சாதிபேதம் கிடையாது; அங்கிங்கெனாதபடி எங்கெனும் நிறைந்து நிற்பவர் அவர்; எச்சாதியார்க்கும் பொதுவானவர்'' எனப் புரோகிதர் தந்த புராணங்களில் இருந்தே சான்றுகள் எடுத்தியம்பி, 'சுவாமிகள் பற்றிய பிரச்சனையை விடுத்து, இவ்விடம் விட்டுத் திருவ-ணந்தை திரும்புவோம்''[4] என ஆலோசனை கூறி நின்றார்.

ஆனால்—

பூவண்டனாரின் மொழி கேட்டு வெகுண்டெழுந்த மன்னன் 'கருப்புகட்டிச் சாணான் கையில் கைக்கூலி வாங்கிக் கொண்டு மழுப்ப வந்ததாக' அவதூறு பேசப் பூவண்டனார் அமைதியுடன்

மழுப்பில்லைக் கேளு மாண்டு நான் போனாலென்ன
வழுப்பில்லை உமக்குத் தூண்டல் வளருது அவரிடமே
கண்டாய்
கழுத்திலே உமது கையால் கத்தியை வாங்கி வைப்பாய்
ஆனையும் படையும் உந்தன் அரண்மனைக் கோவில்-
காலும்
சேனையும் குடையும் வியாழச் செல்வமும் சிறப்புமெல்-
லாம
எனமுமிகவேதோற்று எரிந்து நீ கரிந்து சாவாய்
நான் இதைச் சொல்லவில்லை நாரணர் உரைத்தார்[5]

என்று திடமுடனே பதிலுரைத்ததும் வெகுண்டெழுந்த மன்னன் பூவண்டனாரைச் சிறையிலிடச் சொன்னான் எனவும் அகிலம் கூறுகின்றது.

அடுத்து—

[4] மேற்படி, பப. 255-57
[5] மேற்படி, பப. 257-58

திருவனந்தபுரத்தில் மன்னன் இழைத்த சோதனைகளையும் வேதனைகளையும் சுவாமிகள் சாதனைகளாக்கிக் கொண்ட வேளையில், மன்னன் "தானேயிருந்து தான் சிந்திக்கும் பொழுதினில் சுவாமிகளின் விடுதலைக்காகப் பூவண்டனார் மன்னனிடம் விண்ணப்பித்து நின்றவேளையில் சுவாமிகளின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறியதனை

...நல்ல தன்மை மிகு மானமுள்ளோன்
கோணா மனதுடையோன் குணமுடைய நல்லவன்காண்
நேர்மை ஒழுங்குள்ளோன் நேர் சொல்லொருவர்காண்
ஓர்மையுடையோன் உபகாரன் இவன்...[6]"

என அகிலம் பெருமைப்பட உரைக்கின்றது.

சுவாமிகளிடத்து வைத்திருந்த பக்தியின் மிகுதியால் ஆளும் வேந்தனையும் எதிர்த்து, சுவாமிகளுக்கு ஆதரவாக வாதிட்ட பூவண்டர் பெருமானாரின் அஞ்சாமைத்திறமும், சுவாமிகளின் விடுதலைக்காக மன்னனிடம் தொழுது முறையிட்ட அன்பு வேண்டுதலும் ஆக "பூவண்டனாரின் வாழ்வினைச் சுவாமிகளின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட உன்னத வாழ்வு" எனக் கருதல் கூடும்.

[6] மேற்படி, ப. 274

13

சமபந்தி போஜனம்

முன்னேற்றம் நோக்கிய நீண்டதோர் போராட்டத்தில், 'எல்லோரும் சமம்' என்ற நிலையினை அடைவதற்காக மானிட சமுதாயம் மேற்கொண்ட முயற்சிகள் பற்பல. 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டவர்கள் நடத்திய மாபெரும் புரட்சியில் சமத்துவமே முப்பெருந்தேவைகளுள் ஒன்றாயிற்று. 1917 ஆம் ஆண்டு ரஷிய மண்ணில் நடந்தேறிய புரட்சியும் 'சமதர்ம சமுதாயம்' நோக்கிய மக்கள் எழுச்சியாகவே அமைந்தது.

இந்தியாவில் சமூக, சமய உரிமைகளை அனைவர்க்கும் பகிர்ந்து கொடுக்கும் முயற்சியில் சீர்திருத்த இயக்கங்கள் பல தோன்றலாயின. எனினும் அனைத்து முயற்சிகளும் சமய வட்டத்துக்குள் சிக்குண்டமையால் சாதி வழியதான ஏற்ற தாழ்வுகளை அகற்றுவதில் தோல்வியையே தழுவின. மேலும் ஏற்ற தாழ்வு மனப்பான்மையூடே தோன்றிப் பரவிய தீண்டாமை நோயினை அகற்றுவதில் தீவிர கவனம் செலுத்திட இவ்வியக்கங்கள் தவறிவிட்டன.

தீண்டாமை நோயில் புரையோடிய சமுதாயத்திற்கு வகுக்கப்பட்ட கண்டனங்களும் எதிர்ப்புக் கணைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிக அதிகமாகவே சீர்திருத்தவாதிகளிடமிருந்து வெளிவந்தன. எனினும் '''என்னைத் தொடாதே; நான் புனிதமானவன்' என்பதுதான் இப்போது நமது சமயம். இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நிலைமை இப்படியே நீடிக்குமானால் நாம் ஒவ்வொருவரும் பைத்தியக்கார

ஆஸ்பத்திரியில்தான் இருப்போம்''[1] என வெளிப்படையாகக் கூறுகின்ற அளவுக்கு தீண்டாமை நோயின் தாக்கம் அதிகமாகவே காணப்பட்டது.

தீண்டாமை நோயினை அகற்றி சமுதாயத்தின் நலன் காக்க வைகுண்ட சுவாமிகள் அளித்த சிகிச்சைகள் பல. அவரது அனைத்துச் சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளும் தீண்டாமையினைக் களைந்தெறிவதில் சிறப்பான பங்காற்றின. அவைகளில் ஒன்றுதான் அவர் நடத்திய சமபந்தி-போஜனமாகும்.

அல்லல்பட்டு ஆற்றுவாரின்றி அரற்றிக் கொண்டிருந்த அனைத்துப்பிரிவு மக்களும் சுவாமிகளின் ஆதரவில் அமைதி-காணத் திரள்திரளாகக் கூடிவந்தனர். சுவாமிகள் அனை-வரையும் ஏற்று, உற்றதுயர் கேட்டு, ஆறுதல் கூறி சீரிய வாழ்வுக்கு வழிகாட்டினார்.

சுவாமிகளின் அன்பு அரவணைப்பில் அகம் மகிழ்ந்த அன்பர் கூட்டம் தத்தம் வீடுகளிலிருந்து உணவுப் பொருட்-களை எடுத்துச் சென்று அவருக்கு அளிக்க, அவரும் அனை-வருடன் சேர்ந்து ஒருங்கிருந்து உண்டு மகிழ்ந்தனர்.

எவ்வித வற்புறுத்தலுமின்றி மக்கள் தாங்களாகவே முன்வந்து அரிசி, காய்கறிகள் கொண்டுவந்து, முத்திரி கிணற்று நீரைக் கொணர்ந்து, அதில் சமையலாக்கி சுவாமிக-ளோடு இருந்து உணவருந்தி இன்புற்றுச் சென்றனர். வேறுபாடுகளைக் களைந்து, உயர்வு தாழ்வு என்ற பேத-மின்றி, பல்வேறு பிரிவு மக்களும் ஒன்றாய் அமர்ந்து உண-வருந்தியமை அன்றாட சாதாரண நிகழ்வுகளாயின.

ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ இன்றி அமைதியான முறையில் பல்வேறு பிரிவு மக்களிடையே சமத்துவ, சகோ-

[1] ஏக்நாத் ரானடே op. cit, ப. 94

தரத்துவ உணர்வினை சுவாமிகள் இதன் மூலம் ஏற்படுத்தி-னார். பிரிவினைப் பேதங்களையும் தீண்டாமை நோயினை-யும் அகற்ற வேண்டுமெனில் வெவ்வேறு நிலைகளில் உள்ள மக்களிடையே ஒரு சுமூகமான உறவு இருத்தல் வேண்டும் என்பதை நன்குணர்ந்த சுவாமிகள், நாடிவந்த பதினெண் பிரிவினரையும் ஒரே நிலையில் வைத்து நோக்கினார்.

ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒற்றுமையுணர்வையும் சமத்துவ நெறியினையும் புகட்டி ஒன்றுபட்ட சமுதாயத்தை அமைத்திட சுவாமிகள் எடுத்துக்கொண்ட முயற்சியே அவரது சிறைவாசத்திற்கான முக்கிய காரணங்களுள் ஒன்றாயிற்று. ஏனெனில், சுவாமிகள் சிறைவைக்கப்பட்டிருந்த போது, பூவண்டன்கோன் அவரது விடுதலை வேண்டி மன்னனிடம் முறையீடு செய்தவேளையில்

இப்போது இவன் இனத்தில் எத்தனை பேர்க்கானாலும்
ஒப்போடுறவாய் ஒத்திருந்து வாழ்வதல்லால்
சர்ப்பம் போலொத்த சகல சாதி தனக்கும்
உத்திரவென்று உபாயமாய் ஏதும் சொல்லாமல்
மற்றபிற சாதிகளை வாவென்று உரையாமல்
தன்னொரு சாதி தன்னோடு இருப்பதல்லால்
பின்னொரு சாதி மிதனம் வைத்துப்பாராமல்
இனத்துடன் சேர்ந்திருப்பேன்[2]

என சுவாமிகளிடம் மன்னன் உறுதிமொழி கேட்பதிலிருந்து சமுதாயப் பிரிவுகளிடையே ஒற்றுமை ஏற்படுவதை அரசாங்-கம்கூட விரும்பாத நிலை தெளிவாகின்றது. எனினும் சுவாமிகள் தனது இயக்கத்தில் அனைத்துப் பிரிவினரையும் அரவணைத்து அமைதியான, சாதிபேதமற்ற ஒன்றுபட்ட சமுதாயத்தினை அமைப்பதில் தீவிரம் காட்டினார்.

[2] அகிலம், ப. 274

ஒன்றுபட்ட சமுதாயம் காண 'ஒரே நிலை'யில் அனைவரையும் கொண்டு வரவேண்டும் என்பதால் வேறுபாடுகளைக் களைய சமபந்தி போஜனம் நடத்தினார். அனைத்துத் தரப்பு மக்களுடன் உட்கார்ந்து உணவு உண்ட சுவாமிகள் தனது சீடர்களையும் வெவ்வேறு சமூகத்தவர்கள் இல்லங்களுக்குச் சென்று உணவு உண்டு வருமாறு பணித்தார். சுவாமிகளின் இம்முயற்சி சமுதாயத்தில் ஒரு ஐக்கிய உணர்வு ஏற்பட வழி வகுத்தது.

உயர்ந்தவன், தாழ்ந்தவன், தீண்டத்தகாதவன் என்ற வேறுபாடு இல்லாது 'ஒன்றே குலம்' என்ற ஒப்பற்ற நெறியில் அனைவரையும் சுவாமிகளின் சமபந்தி போஜன நடவடிக்கை அழைத்துச் சென்றது. இன்றும் அவரை மூலாதாரமாகக் கொண்டு செயல்படுகின்ற பதிகளிலும் நிழல்தாங்கல்களிலும் 'பால் வைப்பு' என்ற பெயரில் பல்வேறு சமூகத்தவர்கள் ஒன்றாய் அமர்ந்து உண்பான் (உணவு) கொள்வது வழக்கமான செயலாக விளங்குகின்றது. அய்யாவழி அன்பர்கள் பதிகளுக்கு உணவுப்பொருட்கள் எடுத்துச் சென்று, சமைத்து பண்டாரங்களுக்கும் ஏனையோர்க்கும் அளித்துத் தாமும் உட்கொள்வது இன்றும் நடைமுறையில் காணப்படுகிறது.

தீண்டாமையினை அகற்றும் விதமான - மானிட சகோதரத்துவத்தினை வளர்க்கும் முகமாக - ஒற்றுமையையும் சமுதாய உறவையும் நிலைநாட்டுவதாக - சமத்துவ உணர்வைத் தூண்டுவதாக சுவாமிகள் நடத்திய சமபந்தி போஜனம் தனது நோக்கத்தில் ஓரளவு வெற்றியினைப் பெற்றது. இது அன்புக்கொடி இயக்கம் தந்துள்ள தாக்கத்தின் வாயிலாக - நடைமுறையிலுள்ள இயக்கத்தின் சமய சின்னங்களாக விளங்குகின்ற பதிகள், நிழல்தாங்கல்கள் மூலமாக தெளிவாகின்றது.

14

பொருளாதார நலம் காண...

அய்யா வைகுண்டசுவாமிகள் தனது சமுதாய சீர்திருத்த இயக்கத்தில் மக்களின் பொருளாதார மேம்பாட்டிலும் தீவிரக்கவனம் செலுத்தினார். அய்யா தனது இயக்கத்தினை ஆரம்பித்தவேளையில் சமுதாயம் அவர்னர், சவர்னர் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவர்னர்களின் வாழ்வு வறுமையில் வாட்டமுற்றது. ''உண்ண உணவுமின்றி உடுக்க உடையுமின்றி, படுக்க இடமுமற்று பரிதவித்தனர்'' என அவர்களின் துயர்நிலைப்பற்றி அகிலமும் கூறுகின்றது[1].

கோனோக்கி வாழும் குடிகளைப் பேணி அவர்களின் குறைகளைந்து நன்மை பயக்கும் விதத்தில் முறைசெய்ய வேண்டிய மன்னன் புரோகிதர்களின் ஆதிக்கத்தில் கட்டுண்டு சமயச் சடங்குகளில் ஏராளமான அளவில் செலவுசெய்து மேட்டுக்குடி மக்களின் சுகபோக வாழ்வுக்காகத் துணைநின்றான். சமுதாயத்தில் உயர்மட்டத்தில் உள்ள சிலரின் இன்ப வாழ்வுக்காகப் 'பலர்' பொருளாதார நிலையில் நசுக்கப்பட்டனர்.

மக்களின் நலனுக்காகச் செயல்படவேண்டிய அரசாங்கம் ஆட்சியாளர்களின் நலனுக்காக- அவர்களின் ஆரவார வாழ்வுக்காகச் செயல்பட்டது. பொருளாதார நிலையில் நசுக்கப்பட்டவர்கள் காலம் முழுவதும் உழைத்து உழைத்து உடல்

1 அகிலம், ப. 354

ஓய்ந்திட வேண்டிய நிலையில் வாழ்க்கைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

''எப்போதும் பாடுபடு; எப்போதும் உழைத்துக்கொண்டிரு; உழைப்பிலே சுகமிருக்கிறது; வறுமை நோவு முதலிய குட்டிப் பேய்கள் எல்லாம் உழைப்பைக் கண்டவுடன் ஓடிப் போய்விடும்'' என்று கொள்கை முழக்கம் செய்த நாட்டில் நாள் முழுக்க உழைத்த போதிலும் திருவிதாங்கூர்வாழ் அவர்னர்களால் வறுமை, நோவு எதையும் ஓட்டமுடியவில்லை. மாறாக, அவர்களுடன் ஒட்டி உறவாடியது பசியும் பட்டினியுமே.

பொருளாதார வாழ்வில் உயர்நிலை வகித்த மேட்டுக்குடியினர்க்கு வரிசெலுத்துவதில் சலுகையும், விலக்கும் அளிக்கப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் மொத்த வரிச் சுமையும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்மீது சுமத்தப்பட்டிருந்தது. கொல்லம் 1040ஆம் ஆண்டைய ஆட்சி அறிக்கை மக்களிடமிருந்து அரசாங்கம் 110 வரிகளை வசூலித்ததாக நீண்டதோர் வரிப்பட்டியலை அறிவிக்கின்றது. அகிலமும் இதுபற்றி மிகுதியாகவே கூறுகின்றது.

தாலிக்குவாயம் சருகுமுதலாயம்
காலிக்குவாயம் கம்புதடிக்காயம்
தாலமதேறும் சான்றோருக்காயம்
தூலமுடன் அருவாள் தூருவட்டிக்கேயாயம்
தாலமதுக்காலம் தரணிதனிலே வளர்ந்த
ஆலமரம்வரைக்கும் அதிகயிறை வைத்தனனே
வட்டிக்குமாயம் வலங்கைச் சான்றோர்கருப்புக்
கட்டிக்குமாயங் கடுநீசன் வைத்தனனே[2]

எனவும்,

கரியிறை பாட்டவிறை கண்டபாட்டவிறையும்

[2] மேற்படி, ப. 112

தரிசிறை காணாத தறைபாட்ட விறையும்
ஆமிசங்களில்லாத அன்றீதவம்பிறையும்[3]

அரசாங்கம் வசூலித்தது எனவும் விரிவுபடவே அகிலம் கூறிச்செல்கின்றது. வாழ்வின் நோக்கமே வரி செலுத்திடத்தானோ! என்ற கேள்விக் குறியுடன் வாழ்ந்த மக்களில் பலர் வரி செலுத்த முடியாது திருநெல்வேலி மாவட்டத்தில் சென்று குடியேறலாயினர். எனினும் தென்திருவிதாங்கூரில் வாழ்ந்த அவர்களின் சுற்றத்தாரிடமிருந்து வரிவசூல் செய்யப்பட்டது[4]. வரிவசூல் செய்திடும் அதிகாரிகளும் மக்களிடம் இரக்கமின்றிக் கடுமையாக நடந்து கொண்டதுடன், மிகவும் கொடுமைப் படுத்தவும் செய்தனர்.

ஊழியம்:

அதிக இறைகளைச் செலுத்துவதுடன் நில்லாது, அரசாங்கத்திற்கு ஊழிய வேலைகளையும் நலிவு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் செய்ய வேண்டியதாயிற்று.

பனைகேட்டடிப்பான் பதனீர்கேட்டடிப்பான்
கனத்தகற்கண்டு கருப்புக்கட்டி கேட்டடிப்பான்
நாருவட்டியோலை நாள்தோறும் கேட்டடிப்பான்
வாதுக்கு நொங்கு வாய் கொண்டு கேட்டடிப்பான்
நெடுமட்டை கேட்பான் நெட்டோலைதான் கேட்பான்
கொடுவாவெனவே கூள்பதனி கேட்டடிப்பான்
சில்லுக் கருப்புக்கட்டி சீரகமிட்டேவூற்றி
கொல்லைதனில் சான்றோரை கொண்டு வாவென்றடிப்பான்
மிச்சுக் கருப்புக்கட்டி மிளகு பலகாரமிட்டு

3 மேற்படி, ப. 113
4 C. M. Agur, Church History of Travancore, Madras, 1903, p. 573.

வீச்சுடனே கொண்டு வீட்டில் வாவென்றடிப்பான்
விதிக்குகந்த சான்றோர் விரைவாய் கொடுத்திடவே
இத்தனையும் வேண்டி இவன் கொண்டு போனாலும்
பத்தியுள்ள சான்றோர்க்கும் படுந்துயரம் ஆறாதே[5]

எனவும்

குளம் வெட்டச் சொல்லிக் கூலி கொடுக்காமல்
களம் பெரிய சான்றோரைக் கைக்குட்டை போட்டடிப்பான்[6]

எனவும்,

கருக்கிளநீர் வெட்டச்சொன்னான்
கண்மணியே சுமக்கச் சொன்னான்
கொண்டங்கே போட்டாலும்
கூடதிலே அடைக்கச் சொன்னான்[7]

எனவும்,

கம்புகொண்டு தானளந்து கண்மணியே
வெட்டச் சொன்னான்[8]

எனவும் அகிலமும் அருள்நூலும் பல்வேறு ஊழிய வேலைப்பற்றிப் பேசுகின்றன. உய்கொண்ட மக்களின் உடம்புருகும் தேட்டையெல்லாம் நொய் கொண்ட 'நீசன்' நோகப்பறித்தான். 'தின்றால் குடித்தாலை தூக்கம் வைக்க நீதியில்லை'[9] என்ற அவலநிலையில் அவர்னார்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

அரசாங்கத்தின் வரிக்கொடுமையை வன்மையாகக் கண்டனம் செய்த அய்யா, மக்களிடம் அதிகயிறை வசூலித்தல்

[5] அகிலம், ப. 112
[6] மேற்படி, ப. 113
[7] அருள்நூல், ப. 73
[8] மேற்படி.
[9] அகிலம், ப. 354

கூடாது எனவும், ஊழியவேலை செய்திடப் பணிக்கக் கூடாது எனவும் காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் வரிவசூலில் சிற்சில சலுகைகள் அளித்து, மக்களை இம்சை படுத்திடாத முறை-யில் வரி வசூலிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்-தார். தனது வேண்டுகோளை நிறைவேற்றிடவேண்டும் என்பதற்காக பல புராண, வரலாற்றுச்சம்பவங்களை நினைவு கூர்ந்தார். சோழர் அரசாட்சிநெறிபற்றி கூறுகையில்

ஆறிலொரு கடமை அதுதரவே மாட்டோமென்று
மாறொருவர் சொன்னால் மன்னன் மறுத்தே கேளான்
பன்னிரண்டு ஆண்டு பரிவாய் இறையிறுத்தால்
பின்னிரண்டாண்டு பொறுத்து இறைதாரும் என்பார்[10]

எனவும், கஞ்சலின் கொடுங்கோலாட்சி பற்றிக் கூறுகையில்

இறைமிகுதி வேண்டி இராச்சியத்தை ஆண்டனனா-
னதிலே
புவியிலுள்ளோர்கள் ஈனதுன்பமாகி பயமடைந்து[11]

வெறுப்பு ஏற்பட்டு, அவனது ஆட்சி அகற்றப்பட்டு அவனது கதையும் முடிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார். மேலும் இராவணனின் வீழ்ச்சிபற்றிக் கூறுகையில்

மூர்க்கமாதால் பாவி ஊழியங்கள் கொண்டதினால்
பொறுக்க முடியாமல் பூலோகத்தார்களெல்லாம்[12]

வெகுண்டெழுந்ததாகக் குறிப்பிட்டார்.

திருவிதாங்கூர் மன்னனை நோக்கி 'மக்களுக்கு நீ தொடர்ந்து முறைகேடு செய்து வந்தால் உன் வாழ்நாட்-களுக்கு இடர்வரும் மாநீசா'[13] என எச்சரிக்கை விடுத்து,

10 மேற்படி, ப. 7
11 மேற்படி, ப. 37
12 மேற்படி, ப. 27
13 மேற்படி, ப. 114

உன்கிளையும் நீயும் உற்றார் பெற்றார்களுடன்
தன் கிளையோடே நீயும் தரணியாள வேணுமென்றால்
நீதியுடன் இறைகள் இல்லாமல் நீக்கி வைத்து
ஊழியமும் தவிறா நீ உலகாள வேணுமென்றால்
அல்லாமல் சான்றோரை அன்னீதமாய் அடித்தாய்
பொல்லாத நீசா புழுக்குழிக்காளாவாய்[14]

எனவும்,

கற்புள்ள சாணாத்தி தினமுனை நிக்தித்ததுண்டால்
அப்படியே முன்கோட்டை அழிந்து பொடியாகுமடா[15]

எனவும்,

தெய்வ சாணாத்தி தினமுனை நிக்தித்தண்டால்
பொய்வகையால் கர்ம யோகத்தால் நீ மடிவாய்[16]

எனவும் கண்டனக் குரல் எழுப்பினார். வரி விதிப்புக் கெதிராக ஆளும் வர்க்கத்திற்கெதிராக இயக்கம் நடத்திய சீர்திருத்தப் பெரியார்கள் சிலருள் சுவாமிகளும் ஒருவர்.

உழைப்புக்குகந்த ஊதியம் அளிக்க வேண்டும் என்பதில் அய்யா உறுதிபடக் கூறினார்.

கொத்தைக் குறையாதே
குறை மரைக்கால் வைக்காதே
உபதேசம் சொல்லும் கூலி
உடன் கையில் கொடுத்திடுங்கோ[17]

என மக்களுக்கு அறிவுரை வழங்கினார். தவிரவும் மக்கள் கடினப்பட்டு பெறும் வருவாயை 'வீண்செலவு செய்திடவோ,

[14] மேற்படி, ப. 115
[15] மேற்படி.
[16] மேற்படி, ப. 116
[17] அருள் நூல், ப. 52.

பயஉணர்வுடன் வரிவசூலிக்கும் மேட்டுச் சாதியினரிடம் கொடுக்கவோ வேண்டாம் எனப்போதித்தார். அகிலம் இது பற்றிக் கூறுகையில்

அவனவன் தேடும்முதல் அவனவன் வைத்தாண்டிடுங்கோ
எவன் எவனுக்கும் பதறியினி மலையவேண்டாமே[18]

எனப் புரட்சி முழக்கமிடுகின்றது. சமயச் சடங்குகளில் பொருள் விபரம் செய்யக் கூடாது என அழைப்பு விடுத்தார். எல்லா மக்களும் பொருளாதார நிலையில் தன்னிறைவு உடையவர்களாக மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பதில் சுவாமிகள் மிக்க நாட்டம் கொண்டிருந்தார்.

இவ்வாறாக—

அய்யாவின் இயக்கம் அன்றைய சமுதாய வானில் கவனிப்பாரற்றுக் கிடந்த மக்களின் நல்வாழ்வுக்காக குரல் எழுப்பி தீர்வுகாண விழைந்தது. வரிவசூலில் கெடுபிடியும் அதிக வரிவசூலித்தலும் கண்டனம் செய்யப்பட்டது. உழைப்புக்குகந்த ஊதியம் அளித்திடக்கோரியது. வீண் செலவு செய்வதைத் தவிர்த்து எளிமையிலும் இன்பமாக வாழ்ந்திட வழி காட்டியது.

18 அகிலம், ப. 251

15

நிழல் தாங்கல்கள்

பாரத நாட்டின் சமூக வரலாற்றில் காணப்படும் பொது-வியல்புகளுள் ஒன்று சமுதாய சீர்திருத்த இயக்கம் கண்ட பெரியார்களை நடுநாயகமாகக் கொண்டு சமயப்பிரிவுகள் தோன்றியமையாகும்.

சமுதாய முன்னேற்றம் காண சீர்திருத்தவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏராளமான மக்களை ஈர்த்தன. எனினும் புதுமை வாழ்வுக்கு வழிகாட்ட வந்தவர்கள் புதிய சமயப்பிரிவுகள் தோன்றுவதற்கும் காரணமாக விளங்கினர்.

பல்வேறு காலப்பகுதிகளில் தோன்றிய சீர்திருத்த வாதி-கள், மொழி, இனம், சமயம், சாதி எனப் பல நிலைகளில் பிரிவினைகளையுடைய பாரதத்தில் தேசம் தழுவிய அளவில் தங்களது இயக்கங்களை நடத்த முடியவில்லை; மாறாக, அவை குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே சிறப்புடன் விளங்கின; எனவே புதிதாய்த் தோன்றிய சமயப்பிரிவுகளும், இயக்கங்கள் தோன்றிய பகுதிகளில் மட்டிலுமே வாழ்கின்ற மக்களிடையே நல்லாதரவு பெற முடிந்தது.

வைகுண்ட சுவாமிகள் நடத்திய சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகத் தென்தமிழ்நாட்டில் இந்து சமயத்துள்ளே புதிய-தோர் பிரிவு தோன்றலாயிற்று. கிராமப் புறங்களில் வாழ்-கின்ற இந்து சமயத்தவர்கள் நடைமுறைப்படுத்திய அம்மன் (சக்தி) வழிபாட்டிலிருந்து வேறுபட்டதொரு பிரிவினை அய்யாவழி என்ற பெயரில் சுவாமிகளை பின்பற்றிய அன்புக்-கொடி மக்கள் செயல்படுத்தலாயினர்.

அய்யா வழி சார்ந்தவர்கள் தங்களின் முக்கிய வழி-பாட்டில்லங்களாக—புனித யாத்திரை மேற்கொள்ளும் திருத் தலங்களாக சாமிதோப்புப்பதி தாமரைக் குளம்பதி, பூப்பதி, அம்பலப்பதி, முட்டப்பதி ஆகிய ஐம்பெரும்பதிகளைக்கொண்-டுள்ளனர். இப்பிரிவினர் தங்களின் வழிபடு இடங்களைப் பதி எனவே அழைக்கின்றனர். இவ்வைம் பெரும் பதிகளுள் தலையாய பகுதியாகத் திகழ்வது சாமிதோப்புப் பதியாகும். அன்புக்கொடி மக்கள் இப்பதிக்குச் சென்று வழிபட்டு வருவ-தைத் தங்கள் சமய வாழ்வில் ஒரு கடமையாகவே கொண்-டுள்ளனர்.

ஐம்பெரும்பதிகள் தவிர, ஏராளமான இணைத் தாங்கல்கள் அல்லது நிழல் தாங்கல்கள் (சார்புக் கோயில்கள்) இப்பிரி-வினரால் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் மட்டும் ஆயிரக்கணக்கான தாங்கல்கள் பல்வேறு சமூகத்தவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

செட்டிக்குடியிருப்பு, அகஸ்தீஸ்வரம், பாலூர், சுண்ட-விளை, வடலிவிளை, பாம்பன் குளம், கடம்பன்குளம் ஆகிய கிராமங்களில் சுவாமிகள் தானே நேரில் சென்று இணைத் தாங்கல்களை நிறுவினார். தனது சீர்திருத்தக் கோட்பாடு களை மக்கள் மத்தியில் பரப்பவும், சமுதாயக் கட்டுப்பாட்-டையும், ஒழுக்கத்தையும் வலியுறுத்தவும், கல்வியறிவினைப் புகட்டவும், ஒற்றுமையினை வளர்க்கவும், தர்மமிட்டு அதன் வாயிலாக இறையுணர்வு பெறவும் மக்களை அழைத்துச் செல்கின்ற ஒரு சமுதாய நன்னெறிக் கூடங்களாகத் தாங்-கல்களை சுவாமிகள் ஏற்படுத்தினார்.

சுவாமிகளின் பணியினைத் தொடர்ந்து ஏராளமான நிழல் தாங்கல்கள் தோன்றின. தனது சீடர்களைப் பல் வேறு கிராமங்களுக்கு அனுப்பித் தாங்கல்கள் அமைத்திட

சுவாமிகள் வழிகாட்டினார். எனவே அய்யா காட்டிய வழியில் அவரது ஆதரவாளர்கள் தாங்கல்களை ஏற்படுத்துவதில் முனைந்து செயல்பட்டனர். சமய வரலாற்றில் தாங்கல்கள் ஒரு முக்கிய அத்தியாயமாக விளங்குகின்றன.

மக்களின் சமய அபிலாஷைகளை நிறைவேற்றுவதுடன் சமுதாயப்பணிகள் பலவற்றையும் இத்தாங்கல்கள் ஆற்றின. மேற்கத்திய கல்வி முறை கிராமங்களைச் சென்று எட்டாத நிலையில், அண்ணாவிகளைக் கொண்டு நடத்தப்பட்ட திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இத்தாங்கல்களில் நடைபெற லாயின[1].

கிராம சமுதாய வாழ்வின் மையமாகத் திகழ்ந்த இத்தாங்கல்களில் மக்கள் ஒன்றுகூடி, தங்களின் பிரச்சனைகளைத் தீர்க்கவும், தங்களிடையே ஒரு ஐக்கியத்தை வளர்க்கவும் செய்தனர்.

எளிமையான முறையில்—எவ்வித ஆரவார நடவடிக்கைகளின்றி கிராமமக்கள் தங்களது இறைவழிபாட்டைத் தாங்கல்களில் இன்றும் நடத்திவருகின்றனர். எவ்வித உருவ, சிலை வழிபாடின்றி, பிராமண பூசாரிகள் இன்றி, வீண் உபசாரங்களின்றித் தாங்கல் வழிபாடு நடைபெற்று வருகிறது.

தர்மமிட்டு, பரம் பொருளைக் காணுமாறு அய்யா விடுத்த அழைப்பினை, மக்கள் இத்தாங்கல்கள் மூலமாக இன்றும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர். ஆண்டிற்கொருமுறையோ அல்லது இரு முறைகளோ ''பால் வைப்பு விழா'' என்ற பெயரில் தாங்கல்தோறும் அன்னதானம் வழங்கப்படுகின்றது. 'உண்பான்' என்ற பெயரில் பதிகளிலும் தாங்கல்களிலும் வழங்கப்படுகின்ற அன்னதானம்

1 ப. சர்வேஸ்வரன் (பதி.), ஓட்டன்கதை, மதுரை, 1982, ப. 10.

நடைபெறுகின்ற நாளில் அனைத்து சமூக மக்களும் சென்று இறைவழிபாடு நடத்தி, தர்மம்பெற்றுச் செல்வது ஒரு வழக்கமான சமய நடவடிக்கையாகும். அய்யா தன் ஆதரவாளர்களுக்குப்புகட்டிய உகப்படிப்பு, உச்சிப்படிப்புப் போன்றன தாங்கல்களிலும் பதிகளிலும் நடைபெறும் தினவழிபாட்டிலும், விழாக் காலங்களிலும் மக்களால் பக்தியுடன் ஓதப்பட்டு வருகின்றன.

கார்த்திகை மாதம் இரண்டாம் வெள்ளியன்று தொடங்கி சாமிதோப்புப் பதியில் ''அகிலத்திரட்டு அம்மானை''யினைத் தினந்தோறும் 'ஏடுவாசிப்பு' என்ற பெயரில் பதினேழு நாட்கள் வாசித்து விளக்கம் சொல்வது வழக்கமாகும். தலைமைப்பதியில் 'ஏடுவாசிப்பு' முடிந்தபின்னர் தாங்கல்களிலும், பிறபதிகளிலும் 'ஏடு வாசிப்பு' நடைபெறுகிறது.

நாராயண சாமிக் கோயில் என்றும், நாராயணசாமிப் பதி எனவும் இன்று அழைக்கப்பட்டு வருகின்ற இத்தாங்கல்களில் அருவ வழிபாடே பிரதானமாக உள்ளது. வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் சில தாங்கல்களில் 'கணக்கு' என்ற பெயரில் மக்களின் நிகழ்கால, வருங்கால நிகழ்வுகள் அருள்கொண்டு ஆடுபவரால் சொல்லப்படுகின்றன. 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, மருமக்கள் வழியில் ஒரு பெண் தனது துன்பம் நீக்கிட தாங்கல் ஒன்றில் கணக்குக் கேட்ட செய்தியினைக் கூறுகின்றார்[2]. தாங்கல்களில் அருள் கொண்டுஆடுபவர் பேய்பிடித்து அல்லல்படும் மக்கள் வழிபடவரின் பேய் ஓட்டி நலம் அளிக்கின்றார்.

தாங்கல் வழிபாட்டில் மக்கள் அதிகமாகச் செலவு செய்திட வழிவகை செய்யப்படாது, எளிய வகையில் வழிபடவே

[2] C. தேசிக விநாயகம் பிள்ளை, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், சென்னை, 1965, ப. 112.

அய்யாவழியில் வகை உள்ளது. விளக்கெண்ணெய்க் காசு என்ற பெயரில், விளக்கில் தீபமேற்றுவதற்கான செலவிற்காக வழிபட வருபவர்கள் காசு அளிப்பது வழக்கம். இது தவிர பிச்சிப்பூ கொண்டு சென்று வழிபடுவதும் உண்டு.

அய்யா வழி சமயப்பிரிவில் மந்திரங்கள் ஒலிப்பதில்லை. அனைவருக்கும் புரியும் வகையில் எளிமையான முறையில் வழிபாடு நடைபெறும். எவ்வித ஏற்றத்தாழ்வும் பாராட்டப்படாது, வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் அளிக்கப்படுகின்றது. குழப்பமான-புரியாத புதிர்களெனப் பிறமொழி மந்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்ற சமய வழிபாட்டிலிருந்து விலகி, பாமரர்களும் ஒன்றி வழிபடுகின்ற ஒரு சமயநெறியினை அய்யாவைப் பின்பற்றுகின்ற மக்கள் இன்றும் நடைமுறைபடுத்தி வருகின்றனர்.

16
புதியதோர் சமயநெறி - I

பல்லவர் கால பக்தி இயக்கம் கோயில் வழிபாட்டைப் பிரதானப்படுத்தியது. நாயன்மார்கள் சென்று தேவாரம் சூட்டிய கோயில்கள் யாவும் பாடல்பெற்ற திருக்கோயில்களாகப் பெருமை அடைந்ததுடன், தமிழர் சமுதாய வாழ்வினில் அவைகள் சிறப்பிடம் பெறலாயினர்.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்கின்ற அளவிற்கு மக்கள் கோயிலோடு ஒன்றிய வாழ்வில் பிணைக்கப்பட்டன.

ஆளும் வேந்தர்களும், நிலப் பிரபுக்களும், வணிகர்களும் அளித்த ஏராளமான மானியங்களில் கோயில்கள் வளர்ச்சி கண்டன. அதே வேளையில் கோயில்களில் பணிபுரிந்த பூசாரிகள் சமுதாயத்தில் தமது மேலாதிக்கத்தினை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றனர்.

அனைத்து மக்களின் நலம் கருதித் தமிழ் வேந்தர்களால் எழுப்பப்பட்ட கோயில்கள் நாளடைவில் பூசாரி வர்க்கம் நடத்திய ஆதிக்கப் போராட்டமையங்களாக்கப் பட்டமையால் ஏனைய பிரிவினர் வெளியேற்றப்பட்டனர்.

மக்களின் வழிபாடு வசதிக்காக எழுப்பப்பட்ட பெருங்கோயில்களினுள்ளே அமர்த்தப்பட்ட கடவுளர் திருவுருவங்கள் யாவையும் ஒரு சாராரின் பார்வைக்கு மட்டுமே காட்சிப் பொருளாக்கப்பட்டன.

பெரும்பான்மை மக்களுக்குக் கடவுளர் திருமேனிகள் மட்டுமல்லாது அவைகளுக்கு பணி செய்கின்றவர்கள் கூட

மிகவும் அந்நியர்களாக்கப்பட்டனர். பூவுலகின் பூதேவன்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் பூசாரி வர்க்கம் வெற்றி கண்டது.

கோயில்கள்-கடவுளர் திருமேனிகள்-பூசாரிகள் மட்டுமல்லாமல் கோயிலைச் சுற்றியிருந்த வீதிகள்கூட பெரும்பான்மையோரின் காலடிச் சுவடுகள் பட்டுவிட்டால் தீட்டுப்பட்டு விடுவோமோ எனத் தூரத்தே விலகிக் கொண்டன.

மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் அளிக்கப்பட்ட சுதந்திரம் கூட ஆறறிவுடைய மனித ஜீவன்களுக்கு மறுக்கப்பட்டது.

திருவிழாக் காலங்களில் பூதேவன்களின் தெருக்களைத் தீண்டத்தகாத ஜீவன்கள் பார்த்து விட்டால் தீட்டுப்பட்டு விடும் என்ற எண்ணத்தில் தெரு நுழைவாயில்களில் 'தெரு மறச்சான்கள்' ஏற்றப்பட்டன.

முடிவில்—

கோயில்கள் சாதிய முறையினைப் பாதுகாக்கும் அரண்களாக மாறின. ஆளும் வர்க்கத்தின் அரவணைப்போடு கோயில்கள் யாவையும் தங்களின் "தனியுடைமை" களாக்கிக் கொள்வதில் வெற்றியடைந்த பூசாரி வர்க்கம் சில இழிசெயல்களில் ஈடுபட்டு கோயில்களின் புனித நிலையில் களங்கம் ஏற்படுத்திடவும் செய்தது.

வெங்கைப் பயல் சிலர்
    வேசையுடனாசையினால்
என்னைக் கெணியாமல்
    என் கோவிலுள்ளேதான்
தன்னைச் சொல்லிப் பெண்களுடன்
    சரசமிட்டெச்சிட்டான்[1]

[1] அகிலம், ப. 226

எனவும், கோயிலில் ஏவல் செய்த ஏந்திழையாள் ஒருத்தியை நம்பூதிரி ஒருவன் மானபங்கம் செய்து வேதனைப்படுத்தினன்[2] எனவும், கோயிலில் பூசை செய்வோர் தங்களின் தேவியர்க்-காக கோயில் பணத்தைத் திருடினர்[3] எனவும் அகிலம் கூறுகின்றது. இங்ஙனம் கோயில்கள் எழுப்பப்பட்டதற்கான புனித நோக்கமே சிதறுண்டு 'தனி உடைமை' வர்க்கத்தின் ஆதிக்கமையங்களாகச் செயல்பட்டன.

பெருங்கோயில்களுள் வழிபட உரிமை மறுக்கப்பட்ட-வர்கள் தத்தம் அறிவுக் கெட்டிய வகையில், தங்களின் வசதிக் கேற்ப கல்லையும் மண்ணையும் கடவுள்களாக்கிக் கொண்டனர்.

தெய்வங்களெனத் தாங்கள் உருவாக்கிய மண்ணுருக்-களில் கூட அருள் ஒளி வீசும் அன்பு வடிவத்தை அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. மாறாக, கனல்கக்கும் பார்வையையே மண்ணுருத் தெய்வங்களில் வடித்தனர்.

கண்ணிலே அன்பிருந்து கல்லிலே தெய்வத்தைப் பார்க்கத் (ஒருசாரார்) தூண்டிய தமிழ் மண்ணில் காணிக்கை மூலம் கல்லிடம் அருளை நோக்கி நின்றனர்.

காணுமிடமெல்லாம் சிறுதெய்வக் கோயில்களை ஏற்படுத் தியவர்கள் தங்கள் உள்ளக் கோயில்களைத் திறந்திட வகை யறியாதவர்களாக வாழ்ந்தனர்; ஆராதனைகள் மூலம் அமர்க் களப்படுத்தியவர்கள் அமைதியிலாது தத்தளிக்கலாயினர்; ஆறுகாலப் பூசைகள் நடத்தி அல்லோலப்படுத்தியவர்கள் ஆறுதல்பெற வழியிலாதவர்களாகத் தவித்தனர்; வழிபடு தெய்வங்களிடம் ஆயுதங்களை வழங்கி ஆண்மையோடு

2 மேற்படி.
3 மேற்படி.

காட்சிபெறச் செய்தவர்கள் தங்களின் தாழ்வு நிலையிலிருந்து முன்னேறி சுயமரியாதை வாழ்வுக்குச் செல்ல முறையறியா-தவர்களாகவே இருந்தனர்.

பற்பல தெய்வங்கள்-பற்பல வடிவங்கள்-பற்பல ஆயுதங்-கள்-பற்பல இடங்களில் காட்சி தரலாயின. அங்கிங்கெனா தபடி எங்கும் காட்சியளித்த இத்தெய்வங்கள் யாவும் மக்க-ளிடம் பரிவுகாட்டுவனவாகத் திகழவில்லை. மாறாக, பயம் காட்டுவனவாக அமைந்துவிட்டன.

படைத்திட்ட சிறுதெய்வங்களுக்குக் கூட ஆயுதம் ஏந்திய காவல் தெய்வங்களை உண்டு பண்ணினார்களே தவிர, தங்களின் நலன் பேணிட அடிப்படை உரிமைகளைக் காத்திட உற்றதோர் தலைவனில்லாது தாழ்வு நிலைக்குத் தள்ளப்-பட்டனர்.

வாயில்லா ஜீவன்களின் உதிரத்தில் நீராடி மகிழ்ந்த சிறு தெய்வங்களின் திருப்திக்காக ஆடு, கோழி, பன்றி முதலானவற்றைப் பலியிட்டனர்.

அறியாமையிருளுள் மூழ்கடிக்கப்பட்ட மக்கள் தங்கள் தெய்வங்களிடம் கருணையை எதிர்நோக்கவில்லை. மாறாக, தங்கள் வாழ்வில் நிகழ்கின்ற துக்கதுயரங்கள் யாவும் அவை களின் கோபத்தால்தான் தோன்றுவன என எண்ணியதுடன், தங்களுக்கு ஏற்படும் நோய்கள்கூட அவைகளின் சீற்றத்-தினாலே தான் வந்தன எனக் கருதி அஞ்சிச் சஞ்சலித்த நிலையில் தெய்வங்களின் வேட்கையினைத் தணிக்கப் பலிகளும் இரத்த தூபங்களும் காணிக்கையாக்கி அவைகளின் கோபம் தவிர்த்து, சாபம் இல்லாது லாபம் பெற்றோம் என்ற அளவில் திருப்தியடைந்தனர்.

மொத்தத்தில்—

பல்லுருவங்களிலே மெய்ப்பொருளைக் காணத் துடித்தவர்களின் வாழ்வில் ஒரு வெறுமை; எங்கும் எதனிலும் ஒரு ஏமாற்றம்; உழைப்பை ஊழியமாக வழங்கியது போக, எஞ்சியதில் கிடைத்த சிறுவருவாயினை அரசாங்கத்திற்கு வரி செலுத்தவா அல்லது தாங்கள் வழிபடும் பல்லுருவில் அமைந்த தெய்வங்களுக்கு வழக்கமான முறையில் வழங்கவா! என்ற நிலையில் வாழ்வின் பொருளும், வந்த கதையின் நோக்கமும் புரியாத புதிராகி விட்ட காலச் சூழலில்-

வைகுண்டசுவாமிகள் உருவ வழிபாட்டையும், உயிர்ப் பலியையும், பேய் வழிபாட்டையும் கண்டித்து அவைகளை கைவிட்டு விடும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஒரு விதத்திலுமடங்கா இறையோனைச் சிலையில் வடித்து அதனை வணங்கி வந்த முறையினை நிராகரித்தார். உருவ வழிபாட்டிற்கு எதிராக அய்யா விடுத்த அறைகூவல் அவரது அன்பர்களை இந்துமதம் சார்ந்த உருவ வழிபாடுடைய மக்களிடமிருந்து பிரித்து, புதியதோர்-மாறுபாடுடைய-எளிய வழிபாட்டு முறைக்கு இட்டுச் சென்றது.

உருவ வழிபாட்டினையும், தெய்வங்களைச் சாந்தப்படுத்தி அவைகளின் அருள்பெற இறை சன்னதியில் உயிர்ப் பலியிட்டு வணங்கி வந்த முறையினையும் எதிர்த்த சுவாமிகளின் நிலையினை

எனக்காகும் பேர்கள்...
ஆடுகிடாய் கோழி அறுத்துப் பலியிடார்கள்
மாடுமண்ணுருவை வணங்கித் திரியார்கள்[4] - என
அகிலமும்

ஆடுகிடாய் கோழி பன்றி ஆயனுக்கு வேண்டாம் காண்
மேளதாளம் குரவைதொனி வேண்டாம்காண்
ஈசனுக்கு[5]

4 அகிலம், ப. 170
5 அருள்நூல், ப. 53

என அருள்நூலும் தெளிவுபடச் சித்தரிக்கின்றன. உயிர்ப் பலிக்கு எதிராக அய்யா நடத்திய போராட்டம் சமய வாழ்வில் குறிப்பிடத் தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியது. மேலும், சுவாமிகள் தெய்வங்களுக்குப் படையலிட்டு வழி பட்டதனை எதிர்த்தார். 'மேளதாள குரவைத் தொனியும் பொங்கலரிசி கோழி முட்டையும் பொரித்த கறி முறுகச்சுட்ட பணியாரமும் அவலுருண்டை கருகச்சுட்ட முறுக்குகளும், கடையபாலும்'[6] இறையோனுக்கு உகந்ததல்ல எனஅவற்றை விலக்கிடச் செய்தார்.

பேய் வழிபாட்டினை அகற்றிச் சமய வாழ்வில் அச்சம் ஊட்டுவனவாய் விளங்கிய பிசாசு, பில்லி வினைகளில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை ஓட்டி காலத்திற்குகந்த வகை-யில் புதுமை நெறியில் மக்களை அழைத்துச் செல்ல அய்யா கொண்டிருந்த ஈடுபாட்டினை

பொய்யில்லை பிசாசுயில்லை பில்லியின் வினை
களில்லை
நொய்யில்லை நோவுமில்லை நொன்பலத் துன்ப
மில்லை
தொய்யில்லை இறைகளில்லை சுருட்டுமா ஞாலமில்லை
மையில்லை உலகத்தோரே வாழுமோர் நினைவால்[7]

என்ற அகிலவரிகள் உணர்த்தி நிற்கின்றன. எண்ணம் யாவையும் ஒருமுகப்படுத்தி உறுதியுடன் வாழ்வினை நடத்திச் செல்ல அய்யா மக்களை அழைத்துச் சென்ற பாதை அன்பு செரிந்த அருள்நெறிப் பாதையாகும்.

நீ பெரிது நான் பெரிது என ஒருவருக்கொருவர் மாய்த்துக் கொள்ளும் மாந்தர் மத்தியில் ''அன்பு பார்த்தெடுத்து

[6] மேற்படி, ப. 68
[7] அகிலம், ப. 252

அடிமை கொண்ட பாதையை''க் காட்டி சுவாமிகள் நன்னெறியில் அழைத்துச் சென்றார்.

அய்யா நமக்களித்த சமயநெறி அன்புவழி நடைபயிலும் அருள் நெறியாகும். ஆசாரங்களுக்கும் ஆரவாரங்களுக்கும் அப்பாற்பட்ட புனித நெறியாகும்.

17

புதியதோர் சமயநெறி - II

'கடவுள் ஒருவரே' என்பதில் எல்லாச் சமயங்களும் கொள்கை அளவில் ஒன்றுபட்ட போதிலும் 'அந்த' ஒரே கடவுள் யார்? என்பதில்தான் அவைகளுக்குள்ளே வேறுபாடான கருத்துகள் எழுலாயின.

வைணவத்தில் திருமாலும், சைவத்தில் சிவனும், இஸ்லாமில் அல்லாவும், கிறிஸ்தவத்தில் இயேசுவுமென இறை நாயகர்கள் ஏற்றப்பட்டு 'கற்பனை செய்யப்பட்டுள்ள' சொர்க்கம் அடைய வெவ்வேறு மார்க்கங்கள் ஏற்படலாயின. ஒவ்வொரு மார்க்கத்திலும் பல்வேறான நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும், சடங்குகளும் தோன்றி, ஒவ்வொன்றிற்கும் நியாயம் கற்பித்துக் கொள்ளும் விதமாக தத்தம் சமய நம்பிக்கைகளை மையமாகக் கொண்டு ஏராளமான புனைந்துரைகளை உருவாக்கி, பல்வேறு பிரிவினைப் பேதங்களைக் கற்பித்து, ஒன்றுக்கொன்று சண்டையிட்டு மாண்டுபோன துயர சம்பவங்கள் வரலாற்றின் பக்கங்களில் மட்டுமல்லாது, இற்றை நாளிலும் காணக் கூடியதாய் உள்ளது.

சமுதாயத்திற்கு நன்னெறி புகட்டப் போகிறோம் எனப்புறப்பட்ட சமயங்கள் சகிப்புத் தன்மையும், சமத்துவ நோக்கமும் தம்முள் இல்லாத காரணத்தால் பேரரசுகளைப் போன்று ஒன்றையொன்று மேலாண்மை செலுத்துவதில் போட்டியைத் தங்களுக்குள்ளே வளர்த்துக் கொண்டன; சேவை செய்ய வேண்டியன செருக்கினை வளர்த்துக் கொண்டன; அன்பைக் காட்ட வேண்டியன ஆணவத்தைக் காட்டலாயின; சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டியன சச்சரவு-

களை வளர்க்கலாயின; மானிட ஒருமைப்பாட்டை காக்க வந்தன வேறுபாடுகளை ஊக்குவிக்கலாயின; தனிமனித முன்னேற்றத்திற்காகப் போராட வேண்டியன தன்னிலையை உயர்த்திடலாயின.

முடிவில்—

ஒரே பரம்பொருளைச் சுற்றித் தோன்றிய சமயங்கள் யாவும் வேறுபாடுகளை வளர்த்து, சமுதாயத்துள்ளே எதிர் வினைகளையும் ஏற்படுத்திடலாயின. தென்பொதிகைத்-தென்றலென சமுதாய வானில் தெம்மாங்கு பாடவேண்டியன முகாரி ராகத்தை ஆங்காங்கே எழுப்பிக்கொண்டிருந்தன. இந்தச்சமயங்களின் சல்லாபங்களைத் தான் சுவாமிகள்

நீ பெரிது நான்பெரிது
 நிச்சயங்கள் பார்ப்போமென்று
வான்பெரிது அறியாமல்
 மாள்வார் வீண்வேதமுள்ளோர்
ஒருவேதம் தொப்பி
 உலகமெல்லாம் போடுவென்பான்
மற்றொருவேதம் சிலுவை
 வையமெல்லாம் போடுவென்பான்
குற்றம் உரைப்பான்
 கொடுவேதக்காரனவன்
ஒருவருக் கொருவர்
 உனக்கெனக்கென்றே தான்
உறுதியழிந்து ஒன்றிலும்
 கை காணாமல்
குறுகி வழிமுட்டிக்
 குறை நோவு கொண்டுடைந்து
மறுகித் தவித்து மாள்வார்கள்
 வீண் வேதமுள்ளோர்[1]

1 அகிலம், ப. 209

என இடித்துரைத்தார். பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள் சண்டையிட்டு மாள்வதுடன், சமயங்களுக்கு வெளியே உள்ளவர்கள் குற்றம் உரைத்து உறுதியழிந்து போனதையும் எடுத்துரைத்தார்.

சமுதாயத்தில் நிலவிய சமயப் பிரிவுகளையும் அவற்றின் தாக்கத்தையும் கருத்தில் கொண்டு 'ஒரே கடவுள்' என்ற கொள்கையை அறிவுறுத்தினார். பல தெய்வ வழிபாட்டில் மக்கள் மன அமைதி பெற இயலாது என்பதனைத் தெளிவுற உணர்ந்த சுவாமிகள் இறை ஒருமையினை மக்களுக்கு உணர்த்தும் போது

> வைகுண்டர்க்கே பதறி வாழுவதல்லாமல்
> பொய்கொண்ட மற்றோர்க்குப் புத்தி அயர்ந்து
> அஞ்சாதுங்கோ[2]

என அறிவுறுத்தினார். அய்யாவின் அருள்நெறியில் அர்த்தமற்ற ஆசாரங்களுக்கும் மூட நம்பிக்கையிலான சடங்குகளுக்கும் இடம் அளிக்கப்படவில்லை. காணிக்கை, காவடி, பூசை, தீபாரதனை, பம்பை பரத்தை பகட்டு கைகாட்டல், ஆரத்தி, ஆராட்டு சப்பிறங்கள், தாதி கைகாட்டல் போன்றன எம்பரனுக்கு ஏற்புடையதல்ல என வெறுத்தொதுக்கப்பட்டு பரம்பொருளை அடைந்திடுவதற்கான ஒரே வழி 'தர்மம்' என்பதை வலியுறுத்தினார். எனவேதான்

> பயந்து தர்மமிட்டு
> பரம்பொருளைத் தேடிடுங்கோ[3]

என அழைப்பு விடுத்து, அங்ஙனம்

> இரப்பனைக் கை கொண்டார் எனையேற்றார்
> பரப்பனைக் கை கொண்டார் பரம் ஏற்றார்[4]

[2] மேற்படி, ப. 251

[3] அருள் நூல், ப. 34

[4] அகிலம், ப. ப. 170-71

எனத் தெளிவுப்படுத்தினார். அய்யா காட்டிய அருள்வழியில் சமயபேதங்கள் புறக்கணிக்கப்பட்டு, ஆசாரங்கள் அகற்றப் பட்டு சமுதாயத்தில் மண்டிக் கிடந்த இருள் அகற்றப்பட்டு ஒரே இனம் காண வழியினை வகுத்தளித்தார்.

அய்யா தனது அன்பு மார்க்கத்தில் 'தர்மம்' வாயிலாக தரணியாள சமுதாயத்திற்கு அறை கூவல் விடுத்ததுடன் நில்லாது தர்மம் என்பதின் உண்மைப் பொருளையும் தெளிவுப்படுத்தினார். நிலப்பிரபுத்துவ முறையினால் பொரு-ளாதார நிலையில் நலிவு அடைந்தவர்களை- அதிகார வர்க் கத்தின் இரும்புக் கரங்களுக்குள் சிக்கித் தங்களின் வாழ்க்கை யினை முன்னேற்றிக் கொள்ள - இயலாதவர்களை – சாதிய முறையில் சவர்னர்களாக ஏற்றம் பெற்றோரின் ஆதிக்கத்தில் கட்டுண்டு துன்பச்சுழலில் சிக்குண்டவர்களை அன்றாடம் உழைத்து அதன் வாயிலாக அரைவயிற்றுணவுடன் திருப்தி கொண்டு, தங்களின் கல்விக் கண்ணை திறந்திட வகை-யறியாது அறியாமை இருளுள் மூழ்கடிக்கப்பட்டவர்களை -இன்னபிறநிலைகளில் தாழ்வுற்ற மக்களின் ஏற்றத்தில்தான் ஒன்றுபட்ட சமதர்ம சமுதாயம் காண முடியும் எனவும், அங்கேதான் ஒரே சாதியைப் பார்க்க முடியும் எனவும் உணர்ந்ததால் சமயவாழ்வில் தர்மத்தை உணர்த்திய சுவாமிகள்

தாழக் கிடப்பாரை
தற்காப்பதுவே தர்மம்[5]

என அனைத்து நிலைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களை -தாழக்கிடப்பவர்களைத் தற்காத்து அவர்களையும் உயர்த்து-வதே தர்மம் என விளக்கம் தந்து நலிவுற்றவர்களின் நலன் பேணிடுவதில்தான் இறை உணர்வைப் பெற முடியும் எனத் தெளிவுபடுத்தினார். இதனையே பின்னாளில் ''இந்தியாவை

[5] மேற்படி, ப. 203

அதன் இழிநிலையிலிருந்தும், துன்பநிலையிலிருந்தும் மீட்பதற்கான ஒரே வழி வசதியுள்ளோர்களைத் தாழ்வு நிலைக்குக் கொண்டு வருவதல்ல; மாறாக, தாழ்வுற்றோரை உயர்நிலைக்குக் கொண்டு வருவதில்தான் உள்ளது'' என சுவாமி விவேகானந்தரும் அறிவுறுத்தி, ''எல்லோர்க்கும் எல்லாமும்'' என்ற நிலையினை ஏற்படுத்திட வேண்டும் என்ற அவாவினை வெளியிட்டார்.

இனி, பல்வேறு நிலைகளில் தாழ்வு அடைவதற்கான காரணத்தையும் அய்யா எடுத்துரைத்தார். ஒருவனின் தாழ்வு நிலைக்கு அவனே காரணம் என்பதால் 'தன்னைத்தானே தற்காத்துக் கொள்ள வேண்டும்' என அறிவுறுத்திய சுவாமிகள்

மானமாக இருந்தால்
மாழுங்கலி தன்னாலே[6]

என தன்மானத்துடன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் பணித்தார்.

இங்ஙனம் வைகுண்டர் என்ற ஒரே பரம் பொருளுக்கு அடிபணிந்து, அப்பரம் பொருளை அடைந்திடுவதற்கான ஒரே வழி தர்மமே என்பதனைத் தெளிவுறுத்தி, அத்தகைய தர்மமானது தாழக்கிடப்பாரைத் தற்காப்பதுவே எனப் புகட்டி, தாழ்வு நிலைக்கான காரணம் மானம் தவறி வாழ்வதே எனவும் கூறி, தனது ''ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே சாதி'' என்ற புதிய சித்தாந்தத்தை மக்களுக்கு உணர்த்தினார்.

[6] மேறபடி, ப. 206

18

அன்புக்கொடி இயக்கமும் கிறிஸ்தவமும்

''நீ வீட்டுக்கு எஜமான்; உன் மனைவிக்குக் கணவன்; மகனுக்குத் தந்தை; வேலைக்காரனுக்கு முதலாளி; ஆனால் நீ ஒருவனே''

—ஒருவனிடமுள்ள உறவுமுறையே இங்ஙனம் பல்வேறு விதங்களில் காண்பதுபோன்று பல்வேறு சமயத்தவர்களும் இறைவனைத் தத்தம் கோணத்தில் நின்று பார்ப்பது இயல்பு.

திருமாலாக - சிவனாக - அல்லாவாக -இயேசுவாக பல்வேறு இறைநாயகர்கள் போற்றப்பட்டு அவர்களை மையமாகக் கொண்டு சமயங்கள் பலவாகத் தோன்றின.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்குமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றினாலும்
அங்கு அவைதாம் எம்பெரும! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறேயன்றோ!

என கீதை உரைப்பது போன்று 'பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள். எல்லா வழிகளும் இறுதியில் ஒன்றையே அடைகின்றன'.

பண்பட்ட ஆன்மீக நிலையிலும் சமுதாயச்சூழல் வழங்கிய சாதகமான அல்லது அதிருப்தி நிலையிலும் பாரதம் சமயங்கள் பலவற்றை வெவ்வேறு காலங்களில் தோற்றுவித்தது.

எனினும், அனைத்துச் சமயங்களையும் சகிப்புத் தன்மை என்ற உயரிய நிலையிலிருந்து சமத்துவ நோக்கில் பார்க்-கின்ற பண்பினை பாரதம் தன்னகத்தே வளர்த்துக் கொண்டது.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற அந்நிய சமயங்கள்இங்கே பரவுகையில்கூட அவற்-றையும் இன்முகத்துடன் ஏற்று, அரவணைத்து தனது பாரம்பரியமிக்க சகிப்புத்தன்மைப் பண்பினைத் தொடர்ந்து நிலை நாட்டுவதில் வெற்றி பெற்றமை மேலானதாகும்.

1893 செப்டம்பர் 11ஆம் நாள் சிகாகோ நகரத்தில் கூடிய அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் ''வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமையுடையவர்களென''[1] பாரததேசத்-தவர்கள் மேலைநாடுகளைச் சார்ந்த சமயவாதிகளால் பாராட்டுதல் பெற்றனர்.

எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாய் விளங்குகின்ற ஏக நாயகனை எச்சமயத்திலும் பாரத தேசத்தவர் கண்டார்-களாதலின் எல்லாச் சமயங்களும் இங்கே சமமாகப் போற்றப்-பட்டன. எவ்வித காழ்ப்புணர்ச்சியுமின்றி அனைத்து சம-யங்களும் ஒன்றோடு ஒன்று இணையாக நின்று வளர்ச்சி காணயாக நின்று வளர்ச்சி காணலாயன.

ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்திய அரசியல் வானில் தோன்-றிய பின்னர் ஆட்சியாளர்களின் ஆதரவுடன் கிறிஸ்தவம் பவனி வந்தது. பல்வேறு கிறிஸ்தவ திருச்சபைகள் பாரதத்-தில் களங்களை அமைத்துக்கொண்டு சமயப் பிரச்சாரத்தில்

[1] ஸ்ரீ ராம கிருஷ்ண மடம் (பதி.), சிகாகோ சொற்பொழிவுகள், சென்னை, 1985, ப. 4

ஈடுபட்டன. அன்பையும் சேவையையும் தாங்கி, தாழ்வுற்ற மக்களின் உற்றதொரு நண்பனாக சமுதாய அரங்கினில் கிறிஸ்தவம் அரங்கேறியது. ஒடுக்கப்பட்ட பிரிவினர் அதன் அன்பு அரவணைப்பில் அமைதி காண விரும்பி, தாய்ச் சமய விட்டுப் புதிய சமயம் ஏகினர்.

மூட நம்பிக்கைகளிலும், காலாவதியான பழக்க வழக்கங் களிலும், சாதிப்பிரிவினைகளிலும் சிக்குண்ட பாரத நாட்டுச் சமயங்களுக்குச் சவாலாக கிறிஸ்தவம் சில பகுதிகளில் துரித வளர்ச்சி கண்டது.

அல்லல்பட்டு ஆற்றாது அரற்றிய மக்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருவதில் ஆர்வம் காட்டிய கிறிஸ்-தவம் நலிவுற்ற பிரிவினரிடம் நல்ல வளர்ச்சி பெற்றது. 1806ஆம் ஆண்டு ரிங்கல்டபே என்பவர் வாயிலாக லண்டன் திருச்சபை தென்திருவிதாங்கூரில் தனது சமயப்பணியைத் தொடங்கியது. அரசாங்கத்தின் ஆதரவும் உதவியும், சமுதாயத்தில் சில பிரிவினர்க்கிழைக்கப்பட்ட அநீதிகளும், சமயப் போதகர்களின் தன்னலம் கருதாச்சேவையும், துரித பிரச்-சாரமும் சிலுவையைத் தென்திருவிதாங்கூரில் ஊன்றப் பேரு-தவியாய் விளங்கின.

கிறிஸ்தவம் அதிவேகமாகச் சமுதாயத்தில் பரவிய வேளையில் தான் வைகுண்டசுவாமிகள் சீர்திருத்த இயக்கம் கண்டார். புதிய சமுதாயம் காண அவர் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் விளைவாக, கிறிஸ்தவம் நோக்கி நின்ற மக்களுக்குத் தாய்ச் சமயத்துள்ளே திருப்தி அடைந்திடுவதற் கான நிலை உருவாக்கப்பட்டது.

சுவாமிகள் ஏற்படுத்திய சமுதாய விழிப்புணர்வில் மக்கள் தங்களின் தாய்ச் சமயத்திலே ஈடுபாடு கொண்ட-மையால் கிறிஸ்தவம் தான் எதிர்பார்த்தபடி பரவுவதற்கு

மிகப் போராட வேண்டியதாயிற்று. எனவே கிறிஸ்தவ சமயப் போதகர்கள் சுவாமிகளின்மீது மக்கள் கொண்டிருந்த நல்லெண்ணத்தினை நீக்கிட முயன்றனர்.

சுவாமிகளின் கொள்கைநெறிகளையும் இயக்கத்தையும் கடுமையாக விமர்சித்தனர். கிறிஸ்தவத்தின் கோட்பாடுகளிலிருந்தே சுவாமிகள் தனது கோட்பாடுகளை கொண்டுள்ளார் என வாதிட்டனர். அதற்கப்பாலும் சென்று, சுவாமிகள் தன் இளமைப் பருவத்தில் தாமரைக்குளம் கிறிஸ்தவ ஆலயத்தில் சமயப் போதகராக இருந்தார் என அவரைக் கிறிஸ்தவ வட்டத்திற்குள் இணைத்துப்பேசினர்.

கிறிஸ்தவ சமயப் போதகர்கள் உரைத்த அவதூறுகள் யாவற்றையும் சுவாமிகள் சகித்துக்கொண்டார். எனினும் கிறிஸ்தவத்தின் வருகையால் சமுதாயத்தில் ஏற்பட்ட அதனின் விரும்பத்தகாத விளைவுகளை விமர்சிக்கவும் செய்தார்.

சமுதாய அமைப்பினில் சாதிகள் ஏற்படுத்திய பிரிவினைகளையும் கடந்து சமயப்பிரிவினைகள் ஏற்படுத்திய பிரச்சனைகள் கண்டு சுவாமிகள் வருத்தமுற்றார். புதிய சமயத்தின் வருகையால் சாதி என்ற பெயரில் நிலவிய ஒருவிதமான சிறு ஒற்றுமை கூட சிதறியடிக்கப்பட்டது; உறவுகள் ஊஞ்சலாடின; குடும்ப அமைப்பில் கூட பிளவுகள் துளிர்விடலாயின. சமய நிலையினை அடிப்படையாகக் கொண்டு சமுதாய நிகழ்வுகளில் கூட பிரிவினைப் பேதங்கள் இடம்பெறலாயின. சகோதரத்துவமும், ஒற்றுமையும், சகிப்புத்தன்மையும் ஒரே சாதி அமைப்பில்கூட சிறிது சிறிதாக மறையத் தொடங்கின. இப்பிரிவினையினைச் சுவாமிகள் வன்மையாகக் கண்டித்தார்.

விருச்சமுள்ள நீசன் வேசை நசுறாணியவன்
வையகங்களெல்லாம் வரம்பழித்து மாநீசன்

நெய்யதிய சான்றோர்கள் நெறியையெல்லாம் குலைத்து
பேரழித்துத் தர்மம் பெருமையெல்லாம் தானழித்தான்[2]

என சமுதாய கட்டுக்கோப்பு புதிய சமயப் பிரச்சாரகர்களால் அழிக்கப்பட்டதை கடுமையாக விமர்சித்தார். சுவாமிகளின் வருகை சமயமாற்றம் அதிக அளவில் நடைபெறுவதை தடைசெய்தது.

சுவாமிகளின் அன்புக்கொடி இயக்கம் கிறிஸ்தவம் பரவுவதற்கு அவரது காலத்தில் மட்டும் தடையாக நில்லாது, அவர் மறைந்த பின்னரும் ஒரு தேக்கநிலையை ஏற்படுத்தியது. 1851ஆம் ஆண்டில் சுவாமிகள் பூவுலக வாழ்வினை நீத்தாரெனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இயக்கத்தின் தாக்கம் அதிகமாகவே இருந்தது.

1869ஆம் ஆண்டைய ஜேம்ஸ்டவுன் மறைமாவட்ட அறிக்கையினை அளித்த சமயப் போதகர் ''கிறிஸ்தவம் பரவுவதைக் காட்டிலும் எதிரியின் (சுவாமிகளின்) சமயம் எளிதாகவும் துரிதமாகவும் பரவுவதால் எங்களில் யாருக்கும் தூங்குவதற்குக்கூட நேரமில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளார். நாகர்கோவில் மறை மாவட்டத்தின் 1875ஆம் ஆண்டைய அறிக்கையில் ''1821ஆம் ஆண்டு இப்பகுதியில் உள்ள கிராமங்களில் கிறிஸ்தவம் தழுவியர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்து 1200 ஐ எட்டியது. மேலும் இப்பகுதியில் வாழ்மக்கள் அனைவருமே கிறிஸ்தவம் வந்துவிடக் கூடிய ஒரு நிலை இருந்தது. ஆனால் இதற்கொரு அபாயத் தடையாகத் தோன்றியுள்ளது இச்சமய நெறி; நம்முடைய சமயப் பணிக்கு ஆபத்தாக, இச்சாத்தான் நமது முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக நிற்கின்றான்'' என அம்மாவட்டப் போதகர் அறிவிக்கின்றார்.

[2] அகிலம், ப. 119

கிறிஸ்தவ போதகர்களின் ஆண்டறிக்கைகளே சுவாமி-களின் இயக்கம் ஏற்படுத்திய விழிப்புணர்வு, சமய மாற்றத்தினைக் கட்டுப்படுத்திய விதத்தை தெளிவாகக் கூறுகின்றன. எனினும் புதிய சமயத்தின் வருகை பின்னாளைய விளைவுகள் சிலவற்றை ஏற்படுத்தியது. நல்ல அரிய பல மாற்றங்களை தந்தாலும் மண்டைக்காடு கலவரம் போன்ற சமுதாயச் சீர்கேடுகளுக்கும் காரணமாகி சமயங்களின் சதி-ராட்டத்திற்கு ஏதுவாகவும் அமைந்து விட்டது. பிரிவினைகள் வளர்க்கப்பட்டு ஒற்றுமையும் சகிப்பு தன்மையும் ஏனோ சில நேரங்களில் ச ம ய ங் க ளை நடைமுறைப் படுத்துவதில் மறைந்து போய் விடுகின்றன. சுவாமிகள் கருதியது போன்று ஒன்றுபட்ட, ஐக்கிய, அமைதியான சமுதாயம் அமைய ‘ஒரே மதம்’ என்ற அடிப்படையில் மக்களினம் தனது சமய-வாழ்வினை அமைத்துக்கொண்டால் தான் சாத்தியமாகும்.

19
இயக்கத்தின் பின்னிலை

தென்திருவிதாங்கூர்ப் பகுதியில் சுவாமிகள் தோற்றுவித்த இயக்கமானது அவருடைய காலத்தில் பாமரர்களின் நல்லாதரவுடன் ஒரு நல்ல ஆரம்பத்தினை ஏற்படுத்திக் கொண்ட போதிலும், கால ஓட்டத்தில் அதனின் பணி எங்கெனும் பரவி சிறப்பெய்திடவில்லை. தாழ்த்தப்பட்டவர்களாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களின் ஒரு பிரிவினரிடம் நல்ல ஆதரவு பெற்று விளங்கிய போதிலும் இயக்கம் தனது குறிக்கோளினை நடைமுறைப் படுத்துவதில் உச்சநிலையினை அடைந்திட முடியாமல் போய்விட்டது. திக்கெட்டும் பரவி, பணி பல ஆற்றி சமுதாய வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்ற வேண்டிய இயக்கம் அவரது காலத்திற்குப் பின் மக்களின் சமய வாழ்வில் சிலமாறுதல்களை ஏற்படுத்திய போதிலும், சமுதாய நிலையில் குறிப்பிடத்தக்க நிலையான, நேரடி மாறுதல்களையோ அல்லது விளைவுகளையோ ஏற்படுத்திடவில்லை. மாறாக, இயக்கத்தினை நடத்திச் செல்ல ஏற்றதலைமை இல்லாமையும், பிற காரணங்களும் மந்தநிலைக்குட்படுத்தி விட்டன. இயக்கத்தின் பின்னாளைய நிலையில் ஏற்பட்ட மந்தநிலைக்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் சில மட்டும். இங்கே ஆராயப்படுகின்றன.

1. திறமையிலாச் சீடர்கள்: ஒரு தலைவனின் வெற்றி அவன் தேர்ந்தெடுக்கின்ற தளபதியின் திறமையைப் பொறுத்தே அமையும் என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும். சுவாமிகள் அத்தகைய தளபதி ஒருவரை தேர்ந்தெடுத்தாரா அல்லது கிடைத்திடப் பெற்றாரா என்ற கேள்வியே இயக்கத்தின் வளர்ச்சி பற்றி அறிய விரும்புவோர்க்கு ஏற்படும் அவாவாக இருக்கமுடியும். ஐந்து சீடர்-

களைச் சுவாமிகள் கொண்டிருந்த போதிலும் அவரது காலத்திற்கு பின்னர் அவரிட்ட பாதையில் மக்களை நன்னெறிப் படுத்தி அவர்களால் அழைத்துச் செல்ல முடிந்ததா! இராம கிருஷ்ண பரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர் கிடைத்தது போன்று, நாராயண குருவுக்கு ஒரு குமரன் ஆசான் கிடைத்தது போன்று, சுவாமிகளுக்கு கிடைத்தார்களா! உறுதியாக இல்லை என்றே சொல்லலாம். சுவாமிகள் காட்டிய பாதையில் நிலையான அமைப்பு ஒன்று ஏற்படுத்தி சீர்திருத்தப் பணியினை ஒழுங்குபடுத்திட சீடர்களால் இயலவில்லை. பரமஹம்சருக்கு அவரது சீடர்கள் மிஷன் ஒன்றினை ஏற்படுத்தி தமது குருவின் கொள்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்து உலகம் முழுமையும் பணியாற்றியது போன்று நாராயண குருவுக்கு அவர்தம் சீடர்கள் ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகம் (SNDPYOGAM) என்ற பெயரில் அமைப்பு ஒன்றினை நிறுவி சமுதாயப்பணிகளை ஆற்றி வாய்ப்பேற்படுத்திக் கொண்டதுபோன்று, சுவாமிகள் சீடர்களால் இயலவில்லை. அதன்விளைவாக மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு பணியாற்றிட வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

2. ஆதரவிலா நிலை: சுவாமிகளின் இயக்கம் தனது வளர்ச்சியில் பீடுநடை போடுவதற்கான சூழ்நிலை அமையவில்லை. ஆதரவும் உதவியும் சமுதாயத்தின் சில பிரிவினரிடமிருந்து கிடைத்த போதிலும் இயக்கம் சந்தித்த எதிர்ப்புகளும் தொல்லைகளும் ஏராளம். ஒடுக்கப்பட்ட பிரிவினர்க்கு இழைக்கப்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, சமய அநீதிகளுக்கு மேட்டுக்குடியினரும், அரசாங்கமும் காரணமாக இருந்தவேளையில், மன்னனை 'முழுநீசன்' எனவும், மேட்டுக்குடியினரை 'நீச குலம்' எனவும் பழித்துரைக்க நேரிட்டதுடன், 'உன் பட்டம் பறித்திடுவேன்' எனப் போர்க் குரல் எழுப்பவேண்டிய கட்டாயத்திற்குச் சுவாமிகள் தள்ளப் பட்-

டாரே ஒழிய, அதிகார வர்க்கத்தின் ஆதரவினைப் பெற-முடியாத சமுதாயச் சூழலில் இயக்கம் துரித வளர்ச்சி அடையமுடியவில்லை. மேலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து சுவாமிகள் தோன்றிய வராதலால் மேட்டுச் சாதி-யினரின் வெறுப்பையும் எதிர்ப்பையும் தான் பெறமுடிந்தது. சுவாமிகளின் இயக்கம் அரசாங்கத்திற்கு எதிரான 'மக்கள் புரட்சி' யாகவே அமைந்துவிட்டபடியால் சிறைவாசமும் கொடுமையான சோதனைகளும் பரிசுகளாக வழங்கப்பட்டன. எனவே ஆதரவுக்கரங்களின் அரவணைப்பில் அமைதியான முறையில் இயக்கத்தை நடத்திச்செல்வதற்கு மாறாக, அர-சாங்கமும் மேட்டுக் குடியினரும்அளித்தஎதிர்ப்பையேற்றுசாதி ஆதிக்க சமுதாயத்தில் இயக்கத்தின் வளர்ச்சிக்கு நிலையான அடித்தளத்தை ஏற்படுத்த முடியவில்லை.

3. மக்கள் மனநிலை: அடிப்படை உரிமைகள் ஏது-மின்றி, தாழ்வு நிலைக்குட்படுத்தப்பட்ட துன்பமே வாழ்-வெனக் கொண்ட- வழிகாட்ட உற்றதோர் தலைவனில்லாது வாடிய மக்கள், தங்களை வழிநடத்திச் செல்ல சுவாமிகள் தோன்றியதும், 'அவரைத் தெய்வம்' எனவே கொண்டா-டினர். பாற்கடலுள் பள்ளி கொள்ளும் பரந்தாமனாகவே கருதி வழிபடலாயினர். புராணங்கள் செப்பிய அவதாரங்-களுடன் ஒரு அவதாரமாகச் சுவாமிகளைச் சேர்த்துக் கொண்டனர்.

தர்மத்தில் பரமனைக் காணவும், சமய ஆசாரங்களில் செலவு செய்வதெல்லாம் வீண் எனவும் எடுத்துக்கூறியும், பண்பட்ட சமய வாழ்க்கைக்கு இட்டுச்செல்ல சுவாமிகள் விடுத்த அறைகூவல் மக்களிடம் சரிவரச் சென்றடைய-வில்லை. பழமை நெறியினை விட்டுவிட்டு, சுவாமிகள் காட்டிய புதுமைநெறியினில் அடியெடுத்து வைத்து முன்னோக்கிச் செல்ல மக்களின் மனநிலை இடம்தரவில்லை. எடுத்துக்

காட்டாக, பேய் நம்பிக்கையை அறவே ஓட்டிடும் வகையில் அதனை ஒரு 'மாயை' எனவும், பேய் ஓட்டுவதில் பிரசித்திப்பெற்று விளங்கிய மலைச் சாதியினரான காணிக்காரர்களின் மந்திரசக்தியினைப் பறித்துவிட்டதாகவும், தானே பேய்களை அழித்துவிட்டதாகவும் சுவாமிகள் உறுதிபட எவ்வளவு தான் கூறினாலும், அவரது அறிவுரையினைச் செவிமடுத்தும், காலத்திற்கெல்லாம் மூட நம்பிக்கைகளை விட்டுவிட மக்களின் மனநிலை பக்குவமடையாமலே இருந்தது.

மேலும்—

இந்திய சமுதாய அமைப்பினில் விரும்பியோ, விரும்பாமலோ வேரூன்றிவிட்ட சில சமூகநெறிகளைத் தனி ஒரு சீர்திருத்த வாதியாலோ அல்லது இயக்கத்தாலோ அகற்றுவது சாத்தியமல்ல என்பது இந்திய வரலாறு புகட்டும் பாடமாகும். சாதிப்பிரிவினையை அகற்ற சுவாமிகள் மேற்கொண்ட முயற்சி தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஓரளவு சமத்துவ உணர்வை ஏற்படுத்தினாலும், மேட்டுக்குடியினருடன் சமத்துவநெறிக்குட்படுத்திட முடியவில்லை. சாதிப் பிரிவினை தோற்றுவித்த ஏற்றத்தாழ்வில் பெரும்பான்மையினர் ஒருபுறம் இழி நிலைக்குத்தள்ளப்பட்ட போதிலும் சில குறிப்பிட்ட சிறுபான்மையினர் மறுபுறம் பல்வேறு சலுகைகளுடன் ஆதிக்கமுடையவர்களாக வாழ்ந்தபடியால் தங்களைக் கீழ்நிலையில் உள்ள மக்களிடம் ஐக்கியமாக்கி சமத் துவம் ஏற்படுத்திக் கொள்ள மேட்டுக் குடியினரின் மனநிலை இடம் தரவில்லை. தவிரவும், சமயத்துடன் பிணைந்து மக்களின் வாழ்வுடன் ஒன்றிவிட்ட சாதிய முறையினைக்கைவிட சமுதாய அமைப்பு முறையோ அல்லது சாதிய முறைக்கு அரணாக விளங்கிய அரசாங்கமோ இடம் தரவில்லை. பிறப்பின் வழியது சாதி என்பது அன்றும் இன்றும் 'வழுவிலா' விதத்தில் நடைமுறைப்படுத்தி வருவது பொது-

வியல்பாகி விட்டது. சாதிமுறையினை எதிர்த்து எழுப்பப்பட்ட எதிர்ப்புகளும் கண்டனங்களும் பல்வேறு சாதிகளிடையே ஆன தொடர்பில் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாமே ஒழிய, சமுதாயத்தில் புரையோடிவிட்ட அதன் விரும்பத்தகாத விளைவுகளுக்கு சாவுமணி அடித்திட இயலாமல் போய் விட்டது. பிற இயக்கங்கள் போன்று சுவாமிகள் நடத்திய இயக்கமும் பல்வேறு பிரிவினரிடையே ஒரு சுமூகமான உறவு நிலையினை ஏற்படுத்தியதே தவிர சாதிய எதிர்ப்புப் போராட்டத்தின் பயனை முழுஅளவில் அடைய முடியவில்லை.

4. கால நிலை: சுவாமிகள் இயக்கம் நடத்தியது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். ஒடுக்கப்பட்ட பிரிவினரிடம் கல்வி அறிவு வளர்ச்சியடைந்திடாத காலப்பகுதியாகும். பகல் முழுக்க நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைத்தால்தான் ஏதோ அரைவயிறாவது நிரம்பமுடியும் என்ற நிலையில் கல்விவாசனை அவர்களை அடைய நியாயமில்லை. எனவே கல்வி அறிவிலா மக்களிடம் சுவாமிகளோ அவரது சீடர்களோ சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி, தாங்கள் திட்டமிட்ட நன்னெறிப்பாதையில் மக்களை ஒழுங்கு படுத்திச் செல்ல மிகச் சிரமப்பட வேண்டியதாயிற்று. மேலும், போக்கு வரவு வசதிகள் நல்ல வளர்ச்சியடைந்திடாத கால நிலையில் இயக்கம் நடத்தியவர்கள் ஒவ்வொரு கிராமமாக நடந்து சென்றே இயக்க நெறிகளைப் பரப்பவேண்டியதாயிற்று. எனவே இயக்கம் ஒரு குறுகிய பரப்புக்குள் நின்றுவிடலாயிற்று.

5. பொருளாதார நிலை: ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணுமாறு தூண்டிய சுவாமிகள், தனது இயக்கக்களத்தினை குடிசைகள் மத்தியில் அமைத்துக் கொண்டார். இயக்கத்தினை ஒரு நிலையான அமைப்பு வாயிலாக நடத்திட எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லையாத-

லால் பொருளாதார நிலைபற்றி சிந்திக்கவே இல்லை. ஒரு சீர்திருத்த இயக்கம் தனது குறிக்கோளினை எட்டவேண்டு மெனில் மக்கள் ஆதரவு மட்டும் போதாது; நிதி உதவியும் இன்றியமையாததாகும். மக்களின் அன்பையும் ஆதரவையும் எதிர்நோக்கிய சுவாமிகள் இயக்கத்தினை நிலைநிறுத்திடும்முகமாகச் சீடர்களை கொண்டிருந்த-போதிலும், இயக்கப் பணியினை நடத்திட நிதி எதனையும் திரட்டவில்லை. ஆதரவாளர்கள் அவ்வப்போது அன்பாய் அளிக்கும் பொருட்களை கூட சுவாமிகள் தர்மமாய் அளிக்-கவே வகைசெய்தார். மேலும் நிலையான நிதித்தொகை ஏற்படுத்தாமைக்கு மக்களின் ஏழ்மை நிலைகூட ஒரு காரண மாக இருந்திருக்கலாம். எனவே பொருளாதார நிலையில் பூஜியமாகவே விளங்கிய அய்யாவின் இயக்கம் பிற இயக்-கங்கள் போன்று சிறப்பாக நின்று இயக்கப்பணி ஆற்றிட-முடியாமல் போய்விட்டது.

6. சாதிய அமைப்பு: ஆண்டாயிரத்தெட்டில் பெற்ற அன்னையிடம் கூட சொந்த பந்தம் விடுத்து, உலகுய்ய வந்த இரட்சகராகத் தன்னைச்சுவாமிகள் பிரகடனப்படுத் திய போதிலும்-சாதிய உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மகா னாக மாற்றிக்கொண்ட போதிலும் அவரது இயக்கம் சார்ந்-தவர்கள் அவரை குலக் காப்பாளராக– தலைவராகப் போற் றுவதில் பெருமை கொள்ளலாயினர். அகிலம் சிறக்க உப-தேசம் செய்திட்ட சுவாமிகளைப் பொதுவில் கொண்டு செல்ல விரும்பினாலும், சாதியநெறி ஏற்படுத்திய சூழ்நிலை இடம் தரவில்லை. ஏனெனில், இந்தியாவைப் பொறுத்தவரை தலைவர்களும், மகான்களும் தோன்றி நேர்வழி காட்டி-னாலும் பக்குவமடையாத மானிடக்கூட்டம் அவர்களின் சாதி அறிந்து போற்றுவதும், இழித்துரைப்பதும் இயல்பாகும். ‘சாணான்சாமி’ என ஒரு சாரார் பழித்துரைத்த போது, ‘கர்த்தாதிகர்த்தர்’ எனப் பிறிதொரு சாரார் போற்றி

வணங்கி நின்றனர். இதில் கூர்ந்து நோக்கத்தக்கது யாதெனில், எல்லாவித வேறுபாடுகளை– ஏற்றதாழ்வு-களை அகற்றிஒரே இனம் காண தர்மயுகம் நோக்கி சுவாமிகள் நடத்திய அறப்போராட்டம் சாதிபேதம் கற்பிக்கும் சழக்கர் மத்தியில் துரித வளர்ச்சி அடைய முடியாது குறுகிய எல்லைக் குள் சிக்குண்டு மந்த நிலையடைய வேண்டியதாயிற்று.

துணை நூற்கள்

1. ENGLISH:

Abbs, John. *Twenty Two Years' Missionary Experience in Travancore*, London, 1870.

Agur, C.M., *Church History of Travancore*, Madras, 1903.

Annual Reports of the Travancore District Committee in connection with the L.M.S., Nagercoil.

Dubois, Abbs J.A., *Hindu Manners, Customs and Ceremonies*, New Delhi, 1973.

Farquhar, J.A., *Modern Religious Movements in India*, New Delhi, 1977.

Nagam Aiya, V., *The Travancore State Manual, Vols. I and III*, Trivandrum 1900, 1906.

Nataraja Guru, *The Word of the Guru*, Ernakulam,1968.

Pillay, K. K., *The Sucindram Temple*, Madras, 1953.

,, 'The Caste System in Tamilnadu' *Journal of Madras University*, Vol. XLIX, No. 2, Madras, 1977.

Ponnu, R., 'Sri Narayanaswami sect in Tamilnadu' *Q.J.M.S.*, Vol. LXXIV, No. 3, Bengalore, July-Sept. 1983.

,, 'Vaikunda Swami: A Case Study of Socio-religious Awakening in South India', *Journal of Dharma*, Vol. X, No. 2, Bengalore, April-June 1985.

Rajayyan, K., *History of Tamil Nadu*, Madurai, 1982.

Ramasami, E. V., *Social Reform or Social Revolution*, Madras, 1965.

Ravindran, T.K., *Asan and Social Revolution*, Trivandrum, 1972.

Samuel Mateer, *Land of Charity*, London, 1871.

,, *Native Life in Travancore*, Lodon 1883.

Samuel, V. T., *One Caste, One Religion, One God*, New Delhi, 1977.

Silvester Horne, C., *The Story of the L.M.S.*, London, 1908.

Sobhanan, B., *Ramavarma of Travancore*, Calicut, 1978.

Velu Pillai, T.K., *Travancore State Manual Vol. 1*, Trivandrum, 1940.

Yesudas, R.N., *A People's Revolt in Travancore*, Trivandrum, 1975.

2. தமிழ்:

அமலன், என்., வைகுண்ட மகாத்மியம், சாமி-தோப்பு, n.d.

உமைதாணு, சி., காசி உதயம், பொ., பகவான் வைகுண்ட சுவாமிகள் வரலாறு, நாகர்கோவில், 1966.

ஊரன் அடிகள் (பதி.), திரு அருட்பா (இராமலிங்க அடிகள்) வடலூர், 1972.

ஏக்நாத் ரானடே (பதி.), எழுமின் விழிமின், சுவாமி விவேகானந்தர் ஹிந்து ராஷ்டிரத்துக்கு விடுத்த அறைகூவல், கோபாலன், ஆர் (மொ.பெ.), கன்னியாகுமரி, 1983.

சர்வேஸ்வரன், ப. (பதி.), ஓட்டன்கதை, மதுரை, 1982.

சுந்தரம், எம். வி., சாத்திரப் பேய்களும் சாதிக் கதைகளும், சென்னை, 1986.

சுவாமி நாத ஐயர், 2. வே. (பதி.), மணிமேகலை (சீத்தலை சாத்தனார்) சென்னை, 1949.

தருமபுரம் ஆதினம் (பதி.), தேவாரம், IV, V, & IV (திருநாவுக்கரசர்), தருமபுரம், 1957, 1961, 1963

தேசிக விநாயகம் பிள்ளை, C., நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், சென்னை, 1965.

பால் ராமச்சந்திரன் நாடார், த. (பதி.), அகிலத் திரட்டு அம்மானை, சாமிதோப்பு, 1977.

,, அருள் நூல், சாமிதோப்பு, 1979.

பூம்புகார் பிரசுரம் (பதி.), பாரதியார் கவிதைகள், சென்னை, 1982

பொன்னு, இரா., வைகுண்ட சுவாமிகள் வாழ்வும் வழிகாட்டலும், புது-டில்லி, 1983.

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் (பதி.), சிகாகோ சொற்பொழிவுகள், சென்னை, 1985.

ஜேக்கப், ஜாண், A., தென் திருவிதாங்கூர் லண்டன் மிஷனரி சங்க சரித்திரம், 1806—1956. நாகர்கோவில், 1956.

திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
12	அ. கு. 3	மொா. பொா.	மொா. பெ.
17	5	வர்வதென்ன	வரிவதென்ன
25	15	(ஈந்து)	ஈந்து
28	10	புகழ்,	புகழ்
31	16	take-them	take them
32	அ. கு. 2	Sri.	Sri
		New Delhe	New Delhi
51	9	என்னும்	எனினும்
53	20	ஒற்றினை	ஒன்றினை
55	அ. கு. 1	R	A
70	23	தாலமதுக்காலம்	தாலமதுக்காயம்
72	19	குடித்தாலை	குடித்தால்
74	4	தவிறா	தவிரு
	5	அடித்தாய்	அடித்தால்
	8	தினமுனை	கதறியுன்னை
		நிக்தித்ததுண்டால்	சாபமிட்டால்
	11	நிக்தித்தண்டால்	நிந்தித்ததுண்டால்
	12	யோகத்தால்	போகத்தால்
81	5	பெறலாயினர்	பெறலாயின
	8	பிணைக்கப்பட்டன	பிணைக்கப்பட்டனர்
91	11	கொள்ள-	கொள்ள
93	4	உறவுமுறையே	உறவுமுறையை
94	21	காணயாக நின்று	~~வளர்ச்சி~~
	~~22~~	வளர்ச்சி காணலாயன	காணலாயின
102	7	காலத்திற்கொல்லாம்	காலத்திற் கொவ்வா
106	7	Abbs	Abbe
108	4	2. வே.	உ. வே.



இரா. பொன்னு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். *Vaikunda Swamigal and Social Reform in Travancore* என்ற தனது எம். ஃபில் ஆய்வினைத் தழுவி இவர் வெளியிட்டுள்ள ''வைகுண்ட சுவாமிகள் வாழ்வும் வழிகாட்டலும்'' என்ற நூல் சுவாமிகளின் இயக்கம் சார்ந்த முதல் ஆராய்ச்சி நூலாகும். *Journal of Dharma, Quarterly Journal of Mythic Society, Folklore, Bharat Protiva* போன்ற பல்வேறு ஆய்விதழ்களில் இவரது ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

தற்போது இவர் உதகமண்டலம் அரசு கலைக் கல்லூரி வரலாற்றுத் துறையில் பணியாற்றி வருகின்றார்.